பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 ஐப்பசி 03 செவ்வாய்க்கிழமை (19-10-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:329

# பேச்சு மேசைக்கு முன்பதாக மாற்று யோசனை ஏதும் வராது!

## பாலசிங்கத்திடம் லண்டனில் நோர்வேத் தரப்பு எடுத்துரைப்பு

லண்டன்,ஒக்ரோபர்19

**அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நேரடிப் பேச்சு ஆரம்பமாக முன்னர் மாற்று யோசனை ஏதும் இலங்கை அரசுத் தரப்பிடம் இருந்துவராது.**

**அப்படி மாற்று யோசனை ஏதும் வருவதற்கான சாத்தியக்கூறு இல்லை என்று நோர்வே அனுசரணைக்குழுவினர் நேற்று லண்டனில் விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்திடம் நேரடியாகத் தெரிவித்தனர் என அறியவருகிறது.**

நோர்வே அனுசரணைக்குழுவின் அங்கத்தவர்களான எரிக் சொல்ஹெய்ம், கொழும்புக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் ஆகியோரே நேற்று மாலை (இலங்கை நேரப்படி நேற்று முன்னிரவு) லண்டனில் மதியுரைஞர் பாலசிங்கத்தை அவரது இல்லத்தில் இரண்டு மணிநேரம் சந்தித்துப் பேசினர்.

அதற்கு முன்னதாக அவர்கள் இருவரும் பிரிட்டனில் பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சின் உயர்அதிகாரிகளோடு இலங்கை விவகாரம் குறித்துக் கலந்துரையாடினர் எனத் தெரிகிறது.

அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளுக்கு அண்மையில் சென்று, இலங்கை சமாதான முயற்சிகள் குறித்து எரிக் சொல்ஹெய்ம் அந் நாட்டு அதிகாரிகளோடு விரிவாகக் கலந்துரையாடியிருந்தார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## பிந்திய செய்தி: சந்தனமரக் கடத்தல் வீரப்பன் நேற்று பின்னிரவு சுட்டுக்கொலை!



சென்னை,ஒக்.19

தமிழ்நாடு மற்றும் கர்நாடக மாநிலங்களைக் கலக்கிவந்த சந்தனக்கடத்தல் மன்னன் வீரப்பன் நேற்று பின்னிரவு சுட்டுக்கொல்லப்பட்டார் என தமிழகச் செய்தி ஏஜென்சிகள் தகவல் வெளியிட்டன.

தமிழ்நாட்டில் தர்மபுரி மாவட்டத்தில் பாப்பாப்பிட்டி கிராமத்தில் வாகனம் ஒன்றில் வைத்து அவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

தமிழ்நாடு - கர்நாடக மாநில விசேட அதிரடிப படையினர் மேற்கொண்ட கூட்டு நடவடிக்கையில் அவர் கொல்லப்பட்டார்.

தர்மபுரியிலிருந்து 10 கிலோமீற்றர் தூரத்தில் நேற்றிரவு 10.50 மணிக்கு வீரப்பன் பயணஞ்செய்த வாகனத்தை (16ஆம் பக்கம் பார்க்க)

### எதிர்க்கட்சிகளின் நிபந்தனையற்ற ஆதரவைப் பயன்படுத்தி

## பேச்சை ஆரம்பிக்கும்படி இலங்கை அரசை ஐரோப்பிய ஒன்றியம் வற்புறுத்த வேண்டும்

### அந்த அமைப்பின் பிரதி வெளிவிவகார அமைச்சரிடம் தமிழ்ச்செல்வன் வற்புறுத்து

அமைதிப் பேச்சுக்களுக்கும், சமாதான முயற்சிகளுக்கும் தென்னிலங்கையில் பிரதான எதிர்க்கட்சிகள் நிபந்தனையற்ற ஆதரவு வழங்கும் அபூர்வ நிலைமை இப்போது தோன்றியுள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்தித் தாமதமின்றிப் பேச்சை உடன் ஆரம்பித்து முன்னெடுக்கும்படி இலங்கை அரசுக்கு ஐரோப்பிய ஒன்றியமும், சர்வதேச சமூகமும் அதிகளவில் அழுத்தம் கொடுக்க வேண்டும்.

- இவ்வாறு ஐரோப்பிய ஒன்றியத்தைக் கோரியிருக்கின்றார் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதி வெளிவிவகார அமைச்சர் ஹார்வே ஜவோன் ஜின்னை ஒன்றியத்தில் வைத்து தமிழ்ச்செல்வன் சந்தித்தபோது...



தமது இயக்கத்தின் அரசமைப்பு விவகார உயர் குழுவினருடன் மேற்கு நாடுகளுக்குச் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டுவரும் தமிழ்ச்செல்வன் தற்போது பெல்ஜியம் தலைநகர் பிரஸ்ஸலஸில் தங்கியுள்ளார்.

அங்கு நேற்றுக்காலை அவர் ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதி வெளிவிவகார அமைச்சர் ஹார்வே ஜுவான் ஜின்னை, ஐரோப்பிய ஒன்றியச் செயலகத்தில் சந்தித்து விரிவாகக் கலந்துரையாடினார்.

ஈழத்தமிழர்களின் நிலைமையை இந்தச் சந்திப்பின்போது தமிழ்ச்செல்வன் விலாவாரியாக எடுத்து விளக்கினார்.

அவர், நான்கு அம்சங்கள் தொடர்பாக இலங்கை அரசுத்தரப்பு மீது ஐரோப்பிய யூனியன் அழுத்தம் கொடுக்கவேண்

(16ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் இளைஞன் சுட்டுக்கொலை!

மட்டக்களப்பு இருதயபுரம் பகுதியில் கால்கள் சங்கிலியால் கட்டப்பட்ட நிலையில் இளைஞர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

இருதயபுரம் பிரதான வீதியில் நேற்றுக் காலை இவரது சடலம் காணப்பட்டது. சடலத்தின் தலையிலும் மார்பிலும் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்பட்டன. அவை பிஸ்ரலால சுட்டதனால் ஏற்பட்டவை என்று பொலீஸார் கூறினர். சடலத்தின் கால்கள் சங்கிலியால் இறுகப் பிணைக்கப்பட்டு பூட்டுப் போடப்பட்டிருந்தன.

உயிரிழந்தவர் நாவற்காடு கரவெட்டியைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை பாக்கியநாதன் (வயது

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஈ.பி.ஆர் .எல். எவ். கட்சி முழுமையாக சுரேஷ் பிரேமச்சந்திரனின் கைகளில்!

### சட்டச் சிக்கல் நீங்கியது; வரதர் அணி 'அவுட்'!!

ஈழமக்கள் புரட்சிகர முன்னணியின் செயலாளர் நாயகமாக சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்.பியும், அவரின் கீழ் இயங்கும் கட்சியின் மத்திய குழு மற்றும் அரசியல் குழு ஆகியவையும் ஈ.பி.ஆர்.எல்.எவ். சார்பில் இயங்குவதற்கு எதிராக விதிக்கப்பட்ட சகல சட்ட உத்தரவுகளும் விலக்கிக்கொள்ளப்பட்டுவிட்டன.

வரதராஜப்பெருமாள் தலைமையிலான குழுவினர் ஈ.பி.ஆர்.எல்.எவ்விற்கு சட்ட ரீதியாக இனிமேல் உரிமை கோரமுடியாது எனத் தெரியவருகின்றது.

. சுரேஷ் பிரேமச்சந்திரனின் ஏற்பாட்டில் நடைபெற்ற கட்சியின் காங்கிரஸ் கூட்டம் செல்லுபடியற்றதெனவும் -

அந்தக் காங்கிரஸ் கூட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட கட்சியில் புதிய மத்தியகுழு மற்றும் புதிய அரசியல் விவகாரக்குழு என்பவை சட்ட ரீதியாகத் தெரிவுசெய்யப்பட்டவை அல்ல எனவும் உத்தரவிடக்கோரி கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கொன்று தாக்கல்செய்யப்பட்டுள்ளது.

ஈ.பி.ஆர்.எல்.எவ்வைச் சேர்ந்த ஶ்ரீதரன் (சுகு), சுபத்திரன் (தற்போது இறந்துவிட்டார்), துரைரத்தினம், நிவாஸ் நேசராஜா, சிவராஜா (மோகன்) ஆகிய ஐவரின் சார்பில் இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கை விசாரணைக்கு ஏற்றுக்கொண்ட கொழும்பு மாவட்ட நீதிமன்றம், சுரேஷ் பிரேமச்சந்திரன் கட்சியின் பொதுச் செயலாளராகவும், அவர் அழைப்பில் நடைபெற்ற கட்சியின் காங்கிரஸ் கூட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட மத்திய குழு மற்றும் அரசியல் விவகாரக்குழு ஆகியவையும் செயற்படுவதற்கும் தடைவிதித்து இடைக்கால உத்தரவு ஒன்றை வழங்கியிருந்தது.

(16ஆம் பக்கம் பார்க்க)

## இருநாட்டு அதிகாரிகள் இன்று பேச்சை ஆரம்பிப்பர்

கொழும்பு,ஒக்.19

இலங்கை - இந்திய பாதுகாப்பு ஒப்பந்த நகல் தயாரிப்பதற்கான பேச்சுக்கள் இன்று உத்தியோகபூர்வமாகக் கொழும்பில் ஆரம்பமாகவிருக்கின்றன.

இந்திய பாதுகாப்பு மற்றும் வெளிவிவகார அமைச்சுக்களைச் சேர்ந்த மூன்று இணைச் செயலாளர்கள் அங்கம் வகிக்கும் உயர்மட்டக் குழு ஒன்று நேற்றுமுன்தினம் இரவு கொழும்பு வந்துள்ளது.

இந்தியத் தூதர் மற்றும் தூதரக அதிகாரி

(16ஆம் பக்கம் பார்க்க)

## நிமலராஜன் படுகொலைச் சூத்திரதாரிகளை சட்டத்தின் முன் நிறுத்தக்கோரி போராட்டம்!

### அவரது நினைவுநாளான இன்று யாழ்நகரில் ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஒக்.19

ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் கொலைச் சூத்திரதாரிகளைச் சட்டத்தின் முன் நிறுத்தி உரிய தண்டனை வழங்குமாறு கோரியும் -

வடக்கு-கிழக்கு ஊடகவியலாளர்கள் மீதான கொலைகள் மற்றும் அச்சுறுத்தல்களைக் கண்டித்தும் -

அடையாள எதிர்ப்புப் போராட்டம் ஒன்று இன்று நண்பகல் 12 மணிமுதல் ஒரு மணிவரை யாழ். பஸ் நிலையத்தில் இடம்பெறவிருக்கின்றது.

நிமலராஜன் ஞாபகார்த்த அமைப்பு இந்தப் போராட்டத்தை ஏற்பாடு செய்துள்ளது.

போராட்டம் தொடர்பாக அந்த அமைப்பு விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

(16ஆம் பக்கம் பார்க்க)

## மூன்று கோரிக்கைகளை முன்வைத்து

# நாளை முதல் ஹெல உறுமய சத்தியாக்கிரகப் போராட்டம்!

கொழும்பு,ஒக்.19

★ வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் தனித் தனியாக பிரிக்கப்படல் வேண்டும்.

★ நோர்வேயுடனான இராஜதந்திர உறவுகள் கைவிடப்படல் வேண்டும்.

★ காலஞ்சென்ற சோமதேரரின் மறைவு குறித்து உடன் விசாரணை நடத்தப்படல் வேண்டும்.

இந்த மூன்று கோரிக்கைகளையும் முன்வைத்து ஜாதிக ஹெல உறுமயவினர் நாளை முதல் கோட்டை அரசமரத்தடியில் அமர்ந்து சத்தியாக்கிரகம் செய்ய முடிவுசெய்துள்ளனர்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் இந்தப் போராட்டம் குறித்து கருத்துத் தெரிவித்த ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் வண. அத்துரலிய ரத்ன தேரர் இதுபற்றி மேலும் கூறியதாவது:-

நோர்வே நாடு எமது நாட்டை இரண்டாகப் பிரிக்கும் கைங்கரியத்துக்குத் துணை போய்க் கொண்டிருக்கிறது. விடுதலைப் புலிகளின் நோக்கத்தை நிறைவுசெய்வதற்காக அந்நாடு எடுக்கும் முயற்சிகளுக்கு நாம் ஒரு போதும் துணை போக முடியாது. அந்த நாட்டுடன் இருக்கும் சகல இராஜதந்திர உறவுகளும் கைவிடப்படல் வேண்டும் என்பதே ஜாதிக ஹெல உறுமயவின் முதலாவது கோரிக்கையாகும்.

வடக்கு - கிழக்கு மாகாணங்கள் முன்பு இருந்ததைப் போன்று தனித்தனியே பிரிக்கப்படல் வேண்டும். கிழக்கு மாகாணத்தில் வாழும் சிங்கள, முஸ்லிம் மக்களின் அபிலாஷைகளுக்குப் பங்கம் ஏற்படாத வண்ணம் அவர்களின் அரசியல் உரிமைகள் பேணப்படல் வேண்டும்.

ரஷ்யாவில் மரணமான வண. சோமதேரரின் மரணம் குறித்து உரிய விசாரணை நடத்தாமல் அரசு காலம் தாழ்த்தி வருகிறது. எனவே, அவரது மரணம் குறித்து உடனடியாக விசாரணை நடத்தப்படவேண்டும்.

இவையே ஜாதிக ஹெல உறுமயவின் கோரிக்கைகளாகும். இந்தக் கோரிக்கைகளை அரசு நிறைவேற்றாவிட்டால் எந்தச் சந்தர்ப்பத்திலும் அரசுக்கு எமது கட்சி ஆதரவு வழங்காது.

நாளை எமது கோரிக்கைகள் அடங்கிய மகஜர் அரசுக்கு அனுப்பிவைக்கப்படும். அதற்கு முன்னர் கோட்டை ரயிலநிலையத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தவும் நாம் தீர்மானித்துள்ளோம். - என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## கல்வியியற் கல்லூரி மலசலகூட வசதிக்கு நிதி ஒதுக்கீடு கிடைத்தது

யாழ்ப்பாணம்,ஒக்.19

யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில் மேலதிக மலசலகூட வசதிகளை ஏற்படுத்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கல்லூரியின் பீடாதிபதி தி.கமலநாதன் கல்வியியல் கல்லூரிகளின் பிரதம ஆணையாளருடன் கொழும்பில் பேச்சு நடத்தியதன் பயனாக நிதி ஒதுக்கீடு கிடைத்துள்ளது.

இந்த நிதிமூலம் மலசலகூடம் அமைக்கும் பணிகள் உடனடியாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் -

ஒருவாரமளவில் இந்தப் பணிகள் பூர்த்தியடைந்ததும் ஆண் மாணவர்களுக்கான விரிவுரைகள் ஆரம்பிக்கப்படும் என்றும் - பீடாதிபதி தெரிவித்தார். (3)

# தலைநகரில் இன்று 6இடங்களில் அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள்!

கொழும்பு,ஒக்.19

தலைநகர் கொழும்பில் இன்று ஒரே நேரத்தில் ஆறு இடங்களில் அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்துகின்றது ஐக்கியதேசியக் கட்சி.

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, விலைவாசி உயர்வு என்பவற்றைக் கண்டித்து நாடெங்கிலும் நடத்தப்படும் தமது மக்கள் எழுச்சிப் போராட்டம் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசை வீட்டுக்கு அனுப்பும்வரை ஓயாது என ஐக்கியதேசியக் கட்சி சூளுரைத்துள்ளது.

நேற்றுக்காலை எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே இவ்விடயம் பகிரங்கமாக அறிவிக்கப்பட்டது.

ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர்களான ரவி கருணாநாயக்க, காமினி லொக்குகே, பந்துல குணவர்த்தன, திஸ்ஸ அத்தனாயக்க, ஜோன் அமரதுங்க ஆகியோர் ஐக்கிய தேசியக் கட்சி மக்களுடன் இணைந்து நாடெங்கிலும் நடத்தவுள்ள அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டப்பேரணி தொடர்பாக விளக்கம் அளித்தனர்.

இந்த அரசு ஆட்சிக்கு வந்த நேரத்தில் 17 ஆயிரத்து 600 கோடி ரூபாவாக இருந்த வெளிநாட்டுக் கடன் கடந்த ஆறுமாத காலத்தில் 30 ஆயிரம் கோடி ரூபாவாக அதிகரித்து சாதனை படைத்து விட்டது. அதேநேரம் மூன்று வீதமாக இருந்த வாழ்க்கைச்செலவு அதிகரிப்பு இச்சிறு கால இடைவெளிக்குள் 15 வீதமாக அதிகரித்துவிட்டது.

இதனால், அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலைகள் அனைத்தும் பலமடங்கு அதிகரித்துள்ளன. அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலைகள் ஆகாயத்தை எட்டிவிட்டன. இதனால், அதிவிரைவில் இலங்கை ஒரு சோமாலியாவாக மாறிவிடும் என்பதில் சந்தேகமில்லை.

ஆனால், ஜனாதிபதியோ உணவுப்பொருள்களின் விலை 10 சதத்தாலும், 50 சதத்தாலும் மட்டுமே அதிகரித்துள்ளது என்று கூறுகின்றார். ஜனாதிபதிக்கு ரூபாவுக்கும் சதத்திற்கும் வித்தியாசம் தெரியவில்லையோ என்பதுதான் சந்தேகம். ஜனாதிபதி எந்த உலகத்தில் இருந்து பேசுகிறார் என்பதே புரியவில்லை.

நாடும், நாட்டுமக்களும் எதிர்நோக்கும் பேராபத்தில் இருந்து பாதுகாக்கவேண்டியது பொறுப்பான எதிர்க்கட்சியினது கடமை.

நாம் முதன்முதலாகக் கொழும்பில் நடத்திய அரச எதிர்ப்புப் பேரணி மக்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இதே போன்று கொழும்புக்கு வெளியில் நடத்திய பேரணிகளும் பெரும் வெற்றியைத் தந்துள்ளன.

நாட்டுமக்கள் கட்சி பேதங்களை மறந்து அரசுக்கு எதிராகப் போராடத் தயாராகிவிட்டனர். வறுமையை விரட்டி நாட்டு மக்களைக் காப்பாற்ற வேண்டும்.

இதன் அடிப்படையிலேயே இன்று செவ்வாய்க்கிழமை தலைநகரில் கொம்பனித்தெரு, கொச்சிக்கடை, கொள்ளுப்பிட்டி, மருதானை, ஹைட் பார்க்கோணர், தொழில்நுட்பக் கல்லூரிச் சந்தி ஆகிய ஆறு இடங்களில் ஒரே நேரத்தில் ஆர்ப்பாட்டங்களை நடத்துகிறோம். இந்த ஆர்ப்பாட்டங்களில் ஆகக் கூடுதலாகப் பெண்களே கலந்துகொள்வார்கள். இந்த ஆர்ப்பாட்டங்களில வர்த்தக சமூகத்தவர்களும், புத்திஜீவிகளும் பெருமளவில் கலந்துகொள்ளவுள்ளனர்.

அதேவேளை, எதிர்வரும் 21ஆம் திகதி முதல் 31ஆம் திகதிவரை தொடர்ந்து கண்டி, பதுளை, மாத்தறை, காலி, சிலாபம், இரத்தினபுரி ஆகிய பிரதான நகரங்களிலும் அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்தவுள்ளோம்.

எங்களுடைய போராட்டம் இந்த அரசை வீட்டிற்கு அனுப்பும்வரை ஓயாது - என்று ஐ.தே.கவினர் உறுதி தெரிவித்தனர். (க-3)

# உலக சுகாதார அமைப்பின் ஏற்பாட்டில் ஓவியப் போட்டி

யாழ்ப்பாணம்,ஒக்.19

உலக சுகாதார அமைப்பின் இலங்கைக் கிளையின் ஏற்பாட்டில் பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சியும் ஓவியப்போட்டியும் எதிர்வரும் 21ஆம், 22ஆம் திகதிகளில் கொழும்பு பொதுநூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளன.

பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்வு 'அம்மா எனக்கு 21, சமாதானம் எனது பிறப்புரிமை - இதனை உறுதிப்படுத்து' என்னும் கருப்பொருளில் நடைபெறவுள்ளது.

ஓவியப்போட்டியானது '1983 வன்முறைகள் - சமாதானத்தின் தேவைகள்' என்ற விடயத்தை மையமாக வைத்து நடத்தப்படும். இதில் 19 வயதுக்குக் கீழ்ப்பட்ட மாணவர்களும், வலது குறைந்தோரும், அகதிமுகாம்களில் தங்கியுள்ளோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (4-405)

# தனங்களப்பு வெளியில் குப்பைகளை கொட்டுவதற்குப் படைத்தரப்பு அனுமதி

சாவகச்சேரி,ஒக்.19

சாவகச்சேரி நகரம் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் சேரும் கழிவுப் பொருள்களை உயர்பாதுகாப்பு வலயப் பகுதியான தனங்கிளப்பு வெளியில் கொட்டுவதற்கு படைத்தரப்பு அதிகாரிகள் சம்மதம் தெரிவித்துள்ளனர்.

நேற்று சாவகச்சேரி நகரசபை அலுவலகத்திற்கு விஜயம் செய்த தென்மராட்சிப் பிரிவு இராணுவ அதிகாரி மேஜர் குணசிங்க இவ்விடயம் தொடர்பாக சாவகச்சேரி நகரசபை செயலாளர் திருமதி குலமணிதேவி ஆறுமுகத்துடன் உரையாடினார்.

அதனைத் தொடர்ந்து தனங்களப்பு உயர் பாதுகாப்பு வலயப்பகுதியில் குப்பைகளைக் கொட்டுவதற்கு ஏற்ற இடத்தை நகரசபைச் செயலாளர் திருமதி கு.ஆறுமுகம், படை சிவில் அதிகாரி மேஜர் குணசிங்க மற்றும் நகரசபை உத்தியோகத்தர்கள் சிலர் சென்று பார்வையிட்டனர்.

இது விடயம் தொடர்பாகப் படையதிகாரிகளிடமிருந்து உரிய கடிதம் - நகரசபைக்கு இரண்டொரு தினங்களில் அனுப்பிவைக்கப்படும் என்றும் அதன்பின்னர் கழிவுகளை அப்பகுதியில் கொட்டலாம் எனவும் படையதிகாரி தெரிவித்தார்.

தற்பொழுது சாவகச்சேரி நகரசபை சுகாதாரப் பகுதியினரால் சேகரிக்கப்படும் கழிவுப் பொருள்கள் அகற்றுவதில் பெரும் சிரமங்கள் எதிர்கொள்ளப்பட்டுவருகின்றன.

எனவே, தனங்களப்பு வெளியில் குப்பைகளைக் கொட்டுவதற்கு அனுமதிக்குமாறு தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் படையதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்திருந்தார். (4-31)

# 800 ஆடைத்தொழிற்சாலைகளுக்கு மூடுவிழா! நாலரை லட்சம் தொழிலாளர்கள் வீதிக்கு!!

## அபாயச் சங்கு ஊதுகிறார் ரவி கருணாநாயக்க எம்.பி.

கொழும்பு,ஒக்.19

இலங்கையிலிருந்து தயாரிக்கப்பட்ட ஆடைகளை இறக்குமதி செய்துவந்த மேற்கு நாடுகள் இதுவரை வழங்கிவந்த கோட்டா முறையை ரத்துச்செய்துவிட்டன. இதனால் நாலரை லட்சம் பேர் தொழில் இழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. ஏற்கனவே 58ஆடைத் தொழிற்சாலைகள் மூடப்பட்டுவிட்டன. [illegible]விரைவில் 869 ஆடைத் தொழிற்சாலைகள் இழுத்து மூடப்படவுள்ளன. இதனால், இதுவரை கிடைத்துவந்த வெளிநாட்டுச் செலாவணிக்கும் அம்போதான்.

இப்படி அபாயச் சங்கு ஊதுகின்றார் முன்னாள் வர்த்தக, வாணிப, நுகர்வோர் விவகார அமைச்சரும், கம்பஹா மாவட்ட ஐ.தே.கட்சி எம்.பியுமான ரவி கருணாநாயக்க.

நேற்றுக் கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே ரவி கருணாநாயக்க எம்.பி. இந்த விவரங்களை வெளியிட்டார்.

இதுவரை காலமும் அமெரிக்கா, சிங்கப்பூர் மற்றும் ஐரோப்பிய யூனியன் நாடுகள் வருடாந்தம் தயாரிக்கப்பட்ட ஆடைகளை இலங்கையிலிருந்து கோட்டா முறையில் இறக்குமதி செய்து வந்தன. அந்நாடுகள் கோட்டா வழங்கும் முறையை தற்போது ரத்துச்செய்துவிட்டன.

இதேவேளை, இந்தியா, சீனா, இந்தோனேசியா, தாய்லாந்து போன்ற நாடுகளும் ஆடைத் தயாரிப்புத்துறையில் தீவிரமாக இறங்கியுள்ளன. இத்துறையில் பெரும் போட்டி ஏற்பட்டுள்ளது.

இதனால், கோட்டா முறையை ரத்துச்செய்துவிட்டு போட்டிச் சந்தையில் திறமான ஆடைகளை மட்டுமே இறக்குமதி செய்வதென சம்பந்தப்பட்ட நாடுகள் தீர்மானித்துவிட்டன.

அபிவிருத்தியடைந்த நாடுகளுடன் போட்டிபோட்டுக்கொண்டு தரமான ஆடைகளைத் தயாரிக்கக்கூடிய நவீனரக இயந்திரங்களும் தொழில்நுட்பவியலாளர்களும் இங்கு இல்லை.

இதனால், இங்கு விரல்விட்டு எண்ணக்கூடிய சில தொழிற்சாலைகளைத் தவிர ஏனைய தொழிற்சாலைகளை இழுத்து மூடவேண்டிய அபாயம் ஏற்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக அரசோ, நிதியமைச்சோ சம்பந்தப்பட்ட நாடுகளுடன் தொடர்பு கொண்டு இந்தச்சிக்கலைத் தீர்ப்பதற்கான எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இங்கு ஸ்திரமற்ற அரசு, உறுதியில்லாத பொருளாதாரக் கொள்கை. இதனால் உலக நாடுகளும் உதவிகளை வழங்கத் தயங்குகின்றன. இதனால் நமது பொருளாதாரம் அதளபாதாளத்திற்குத் தள்ளப்பட்டுள்ளது. அரசு வரவு - செலவுத்திட்டத்தைக் கூடத் தயாரிக்க முடியாமல் தடுமாறுகின்றது - என்கிறார் ரவி கருணாநாயக்க எம்.பி. (க)

# புதிய பொலீஸ்மா அதிபர் யாழ்ப்பாணம் விஜயம்

## பொலீஸாரின் சேமநலன்கள் குறித்து ஆராய்ந்தார்

யாழ்ப்பாணம்,ஒக்.19

யாழ். மாவட்டத்தில் பணிபுரியும் பொலீஸாரின் சேமநலன்களைப் புதிய பொலீஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ கேட்டறிந்தார்.

யாழ்ப்பாணத்துக்கு ஒரு நாள் விஜயம் மேற்கொண்டு நேற்று வந்து சேர்ந்த பொலீஸ்மா அதிபர் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளையும், பொலீஸாரின் சேமநலன்களுக்குப் பொறுப்பானவர்களையும் சந்தித்துக் கலந்துரையாடினார்.

காங்கேசன்துறையில் உள்ள பொலீஸ் தலைமையகத்தில் நடந்த இச்சந்திப்பில் பொலீஸார் எதிர்நோக்கும் பிரச்சினைகள், இடமாற்றங்கள் தொடர்பாகக் கேட்டறிந்தார்.

பொலீஸார் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண நடவடிக்கை எடுப்பதாகப் பொலீஸ்மா அதிபர் உறுதியளித்தார்.

அதன்பின் பொலீஸ் நிலையங்களுக்குச் சென்று அங்குள்ள நிலைமைகளை ஆராய்ந்த அவர், யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு அதிகாரிகளைச் சந்தித்துக் கலந்துரையாடினார். அதைத் தொடர்ந்து சமய வழிபாடுகளிலும் பங்குபற்றி நேற்றுமாலை கொழும்பு திரும்பினார். (3-5)

# உவர்நீர்த்தடுப்பு அணைகள் புங்குடுதீவில் புனரமைப்பு

ஊர்காவற்றுறை,ஒக்.19

'நியாப்' திட்டத்தின்கீழ் புங்குடுதீவில் உவர்நீர்தடுப்பு அணை புனரமைப்பு செய்யப்பட்டு வருகின்றது. புங்குடுதீவு வடக்கு கரையோரம் அமைந்துள்ள மின்னியன் வாய்க்காலில் இருந்து கன்னியாறு, சோழன் நடை ஊடாகப் பல்லதீவு வரையுமான உவர்நீர்த் தடுப்பு அணை புனரமைப்புச் செய்யப்பட்டு வருகிறது.

34லட்சம் ரூபா செலவில் மேற்கொள்ளப்படும் இவ்வேலைகள் முடிவடையும் தறுவாயிலில் உள்ளன என்று புங்குடுதீவு விவசாய சம்மேளன குழுத் தலைவர் [illegible]ஸ்காந்தன் தெரிவித்தார்.

இந்த [illegible] புனரமைப்பதன் மூலம் மழை நீர் கடலுக்குள் செல்வது தடுக்கலாம். [illegible] கடல்நீர் [illegible]யிலுள் வருவதையும் தடுக்கக் கூடியதாக இருக்கும் இதன்மூலம் இப் [illegible] நன்னீர் உவராகாமல் பாதுகாக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (4-16)

## காரைநகருக்கு புதிய படகுப்பாதை

யாழ்ப்பாணம், ஒக்.19

காரைநகர் - ஊர்காவற்றுறைக்கான புதிய படகுப் பாதை ஒன்று எதிர்வரும் 29 ஆம் திகதி வந்துசேரவுள்ளது.

தற்போது உள்ள படகுப் பாதை சேதமடைந்திருப்பதால் அதற்குப் பதிலாகவே இந்த புதிய படகுப் பாதைச் சேவை கொண்டுவரப்படவுள்ளதாக யாழ்.வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பிரதம பொறியியலாளர் தெரிவித்துள்ளார். (4-6)

# ஈராக் தீவிரவாதிகள் தேவாலயங்களைத் தாக்குவதால் கிறிஸ்தவர்கள் நாட்டை விட்டு வெளியேற விருப்பம்!

## சதாம் ஆட்சியிலிருந்த பாதுகாப்பு இல்லை எனவும் தகவல்

பக்தாத்,ஒக்.19

ஈராக்கில் ஆறு தேவாலயங்கள் மீது தீவிரவாதிகள் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருவதால் அங்குள்ள கிறிஸ்தவர்கள் நாட்டைவிட்டு வெளியேற விருப்பம் தெரிவித்துள்ளனர்.

பிரிட்டனின் ஆக்கிரமிப்பிலிருந்தபோது ஈராக்கில் கணிசமான எண்ணிக்கையில் கிறிஸ்தவர்கள் இருந்தனர். ஈராக் விடுதலை அடைந்த பின்னர் அங்குள்ள கிறிஸ்தவர்கள்மீது பெரிய அளவில் தாக்குதல்கள் நடந்தன. ஈராக் ஆங்கிலேயர்களுக்கு அடிமைப்பட்டிருந்தபோது அங்கிருந்த அசீரியன் கிறிஸ்தவர்கள் பிரிட்டனுக்கு ஆதரவாகச் செயற்பட்டார்கள் எனக் கூறி அவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

கடந்த 1931ஆம் ஆண்டு மொசூல் நகர் அருகே கிறிஸ்தவ கிராமங்களில் ஈராக் படையினர் புகுந்து தாக்குதல் நடத்தியதில் ஏராளமானோர் கொல்லப்பட்டனர். அதன் பின்னர் பெரிய அளவில் கிறிஸ்தவர்கள்மீது தாக்குதல்கள் எதுவும் நடைபெறவில்லை.

ஷியா சுனி மற்றும் குர்திஷ்களிடையே நடைபெறும் சண்டையில் கிறிஸ்தவர்களும் தலையிடுவதில்லை. சதாம் ஹுசைன் ஆட்சிக் காலத்தில் கிறிஸ்தவர்கள் நல்ல நிலையில் இருந்தனர். துணை அதிபர் தாரிக் அஸீஸ் உட்பட ஏராளமான கிறிஸ்தவர்கள் முக்கிய பதவிகளை வகித்து வந்தனர்.

தற்போது ஈராக்கில் 6 லட்சத்து 50 ஆயிரம் கிறிஸ்தவர்கள் வசித்துவருகின்றனர். சதாம் ஆட்சி வீழ்ந்தபின்பு இங்குள்ள தீவிரவாதிகள் கிறிஸ்தவர்கள் மீது ஆங்காங்கே தாக்குதல் நடத்திவருகின்றனர்.

கடந்த ஓகஸ்ட் மாதம் பக்தாத் மற்றும் மொசூல் நகரங்களில் தேவாலயங்களில் நடந்த குண்டுவெடிப்பில் 11பேர் கொல்லப்பட்டனர். சனியன்று பக்தாத்தில் அடுத்தடுத்து ஆறு தேவாலயங்கள் மீது தொடராகக் குண்டுகள் வெடித்தன. அதிர்ஷ்டவசமாக இதில் யாரும் காயமடையவில்லை.

ஈராக்கில் தேவாலயங்களைக் குறிவைத்துத் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தி வருவதால் இங்குள்ள கிறிஸ்தவர்கள் ஈராக்கில் தொடர்ந்து இருக்க விரும்பவில்லை. நாட்டைவிட்டு வெளியேற விரும்புகின்றனர். சதாம் ஆட்சிக் காலத்தில் இருந்த நிம்மதியும், பாதுகாப்பும் இப்போது இல்லை என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து நபில் என்ற கிறிஸ்தவர் கூறுகையில்:-

தீவிரவாதிகள் எதனால் தேவாலயங்களையும், கிறிஸ்தவர்களையும் குறிவைத்துத் தாக்குகின்றனர் என்று தெரியவில்லை. நாங்கள் எப்போதுமே அமைதியே விரும்புகிறோம். நாங்கள் சிறுபான்மையினர். இதுபோன்ற தாக்குதல் தொடர்வதால் நாங்கள் இங்கு தங்கியிருக்க விரும்பவில்லை - என்றார்.

கமில் ஷாபோ என்பவர் கூறுகையில் - நாங்கள் ஈராக்கை விட்டு வெளியே செல்ல விரும்புகிறோம். இங்கு திரும்பிவரமாட்டோம். - என்றார்.

கமினா என்ற கிறிஸ்தவப் பெண் கூறுகையில் - தினம் தினம் தாக்குதல் நடக்கிறது. அபாயத்திற்கு நடுவே வாழ எங்களுக்குப் பிடிக்கவில்லை - என்றார். (க-8)

## வீட்டின் மீது மோதியது சீன செயற்கைக்கோள்

பெய்ஜிங்,ஒக்.19

பூமிக்குத் திரும்பிய சீன செயற்கைக் கோள் நான்கு அடுக்கு கட்டடத்தின் மீது மோதி சிதைந்தது. அதிர்ஷ்டவசமாக இந்த விபத்தில் யாரும் காயமடையவில்லை.

சீன விண்வெளி ஆராய்ச்சி நிலையம் செயற்கைக் கோளை விண்வெளியில் செலுத்தி ஆராய்ச்சிகளை செய்கின்றது. அதன் முடிவுக்குப் பிறகு அந்தச் செயற்கைக்கோளை மீண்டும் பூமிக்குத் திரும்பச் செய்து வருகிறது. இதுவரை 19 செயற்கைக்கோள்கள் புவிவட்டப் பாதையைச் சுற்றிவிட்டு பூமிக்குத் திரும்பியுள்ளன.

புவி அமைப்புக் குறித்த ஆய்வு செய்யும் செயற்கைக்கோளை சீனா கடந்த ஓகஸ்ட் மாதம் விண்ணில் செலுத்தியது. இந்த 20ஆவது செயற்கைக் கோள் கடந்த 15ஆம் திகதி பூமிக்குத் திரும்பியது. ஆனால், துரதிர்ஷ்டவசமாக சிச்சுவான் மாகாணத்தில் பெங்கலாய் பகுதியில் நான்கு அடுக்குமாடிக் குடியிருப்பின் மீது இந்தச் செயற்கைக்கோள் மோதியது. இதனால், அந்தக் கட்டடமும் செயற்கைக்கோளும் சேதமடைந்தன. இருப்பினும், இந்த விபத்தில் யாரும் காயமடையவில்லை எனச் சீன அரசு தெரிவித்துள்ளது. (க-8)

# ஈராக் மீதான படையெடுப்பின் மூலம் பயங்கரவாத அச்சுறுத்தல் நீங்கவில்லை

## ஐ.நா. செயலர் அனான் தெரிவிப்பு

நியூயோர்க்,ஒக்.19

ஈராக் மீதான அமெரிக்கத் தலைமையிலான படையெடுப்பால் சர்வதேச பயங்கரவாதத்தின் அச்சுறுத்தல் நீங்கவில்லை என ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் கோபி அனான் தெரிவித்தார்.

உலகை ஒரு பாதுகாப்பு மிக்க வாழ்விடமாக மாற்ற சர்வதேச சமூகம் அதிகமாக முயல வேண்டும். உலகில் பாதுகாப்பை மேம்படுத்துவதிலேயோ, சர்வதேச பயங்கரவாதிகளின் நடவடிக்கைகளைத் தடுத்துநிறுத்துவதிலேயோ ஈராக் மீது படையெடுத்தது ஒன்றும் பெரிதாக உதவிவிடவில்லை என்றும் அனான் மேலும் தெரிவித்தார்.

பிரிட்டன் தொலைக்காட்சியொன்றுக்கு அளித்த செவ்வியிலேயே அனான் இவ்வாறு கூறினார்.

போருக்கு முன்பாக ஈராக்கிடம் இருந்து எண்ணெய் வர்த்தக ஒப்பந்தங்களைப் பெற்றுக் கொண்டு, அதற்குப் பதிலாக ஈராக் மீதான தடைகளை தளர்த்த பிரான்ஸ், சீனா, ரஷ்யா ஆகிய நாடுகள் தயாராகியிருந்தன என்று அமெரிக்கத் தலைமையிலான ஈராக் ஆய்வுக் குழு வெளியிட்டுள்ள அறிக்கையின் தகவல்களையும் அனான் நிராகரித்தார்.

ஈராக்கின் முன்னாள் அதிபர் சதாம் ஹுசைனினால் இந்த நாடுகளின் கொள்கையை மாற்ற முடிந்திருக்கும் என்பது கற்பனையில் கூட நடக்க முடியாதது என்றும் அனான் தெரிவித்தார். (க-8)

# அமெ. அதிபர் வேட்பாளர் கெரிக்கு 'நியூயோர்க் ரைம்ஸ்' நாளேடு ஆதரவு

நியூயோர்க்,ஒக்.19

அமெரிக்காவின் அடுத்த அதிபர் பதவிக்கு ஜனநாயகக் கட்சியின் சார்பில் போட்டியிடும் செனட்டர் ஜோன் கெரியே தகுதியானவர் என அமெரிக்காவின் மிகப் பெரும் நாளேடான 'த நியூயோர்க் ரைம்ஸ்' பத்திரிகை அங்கீகரித்துப் பிரேரித்திருக்கிறது.

அத்தோடு, நியூயோர்க் ரைம்ஸ் பத்திரிகையின் கருத்தோடு ஏனைய சிறிய பத்திரிகைகளான 'ஓஹியேர்', மின்னெஸூடர்' ஆகியனவும் இணைந்து கருத்து வெளியிட்டுள்ளன.

ஜோன் கெரி ஒரு பரந்த அறிவுடையவர். அத்தோடு, தெளிவான சிந்தனையாளர். இவை அவரை சிறந்ததொரு தலைமை நிர்வாகியாக்கும் என்று 'த நியூயோர்க் ரைம்ஸ்' நாளேட்டின் நீளமான ஆசிரியர் தலையங்கத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இக்கருத்து அமெரிக்க அதிபர் தேர்தல் நடைபெறுவதற்கு 16 நாள்கள் முன்னதாகத் தெரிவிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் ரைம்ஸ் பத்திரிகை தெரிவித்ததாவது:-

அமெரிக்க அதிபர் தேர்தலில் ஜோர்ஜ் வில்லியம் புஷ்ஷை எதிர்த்து ஜனநாயகக் கட்சியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளராக செனட்டரான ஜோன் கெரி அறிவிக்கப்பட்டபோது ஆரம்பத்தில் மக்களிடத்தல் ஓர் அதிருப்தி நிலவியது. ஆனால், காலஞ் செல்லச்செல்ல தற்போது அமெரிக்காவுக்குத் தேவையான ஒரு மாற்றுவழி ஜோன் கெரி அதிபராகுவதே.

ஓர் அதிபராகுவதற்கும் தலைமையை நிர்வாகிக்கும் தேவையானதொரு தகைமை கெரியிடம் இருக்கிறது. அதற்கான பரந்த முன்னேற்றங்கள் அவரிடம் உள்ளன. ஒரு சிறந்த முடிவெடுக்கவும், அம்முடிவை சூழ்நிலைக்கேற்றால்போல் மாற்றியமைக்கவும் கூடிய வகையிலான திறமையும், மனத்தைரியமும் அவரிடம் உண்டு. கெரி பலமான மனத்தைரியம் கொண்டவர் - என்றுள்ளன. (க-8)

# ரஷ்யா நிரந்தர இராணுவத்தளம் அமைக்க தஜகஸ்தான் அனுமதி!

தஜகஸ்தான் தனது நாட்டில் நிரந்தர இராணுவத் தளமொன்றை அமைக்க ரஷ்யாவுக்கு அனுமதி அளித்துள்ளது.

சோவியத் யூனியனிலிருந்து பிரிந்த நாடுகளில் ஒன்றான தஜகஸ்தானில் 1992 -1997 வரை உள்நாட்டுப் போர் நடந்தது. அப்போது அரசுப் படைக்கு உதவ ரஷ்யப் படைகள் சென்றன. அத்தோடு, மத்திய ஆசிய நாடுகளில் அமெரிக்கா ஆதிக்கம் செலுத்துகிறது. எனவே, தனது நிலையைப் பலப்படுத்தவேண்டிய கட்டாயம் ரஷ்யாவுக்கு ஏற்பட்டது.

தஜகஸ்தானில் நிரந்தர இராணுவத் தளம் அமைக்க அந்நாட்டு அரசிடம் ரஷ்யா அனுமதி கேட்டது. பல ஆண்டுகளாக நிலுவையில் இருந்த இந்தக் கோரிக்கையில் ரஷ்யா நேற்று முன்தினம் வெற்றிபெற்றது. தனது நாட்டில் ரஷ்யாவின் நிரந்தர இராணுவத் தளத்தை அமைக்க தஜகஸ்தான் அனுமதியளித்தது.

தஜகஸ்தானில் 7 ஆயிரம் ரஷ்யப் படையினர் நிரந்தரமாகத் தங்கவுள்ளனர். இதன்மூலம் வெளிநாட்டில் அமையும் ரஷ்யாவின் மிகப் பெரிய நிரந்தர இராணுவத் தளம் இதுவாகத்தான் இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டது. (க-8)

உலக அரங்கில்

# காஷ்மீர் மக்கள் மீது பாகிஸ்தான் எந்த முடிவையும் திணிக்காது!

## அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு

இஸ்லாமாபாத்,ஒக்.19

காஷ்மீர் விவகாரத்தில் எடுக்கப்படும் எந்த முடிவும் காஷ்மீர் மக்கள் மீது திணிக்கப்படாது என்று பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் கசூரி தெரிவித்துள்ளார்.

காஷ்மீர் மக்களின் விருப்பத்தின் அடிப்படையிலேயே இந்தப்பிரச்சினைக்கான தீர்வு எட்டப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இது குறித்துப் பாகிஸ்தான் பத்திரிகைகளுக்குக் கசூரி அளித்த பேட்டியில் தெரிவித்ததாவது:-

இந்தியாவும், பாகிஸ்தானும் காஷ்மீர் பிரச்சினையில் தங்களது முடிவை காஷ்மீர் மக்கள் மீது திணிக்காது. இப்பிரச்சினையில் இந்தியா, பாகிஸ்தானைத் தவிர காஷ்மீர்த் தலைவர்களும் ஈடுபடுவது பிரச்சினைக்குத் தீர்வுகாண வெகுவாக உதவும்.

ஸ்ரீநகர் - முசாபராபாத் இடையேயான பஸ் சேவை, கடவுச்சீட்டு விஸா இல்லாமல் நடைபெறவேண்டும் என்பதில் பாகிஸ்தான் உறுதியாகவுள்ளது. இதன் மூலம், இரு நாட்டிலுமுள்ள குடும்பங்கள் மீண்டும்சேர வாய்ப்பாக அமையும். - என்றார் கசூரி. (க-8)

# ஸர்காவி பிடிபட்டார் எனத் தகவல்: அமெரிக்க அதிகாரி அதனை மறுப்பு!

பக்தாத்,ஒக்.19

ஈராக்கில் வெள்ளியன்று இடம்பெற்ற தாக்குதல் ஒன்றில் அபுமுஸாப் அல்-ஸர்காவியும், அவரது ஆதரவாளர்கள் 9 பேரும் பிடிபட்டனர் எனக் குவைத் செய்தி நிறுவனமான 'குனா' செய்தி வெளியிட்டது. இதனை அமெரிக்கா மறுத்துள்ளது.

இச்செய்தியை பக்தாத்திலுள்ள அமெரிக்க இராணுவ அதிகாரி லெப்டினன்ட் கேணல் ஸ்டீவ் பய்லன் மறுத்தார். "இச்செய்தியை நாங்களும் கேள்விப்பட்டோம். அவை உண்மை என நாங்கள் நம்பவில்லை" - என்று அவர் மேலும் தெரிவித்தார்.

பலூஜா நகரில் ரமழான் மாத நோன்பு தினங்கள் என்று பாராது கடுமையான தாக்குதல்கள் நடந்துவருகின்றன. அபுமுஸாப் அல் ஸர்காவியை ஈராக் இடைக்கால அரசிடம் ஒப்படைக்கவேண்டும். இல்லையேல் கடுமையான எதிர்நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனப் பிரதமர் இயட் அல்லாவி தெரிவித்திருந்தார். (க-8)

# ஆப்கான் தேர்தல் முடிவுகளில் கர்சாய் தொடர்ந்து முன்னிலை!

காபூல்,ஒக்.19

ஆப்கானிஸ்தானில் அதிபர் தேர்தலில் வாக்குகள் எண்ணப்பட்டு வரும் நிலையில் இடைக்கால அதிபர் ஹமீத் கர்சாய் ஏனைய வேட்பாளர்களை விடத் தொடர்ந்தும் முன்னணி வகிதது வருகின்றார்.

பதிவான வாக்குகளில் இதுவரை 5 சதவீதமே எண்ணப்பட்டுள்ளன. வியாழக்கிழமை வாக்கு எண்ணிக்கை ஆரம்பமானது. இதுவரை எண்ணப்பட்டதில் 75 சதவீத வாக்குகள் கர்சாய்க்குக் கிடைத்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-8)

# வியட்நாம் நாட்டுக்கு இந்தியா உதவி

ஹனோய்,ஒக்.19

வியட்நாமில் பல்வேறு துறைசார்ந்த கல்வி நிறுவனத்தை அமைக்க உதவப்போவதாக இந்தியா அறிவித்துள்ளது.

கருத்தரங்கு ஒன்றில் ஞாயிற்றுக்கிழமை பேசிய வெளியுறவுத்துறை அமைச்சர் கே.நட்வர்சிங் இதைத் தெரிவித்தார். பொறியியல், தகவல் தொழில்நுட்பம், நிர்வாகம் ஆகிய துறைகள் மற்றும் தற்கால சூழலுக்கு உகந்த தொழில்சார் பாடப்பிரிவுகள் இந்தக் கல்வி நிறுவனத்தில் பயிற்றுவிக்கப்படும் என்றும் நட்வர்சிங் குறிப்பிட்டார். (க-8)

# தமிழகத்தில் பலத்த மழை; இடி தாக்கி 16 பேர் பலி!

இந்தியாவின் தமிழகத்தில் நேற்றுமுன்தினம் பரவலான இடங்களில் இடியுடன் கூடிய மழை பெய்து வருகின்றது. இதில் இடிதாக்கி 16 பேர் உயிரிழந்துள்ளனர்.

சென்னையில் நேற்றுக்காலை வேளையில் பலத்த மழை பெய்தது. இதனால் வெள்ளம் பெருக்கெடுத்தது. நகரின் பல வீதிகளில் வெள்ளம் பரவியது. தாழ்வான பகுதிகளில் வெள்ள நீர் தேங்கியுள்ளது.

பலத்த மழை காரணமாக பவானி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. ஆற்றின் இரண்டு பக்கமும் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது. இதனால் அருகில் உள்ள பிரதேசங்களில் வெள்ளம் ஏற்படும் அபாயம் உள்ளது.

பாதுகாப்புக் கருதி நீர்வீழ்ச்சியில் பொது மக்கள் குளிப்பதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. (க-8)

## நிறுவனத்திற்கு ஆள்சேர்ப்பு

வானில் கொண்டு சென்று விற்பனை செய்யக்கூடிய விற்பனைப் பிரதிநிதிகள் (Sales Rep.), விற்பனை உதவியாளர்கள், தொழிலாளர்கள் உடன்தேவை.

நேரில் எதிர்வரும் 23 ஆம்திகதி சனிக்கிழமை பி.ப. 2 மணிக்கு சுயவிபரத்துடன் வருகைதரவும்.

பணிப்பாளர், HSCMF,
புலவர் வீதி, நவாலி வடக்கு,
மானிப்பாய்
(C/38281)(42) T.P.: 060 2212676.


## மாணவன் பலி!

இடிதாக்கி உயர்தர வகுப்பு மாணவன் ஒருவன் பலியான சம்பவம் ஒன்று ஒட்டிசுட்டானில் இடம்பெற்றுள்ளது. கடந்த 14 ஆம் திகதி இடம்பெற்ற இச்சம்பவத்தில் ஒட்டிசுட்டான் ம.வி. உயர்தர வகுபபு மாணவனான விஜயரட்ணம் சுதர்சன் (வயது 20) என்பவரே பலியானவர் ஆவார். (8-5-341)


## 5ஆவது பிறந்ததின வாழ்த்து



HAPPY BIRTHDAY
மட்டக்களப்பைச் சேர்ந்தவர்களான
திரு.திருமதி சுபதீபன் - சாமினி
தம்பதிகளின்
செல்வப்புதல்வி
செல்வி கிருத்திக்கா

அவர்கள் இன்று (19.10.2004) செவ்வாய்க்கிழமை தனது ஐந்தாவது பிறந்தநாளை கச்சேரி – நல்லூர் வீதியிலுள்ள 131 ஆம் இலக்க இல்லத்தில் வெகு குதூகலமாகக் கொண்டாடுகின்றார்.
செல்வி கிருத்திக்காவை அன்பு அப்பா சுபதீபனும் அன்பு அம்மா சாமினியும் பல்லாண்டுகாலம் நலமுடன் வாழ வேண்டும் என அன்புடன் வாழ்த்துகின்றார்கள்.

131, கச்சேரி - நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம். (37745) (24-34-44-11)
அப்பா:
சுபதீபன்.


ஈரவிழிகளுடன்
## ஈராண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 17 - 11 - 1948
ஆண்டவன் மடியில் 19 - 10 - 2002



அமரர் கலைஞான கேசரி
### சூசைப்பிள்ளை றோக்
(யோகராசா) அண்ணாவியார்

தந்தைக்கு என் செய்வோம்
தங்கள் சிரிப்புக்கு எங்கு செல்வோம்?
தனிமைக்கு துணையறியோம்
தயங்கும் இதயத்திற்கேது சொல்வோம்
தாயும் நாங்களும் கண்ணீர் சொரிகின்றோம்
தாங்குமோ உள்ளமோர் யுகமொன்று மாறினும்
தாலாட்டேயில்லாமல் துயின்று மீளாததேனோ?
இவரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்

மணல்காடு,
குடத்தனை. (37746)(34-11-44)
மனைவி, பிள்ளைகள்,
மருமகன், பேரப்பிள்ளைகள்.


## சின்னஞ்சிறு விளம்பரம்

### வீணை விற்பனைக்கு

பாவித்த, நல்ல நிலையிலுள்ள வீணை விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 128/6, க.சோமநாதன், கீன் ஒழுங்கை, திருநெல்வேலி. (37714)



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

பதவிவெற்றிடம்
காவற் பொறுப்பாளர் (சமையல்)
ஒப்பந்த அடிப்படை

மேற்படி பதவி தொடர்பான எமது 2004.09.29 ஆம் திகதியிடப்பட்ட விளம்பரத்தில் பின்வரும் மேலதிக விவரங்களையும் கருத்திற்கொள்ளவும்.
சம்பளம்: ரூபா 6,440 + பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்ட ஏனைய படிகள் (மாதமொன்றிற்கு நிலையானது)
வயது: 45 வயதிற்கு மேற்பட்டவர்களும் விண்ணப்பிக்கலாம். ஆளும் அதிகாரசபை இறுதித் தீர்மானம் எடுக்கும்.
விண்ணப்பப் படிவங்களை இல.4, மத்திய வீதி, கொழும்பு-12 (EG4, Central Road, Colombo-12) (T.P.No:2435620) எனும் முகவரியில் அமைநதுள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக களஞ்சியத்திலும் (Store) ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்திற்கும் ரூபா 20/- செலுத்தியபின்னர் பெற்றுக் கொள்ளலாம்.

பதிவாளா, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
(சி-38279) 2004.10.15



## இணையத்தளம்

பாடசாலைகள், சங்கங்கள், நிறுவனங்கள், வீற்பனை மையங்களுக்கான இணையத்தளம்
Domain Registration, Hosting, Designing, Maintenance and e-mails
ஒரு வருடத்திற்கான மொத்தக் கட்டணம் ரூபா 8000/= மட்டும்.
SAAMSTECH
841, Hospital Road, Jaffna.
Phone: 0773 068968.
(சி-37842)


### வெண்புறா செயற்கை உறுப்பு தொழில்நுட்ப நிறுவனம் நடத்திய கண்ணிவெடிச் செயற்பாடு தொடர்பான கட்டுரை, சித்திரப்போட்டி முடிவுகள்

**சித்திரம்**
முதலாம் பரிசு - **வ.பாலமுருகன்**
நாமகள் லேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவில்
இரண்டாம் பரிசு - **செ.சிறிலோகநாதன்**
80, பழம் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
மூன்றாம் பரிசு - **செ.ஜெசிபா** - C/o T.முரளிதரன், சில்வர் கொம்பனி லேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
ஆறுதல் பரிசு பெறுவோர் விவரம்
**N.றஜனிகாந்குமார்** - 2 ஆம் வருடம், சித்திரமும் வடிவமைப்பும் நுண்கலைத்துறை, யாழ். பல்கலைக்கழகம்.
**ச.தருமதாஸ்** சித்திரமும் வடிவமைப்பும் நுண்கலைத் துறை, யாழ். பல்கலைக்கழகம்.

**கட்டுரை**
முதலாம் பரிசு **ப.ராஜேஸ்வரன்** - 257, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
இரண்டாம் பரிசு **பொ.சுதாஜினி** - நவஒளி, சங்கரப்பிள்ளை வீதி, ஆனைக்கோட்டை
மூன்றாம் பரிசு **ந.லோஜனவனிதை** - 185/1, கண்டி வீதி, சாவகச்சேரி.
ஆறுதல் பரிசு பெறுவோர் விவரம்
திருமதி **ம.மாலாதேவி** - மங்குனியன் வளவு, அளவெட்டி மத்தி, அளவெட்டி.
திரு.**க.குணரெத்தினம்** - சங்குவேலி தெற்கு, மானிப்பாய்.

பரிசளிப்புத் தொடர்பான மேலதிக விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.
**வெண்புறா செயற்கை உறுப்பு தொழில்நுட்ப நிறுவனம்**
63, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.222 5932 (37744)

## நவாலி தெற்கில் முதியோர் கல்வித்திட்டம் அங்குரார்ப்பணம்

நவாலி தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் முதியோர் கல்வித் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வாரத்தில் 2 நாள்கள் நடைபெற்று வரும் இந்தக் கல்வித் திட்டத்தில் 25 முதியோர் இணைந்து கல்விகற்று வருகின்றனர்.

பன்னிரண்டு வகுப்புகள் முடிவடைந்ததும் இறுதியில் இவர்களுக்கு பரீட்சையொன்று நடத்தப்படும் என்றும் -

பரீட்சையில் சித்திடையந்தவர்களுக்கு 'நொறாட்' நிறுவனத்தின் உதவியுடன் ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும் என்றும் - அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-100)

# மரண அறிவித்தல்கள்

## நாகனாதி கந்தையா (ஆசாரி)

புங்குடுதீவு, 4 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகனாதி கந்தையா காலமாகிவிட்டார்.

அன்னார் சின்னையாவின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற நாகம்மாவின் அன்புக் கணவரும் தனபாலசிங்கம், சிங்கராசா, சாந்தகுமாரி, வசந்தகுமாரி, ஜெயகுமாரி ஆகியோரின் அன்புத் தந்தையும் லீலாதேவி, ராகினி, ஸ்ரீதரன் ஆகியோரின் மாமனாரும் ரஜிகுமார், ராஜ்குமார், ரஜீவன், காலஞ்சென்ற ராஜினி மற்றும் கஜீவன், ஜீகிதா, கம்சிகா, யதூசன், கவிதாஸ், கோபிதாஸ், கீர்த்தனா, கோகுலதாஸ், ரேணுகா, ஹேசிகா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.10.2004) செவ்வாய்க் கிழமை பி.ப. 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கேரதீவு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

4 ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு.
தகவல்:
கந்தையா - தனபாலசிங்கம் (மகன்).
(37748)(34-11-44)

## திருமதி மேரி யோசேப்பின் பேரின்பரெட்ணம் (செல்வமணி)

(ஓய்வுபெற்ற ஆசிரியை, புனித மரியாள் வித்தியாலயம்)



89/2, விபுலானந்தர் வீதி, கொழும்புத்துறையை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி மேரியோசேப்பின் பேரின்பரெட்ணம் 17.10.2004 ஞாயிற்றுக்கிழமை இரவு இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கபிரியேற்பிள்ளை (புறோக்கர்) - மரியம்மா தம்பதிகளின் அன்பு மகளும், திரு.திருமதி நாகலிங்கத்தின் அன்பு மருமகளும், நா.பேரின்பரட்ணத்தின் அன்பு மனைவியும், திருமதி பிறிற்றோ இராசமணி, திருமதி சிவஞானம் சவிரியம்மா, G.S.நீக்கிலஸ் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற திருமதி யே.மேரிபிறின்சி இன்பராணி மற்றும் P.ரெட்ணராஜா, திருமதி ச.வசந்தராணி, காலஞ்சென்ற P.அழகேந்திரன் மற்றும் திருமதி ப.வக்சலா (ஆசிரியை, யா/கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம்), காலஞ்சென்ற P.ஜெயசீலன் மற்றும் P.செல்வகுமார் ஆகியோரின் பாசமிகு தாயாரும், J.யேசுதாசன், திருமதி R.ஜெயராணி, S.சண்முகதேவன் (சுவிஸ்), திருமதி அ.பத்திமா (இந்தியா), J.பற்பநாதர் (லங்கா சிமெந்து லிமிட்டெட்), திருமதி செ.கலையரசி (ஆசிரியை, யா/இணுவில் இந்து மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், யூட்ஸ் நிமால் (கொலண்ட்), ஜோண்ஸ கெனத் (கனடா), நிக்சன் டொறின்ரன் (லண்டன்), ஜொய்ஸ் நியூட்டன் (பிரான்ஸ்), அலெக்ஸ் நிரோசன், யூடித்நிசாந்தன், அலெக்ஸ் சஜீவ், அமலினி, நிரோமி, இந்திராணி (இந்தியா), அன்ரனி (இந்தியா), ராஜ் (இந்தியா), காருண்ணியன், கிருபிகா ஆகியோரின் பேர்த்தியும் அனரன் தனுசன் (கொலன்ட்), செர்மன் (கனடா) ஆகியோரின் பாசமிகு பூட்டியும் அழகம்மா வில்லவராஜாவின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கியைகள் இன்று (19.10.2004) செவ்வாய்க் கிழமை பி.ப. 3.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் புனித அன்னாள் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நலலடக்கத்திற்காக புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக் காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

89/2, விபுலானந்தர் வீதி.
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.
தகவல்:
பிள்ளைகள்.
(37743)(39-34-11-44)

## வயித்திலிங்கம் மார்க்கண்டு

(இளைப்பாறிய இலங்கை வங்கி மேற்பார்வை உத்தியோகத்தர் - செட்டிகுறிச்சி, பண்டத்தரிப்பு)



பண்டத்தரிப்பு, செட்டிகுறிச்சியைச் சேர்ந்த வயித்திலிங்கம் மார்க்கண்டு 17.10.2004 ஞாயிற்றுக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் திரு.திருமதி வயித்திலிங்கம் - நல்லம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும் திரு.திருமதி கந்தையா - சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மருமகனும் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற வரதராஜா (கணக்காளர், கல்வித் திணைக்களம்), சிவஞானம் (இ.போ.ச., இளைப்பாறியவர்), நாகரத்தினம், காலஞ்சென்ற இராமச்சந்திரன் (கணக்காளர்) ஆகியோரின் அருமைச் சகோதரனும் ஏகாம்பரம் (ஓய்வுபெற்ற மாகாண முகாமைத்துவப் பயிற்சி உத்தியோகத்தர் - திருகோணமலை), பாலசுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற கடற்படை அதிகாரி, நியூஸிலண்ட்), பரமானந்தம் (இளைப்பாறிய உத்தியோகத்தர், இ.போ.ச.), பரமேஸ்வரி, மனோகரன் (பொறியியலாளர், கப்பல்துறை), காலஞ்சென்ற திருச்செல்வம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் கந்தசாமி (தொண்டர்), காலஞ்சென்ற தம்பித்துரை, நடராஜா, தெய்வேந்திரம், காலஞ்சென்ற சுப்பிரமணியம் (புறூடி), காலஞ்சென்ற வரதராஜா ஆகியோரின் அருமைச் சம்பந்தியும் மகேசன் (கனடா), மகேந்திரவதனி (வதனா), மனோன்மணி (மனோகரி - கனடா), மகிழேஸ்வரி (டென்மார்க் - மகிழம்), மதிவதனி (கனடா), புஸ்பலதா (கனடா) ஆகியோரின் அருமைத் தந்தையும் தயாபரி, குணத்திலகம் (ஆசிரியர், விக்ரோறியாக் கல்லூரி), இலங்கைநாதன் தவேந்திரன், கருணாகரன், மகேஸ்வரன் (பிரபு) ஆகியோரின் அன்பு மாமனாரும் சயந்தன், சாரங்கன், திவ்யன், காசிபன், அனிந்திகா, பிரணவன், சொறுபிகா, விதுஷா, ஜதுர்ஷன், அபிஷா, சாயிசங்கரி, சத்தியரிஷி, நிரோன், பிரஸீத் ஆகியோரின் ஆருயிர்ப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.10.2004) செவ்வாய்க்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சம்பில்துறை இந்துமயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: மா.மகேசன (மகன்),
த.குணத்திலகம் (மருமகன் ஆசிரியர், விக்ரோறியாக் கல்லூரி)
தொ.இல. 0777 555579.
செட்டிகுறிச்சி,
பண்டத்தரிப்பு. (37740)(34-11-44)


Direct Start
OCTOBER மாதத்திற்கான புதிய கொம்ப்யூட்டர் டிப்ளோமா பிரிவுகள் ஒவ்வொரு வாரமும் ஆரம்பம்

COMPUTER TRAINING COURSES

Diploma in MS Office (DMO)
Diploma in Computer Studies (DCS)
Diploma in Computer Programming (DCP)



Diploma in Desktop Publishing (DTP)
Diploma in Web Design (DWD)
Diploma in Software Engineering (DCSE)

மேலதிக விபரங்களுக்கும், இலவச ஆலோசனைகளுக்கும்
ASIAN COMPUTER SYSTEMS

| | | |
|---|---|---|
| 2 G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். ✆ 021-222 5677 | 108, K.K.S.வீதி, சுன்னாகம் (Jet Motors மேல் மாடி) ✆ 071-2501589 | கொடிகாமம் வீதி நெல்லியடி. (கரவெட்டி தபாலகத்துக்கு முன்பாக) ✆ 0777-878160 |

உதயன்

# மாற்று யோசனை எந்த அடிப்படையில்?

விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்கு வகை செய்யும் விதத்தில் மாற்று யோசனைகள் தயாராக இருக்கின்றன என்கிறார் அரசுப் பேச்சாளரும் அமைச்சரவைப் பேச்சாளருமான அமைச்சர் மங்கள சமரவீர.

ஆனால், அவை மாற்று யோசனைகள் அல்ல. மங்களவின் மாயாஜாலம் என்கிறது பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி.

சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்கு மாற்று ஆலோசனைகள் அவசியமே இல்லை. புலிகளால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை ஆலோசனைகளின்படி, ஒஸ்லோ இணக்கப்பாட்டின் அடிப்படையில், சமாதானப் பேச்சை மீள ஆரம்பிப்பதே புத்திசாலித்தனம் என்றும் அறிவுரை கூறியிருக்கிறது அக்கட்சி.

அமைச்சர் மங்கள சமரவீர தனது கூட்டாளிகளான ஜே.வி.பியினரைத் திருப்திப்படுத்தும் வகையிலேயே மாற்றுயோசனைகள் என்று மாயாஜாலம் காட்டுகின்றார். இது பேச்சுக்களை இழுத்தடிப்பதற்கான ஒரு பம்மாத்து என்றும் ஐ.தே.கட்சி விமர்சனம் செய்திருக் கின்றது.

அமைதிப் பேச்சுக்களை மீளத் தொடங்குவதற்கான விவகாரத்தில் இந்த அரசின் சார்பில் புதிதாக ஒரு மாற்று யோசனை முன்வைக்கப்படுவது அமைதிப் பேச்சு முயற்சியை எப்படிப் பாதிக்கும் என்பதை ஒரு தடவை நோக்குவது நல்லது.

இறுதித் தீர்வுக்கான விடயங்களுக்குள் புகுவதற்கு முன்னர் இடைக்கால ஏற்பாடு குறித்து ஆராய்ந்து முடிவெடுப்பது தவிர்க்கமுடியாதது என்பதைச் சகல தரப்பினருமே ஏற்றுக்கொண்டுள்ளனர். தமிழர் தரப்பு முன்வைத்து வலியுறுத்திவரும் இந்த அம்சத்தை சிங்களவர் தரப்பில் பிரதான கட்சிகளான ஐ.தே.கட்சியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், நிறைவேற்று அதிகார ஜனாதிபதியான சந்திரிகா குமாரதுங்கவும் கூட ஏற்றுக்கொண்டாகிவிட்டது.

இடைக்கால ஏற்பாட்டு அம்சம் எந்த அடிப்படையில் என்பதுதான் கேள்வி. இன்றைய சர்ச்சைக்குக் காரணமே அதுதான்.

சரியோ, பிழையோ முன்னைய ஐ.தே.மு.அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் நடந்த ஆறுசுற்றுச் சமாதானப் பேச்சுக்களில் 2002 டிசெம்பர் முதல் வாரத்தில் ஒஸ்லோவில் நடந்த மூன்றாவது சுற்று சமாதானப் பேச்சுக்களின்போது இரு தரப்பினாலும் ஓர் இணக்கம் காணப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

அதன்படி "உள்ளக சுயநிர்ணய அடிப்படையில், சமஷ்டித் தீர்வின் கீழ், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது குறித்துப் புலிகள் முன்வைத்த யோசனையின் அடிப்படையில் அதற்கான வாய்ப்புக்கள் பற்றிக் கண்டறிய" அரசும் புலிகளும் இணங்கியிருந்தனர்.

இந்த ஒஸ்லோ இணக்கப்பாட்டின் அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பித்து, அமைதி முயற்சிகளை முன்னெடுக்கத் தாம் தயாராக இருக்கிறார் என்று இலங்கை அரசுத் தலைவியான ஜனாதிபதி குமாரதுங்க இரண்டு வாரங்களுக்கு முன்னர், சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான தேசிய ஆலோசனைக் குழுவின் அங்குரார்ப்பணக் கூட்டத்திலும் அறிவித்திருந்தார்.

அதாவது, ஆகக்குறைந்தது உள்ளக சுயநிர்ணய அடிப்படையிலான சமஷ்டி ஏற்பாட்டின் கீழான ஒரு தீர்வுக்கு இரு தரப்பும் கொள்கை அளவில் இணங்கியுள்ளன என்பதுதான் அர்த்தம்; உண்மை; யதார்த்தம்.

அந்தத் தீர்வைக் கண்டுபிடிப்பதற்கு முன்னோடியாக அமையப்போகின்ற இடைக்கால ஏற்பாடு எந்தத் தன்மையுடையதாக இருக்கவேண்டும் என்பதிலேயே இப்போது சர்ச்சை.

இடைக்கால ஏற்பாடு தொடர்பாக முன்னைய ஐ.தே. முன்னணி அரசு மூன்று யோசனைகளை முன்வைத்தது. அவற்றில் முதல் இரண்டையும் விடுதலைப் புலிகள் ஒரேயடியாக நிராகரித்துவிட்டனர். மூன்றாவதை அவர்கள் நிராகரிக்காவிட்டாலும் அது அவர்களுக்கு ஏற்புடையதல்ல என்பது தெளிவு.

இந்த மூன்று யோசனைகளுமே தற்போதைய அரசமைப்புக்கு அமைவாகவும்- ஒற்றையாட்சி முறைக்குக் கட்டுப்பட்டனவாகவும் - தயாரிக்கப்பட்டவை. அதற்கு அப்பால் சற்று முன்னேறி - ஏற்கனவே இணக்கம் காணப்பட்ட சமஷ்டி முறையைக் கவனத்தில் எடுத்து- தயாரிக்கப்பட்டவையல்ல. அதனால்தான் அவை புலிகளுக்கு - தமிழர் தரப்புக்கு - ஏற்புடையவையாக அமையவேயில்லை.

இந்தக் காரணத்தினால்தான், சமஷ்டி சிந்தனையை அடிப்படையாக வைத்துக்கொண்டு தமது இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை வரைபை புலிகள் முன்வைத்தனர்.

இந்த நிலையில் புதிய அரசு - ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசு- தன்பங்குக்கு மற்றொரு யோசனையை மாற்று ஆலோசனை என்ற வடிவத்தில் முன்வைக்கத் தயாராகிறது.

பேரினவாத - சிங்கள, பௌத்த தீவிரவாத- சக்தியான ஜே.வி.பியை அரவணைத்துக் கொண்டுள்ள இந்த அரசு, நிச்சயமாக ஒற்றையாட்சிக்கும், உபயோகப்படாத இந்த அரசமைப்புக்கும் மீறியதாக ஒரு மாற்று யோசனையைத் தரப்போவதில்லை என்பது உறுதி.

இந்தப் பின்னணியில், ஒற்றையாட்சி முறைக்கு உட்பட்ட மாற்று யோசனை அமைதிப் பேச்சுக்கள் மீளத் தொடங்குவதற்கான வாய்ப்பை மேலும் சிக்கலாக்குமே தவிர, இலகுபடுத்தாது என்பது நிச்சயத்திலும் நிச்சயம்.



'அலைபாடும் பரணி' ஒலிப்பேழை அறிமுக விழா நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நெல்லியடி நெல்லை முருகன் மண்டபத்தில் நடைபெற்றது. ஒலிப்பேழையை யாழ். மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் செம்மணன் வெளியிட்டு வைக்க, மாவீரர் றோமின் தந்தையாரான எஸ்.கணபதிப்பிள்ளை பெற்றுக்கொள்வதையும், யாழ். மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவிழி, கடற்புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் அருணன், வடமராட்சி மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் அன்பு, ஆசிரியர் எஸ்.சண்முகன் ஆகியோர் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம். *(படங்கள் : கரவெட்டிச் செய்தியாளர்)*

## 'அலைபாடும் பரணி' ஒலிப்பேழை நெல்லியடியில் வெளியீடு

நிதர்சனம் வெளியீடான 'அலைபாடும் பரணி' ஒலிப்பேழை அறிமுகவிழா நெல்லியடி முருகமூர்த்தி கோவில் திருமண மண்டபத்தில் நேற்றுமுன்தினம் பிற்பகல் 4 மணிக்கு கடற்புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் அருணன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பொதுச் சுடரை வடமராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் இ. தயாவும் தேசியக்கொடியை யாழ். மாவட்ட அரசியல்துறைப் துணைப் பொறுப்பாளர் செம்மணனும் ஏற்றிவைக்க, கரவெட்டி தேசிய எழுச்சிப்பேரவை செயலாளர் சி.தர்மலிங்கம் வரவேற்புரை நிகழ்த்தினார். ஒலிப்பேழையை யாழ். மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் செம்மணன் வெளியிட்டுவைக்க யாழ். மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவிழி வெளியீட்டுரை நிகழ்த்தினார்.

மதிப்பீட்டுரையை பிரபல எழுத்தாளர் ஐ.சண்முகன் நிகழ்த்தினார். (8-70-173)

## 25,000 தொன் அரிசி இறக்குமதி செய்ய அமைச்சு முடிவு!

கொழும்பு,ஒக்.19

அதிகரித்துவரும் அரிசி விலையைக் கட்டுப்படுத்திக் குறைந்த விலையில் அரிசியை விற்பனை செய்வதற்காக 25ஆயிரம் மெற்றிக்தொன் அரிசியை இந்த வாரத்துக்குள் இறக்குமதி செய்வதற்கு வர்த்தக அமைச்சு முடிவு செய்துள்ளது.

கடந்த இரண்டு வாரத்துக்கு முன்னர் இறக்குமதி செய்யப்பட்ட அரிசி கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்திலும், கூட்டுறவுச் சங்கக் கடைகளிலும் விற்கப்பட்டபோதும் ஒருவருக்கு ஐந்து கிலோ அரிசி மட்டுமே வழங்கப்படுகிறது. அதுவும் வரிசையில் பல மணிநேரம் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதெனப் பொது மக்கள் விசனம் தெரிவித்து வருகின்றனர்.

வரிசையில் நின்று அரிசி வாங்கும் ஓர் அவல நிலையில் மக்கள் இருப்பதாக வர்த்தக மற்றும் நுகர்வோர் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளேக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இதனையடுத்து வாடிக்கையாளர்களுக்குத் தேவையான அரிசியை வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யும் முகமாகவே 25 ஆயிரம் மெற்றிக்தொன் அரிசியைத் துரிதமாக இறக்குமதி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. (எ-க)

## வலி.தெற்கு வீதிகளின் நிலைகுறித்து ஆராய கலந்துரையாடலுக்கு ஏற்பாடு

வலிகாமம் தெற்கு,ஒக்.19

வலிகாமம் தெற்கு பிரதேச எல்லைக்குட்பட்ட வீதிகள் எந்த நிறுவனத்தின் பராமரிப்பின் கீழ் உள்ளன என்ற விவரம் சரியாக அறுதியிட்டு தெரியப்படாதிருப்பதால் பல வீதிகள் புனரமைப்புச் செய்யப்படவோ, திருத்த வேலைகள் எதுவும் மேற்கொள்ளப்படாமல் பல காலங்களாக இருந்து வருகின்றன.

இப்பகுதியில் உள்ள சகல வீதிகளையும் இனங்கண்டு அவை எந்த நிறுவனத்தின் பரிபாலனத்துக்குட்படவேண்டும் என்பதை தீர்மானிப்பதற்கு வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் எஸ்.திருவாகரன் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இது தொடர்பான கலந்துரையாடல் கூட்டமொன்றை இம்மாதம் 21ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு அவர் கூட்டியுள்ளார்.

இக்கூட்டத்திற்கு வீதி அபிவிருத்தித் திணைக்கள உத்தியோகத்தர்கள், வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் செயலாளர், வலிகாமம் தெற்கைச் சேர்ந்த சகல கிராம சேவையாளர்களையும் அவர் அழைத்துள்ளார்.

ஒவ்வொரு கிராம சேவையாளர்களும் தமது பகுதிகளில் உள்ள சகல வீதிகளையும் பற்றிய பூரண விவரத்தை தயாரித்துக்கொண்டு வருமாறும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

பல வீதிகளுடைய பெயர்கள் சரிவரத் தெரியாமலும் சில வீதிகள் பல பெயர்களுடனும் விளங்குகின்றன. இந்தக் குழப்பமான நிலையில் உரிய முறைப்படி வீதிகளை அபிவிருத்தி செய்யவோ, பராமரிக்கவோ முடியாமல் உள்ளது என்றும்-

பிரதேச செயலகம், பிரதேசசபை, வீதி அபிவிருத்தித் திணைக்களம் ஆகிய மூன்று நிறுவனங்களுக்கும் கீழ் எந்தெந்த வீதிகள் உள்ளடக்கப்படுகின்றன என்பதை அறுதியிட்டுத் தெரிந்துகொண்டால் அந்தந்த நிறுவனம் தமக்குக் கீழ் உள்ள வீதிகளைப் பராமரிக்கவோ புனரமைக்கவோ இலகுவாக இருக்கும் என்றும் - பிரதேச செயலர் எஸ்.திருவாகரன் தெரிவித்துள்ளார். (எ-152)

## ஜப்பானியத் தூதுவர் அகாஷி இலங்கை வருகின்றார்

கொழும்பு,ஒக்.19

இலங்கையின் சமாதான முயற்சிகளில் முன்னேற்றத்தை ஏற்படுத்துவது தொடர்பாக ஆராய்வதற்காக ஜப்பான் நாட்டின் இலங்கைக்கான விசேட சமாதானத் தூதுவர் யசூசி அகாஷி இலங்கை வரவுள்ளார்.

இம்மாதம் 27ஆம் திகதி கொழும்பு வரும் இவர், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்கள் ஆகியோருடன் சந்திப்புக்களை நிகழ்த்தவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கைப் பயணத்தை முடித்தபின்னர், இந்தியாவிற்குச் செல்லவிருக்கும் அகாஷி, இந்தியத் தலைவர்களைச் சந்தித்து இலங்கையின் சமாதான முயற்சிகள் தொடர்பாகப் பேச்சு நடத்தவுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (8-ரி)

## தம்பாட்டி மாணவரின் அடைவு மட்டத்தை உயர்த்த நடவடிக்கை

ஊர்காவற்றுறை,ஒக்.18

தம்பாட்டி கிராமத்தில் உள்ள மாணவர்களின் கல்வி அடைவு மட்டத்தை அதிகரிக்கும் பொருட்டு தம்பாட்டி பிரான்ஸ் கல்வி வளர்ச்சிக் கழகத்தினால் மாலை வேளைகளில் இலவச மேலதிக வகுப்புகள் நடத்தப்பட்டுவருகின்றன.

இதில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சம்பளம் தம்பாட்டி பிரான்ஸ் கல்வி வளர்ச்சிக் கழகத்தினால் வழங்கப்பட்டு வருகின்றது.

இவற்றுடன் தம்பாட்டி முன்பள்ளி நிலையத்தில் கற்கும் சிறார்களுக்கு போஷாக உணவுகள் மேற்படி கழகத்தினால் வழங்கப்பட்டு வருகின்றது.

இப்பிரதேசத்தில் ஜி.சீ.ஈ உயர்தரம் கற்பதற்கு தகுதியுடைய மாணவர்களுக்கு யாழ். நகரில் உள்ள தனியார் கல்வி நிறுவனங்களில் கற்பதற்கான மாதாந்த கட்டணங்களும் போக்குவரத்துச் செலவும் தமபாட்டி பிரான்ஸ் கல்வி வளர்ச்சிக் கழகத்தினால் வழங்கப்பட்டு வருவதாக அதன் செயலாளர் எஸ்.செல்வராசா தெரிவித்தார். (எ-16)

## காக்கைதீவு வீடுகளைப் புனரமைத்து உரியவர்களிடம் வழங்க ஏற்பாடு

நவாலி,ஒக்.19

கல்லுண்டாய், காக்கைதீவு குடியேற்றத்திட்ட வீடுகள் விரைவில் புனரமைக்கப்பட்டு மீண்டும் உரியவர்களிடம் கையளிக்கப்படவுள்ளது.

கடந்தகால இராணுவ நடவடிக்கைகளின்போது இந்தக் குடியேற்றத் திட்டத்திலுள்ள வீடுகள் பலத்த சேதமடைந்திருந்தன. அத்துடன் குறித்த வீடுகளில் எஞ்சியிருந்த பொருள்களும் திருடப்பட்டிருந்தன.

கடந்த வாரம் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் ஆ.சுப்பிரமணியம், ஆனைக்கோட்டை கிராம சேவையாளர் ச.சந்திரராசா ஆகியோர் நேரில் சென்று இவற்றைப் பார்வையிட்டனர். அப்போது சில இடங்களில் கண்ணிவெடி புதைக்கப்பட்டிருப்பது தெரியவந்தது.

இதனைத் தொடர்ந்து பிரதேச செயலினால் கண்ணிவெடிகளை அகற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கண்ணிவெடிகள் அகற்றப்பட்டதும் வீடுகள் திருத்தியமைக்கப்பட்டு உரியவர்களிடம் கையளிக்கப்படும் என பிரதேச செயலர் தெரிவித்துள்ளார். (எ-100)

### நாளை

ஐப்பசி 04
புதன்கிழமை
(20.10.2004)
திதி: சப்தமி
முன்னிரவு 7.18 வரை
நட்சத்திரம் : பூராடம்
முன்னிரவு 6.19 வரை
சுபநேரம் : 04.32 - 06.02
ராகுகாலம் : 12.02 - 01.32
(பழைய நேரப்படி)

## வாய்க்கால்கள் மூடப்பட்ட நிலையில் நவாலி வீதிகளில் வெள்ளம் தேக்கம்

நவாலி,ஒக்.19

நவாலி கலையரசு வீதியிலுள்ள வெள்ளம் ஓடும் வாய்க்கால்கள் மூடப்பட்டுள்ளதால் வெள்ளம் ஓட முடியாமல் வீதிகளிலும் வீடுகளிலும் தேங்கி நிற்கும் அபாயநிலை தோன்றியுள்ளது.

மழை காலத்தில் நவாலி சென்.பீற்றர்ஸ் வீதி, முருகமூர்த்தி வீதி, பிரசாத் வீதி, வட்டுக்கோட்டை வீதி ஆகிய இடங்களிலிருந்து ஓடும் மழை வெள்ளம் ஒன்று சேர்ந்து கலையரசு வீதியூடாக வயலுக்கு செல்லுவது வழக்கம்.

தற்போது இந்த வாய்க்கால்கள் மூடப்பட்டு வீதியாக்கப்பட்டுள்ளதுடன் சிலர் மதில்களையும் கட்டியுள்ளனர்.

இதனால், தொடர்ந்து மழைபெய்யும் சமயத்தில் வெள்ளம் பல இடங்களிலும் தேங்கி நின்று பல அனர்த்தங்களை ஏற்படுத்தலாம் என மக்கள் அஞ்சுகின்றனர்.

இது விடயத்தில் பிரதேச சபையும் விவசாய சம்மேளனங்களும் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர்கள் எதிர்பார்கின்றனர். (எ-100)

### உதயவாக்கு

உனது சுகத்துக்காக நீ பிறரைத் திருத்த முயல்வது அயோக்கியத்தனம்.

# சுன்னாகம் பஸ்நிலையத்தில் மினிபஸ் தரிக்க இடம் ஒதுக்கீடு

வலி.தெற்கு,ஒக்.19

சுன்னாகம் மத்திய பஸ் நிலையத்தில் தனியார் போக்கு வரத்து பஸ்களும், ஓட்டோக்களும் தரித்து நிற்பதற்கும், பொதுமக்களை ஏற்றி இறக்குவதற்குமென இடம் ஒதுக்கிக் கொடுக்கப்பட்டுள்ளது.

பஸ் நிலையத்தின் தெற்குக் கரையோரமாக ஓட்டோக் கள் தரித்து நிற்பதற்கும், கிழக்குப் பகுதியில் சிற்றூர்திகள் பயணிகளை ஏற்றி இறக்குவதற்கும் என இடம் ஒதுக்கிக் கொடுக்கப்பட்டுள்ளது.

மத்திய பஸ்நிலையத்தில் ஓட்டோக்களும், சற்றூர்தி களும் கண்டபடி ஓடித்திரிவதால் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பஸ்சேவையை நாடி நிற்கும் பயணிகளுக்கு பெரும் இடையூறாக அமைவதாக சுன்னாகம் பிரதேசசபைச் செயல ருக்குச் சுட்டிக்காட்டி, முறைப்பாடு செய்ததைத் தொடர்ந்து பிரதேச சபைச்செயலர் மேற்கண்ட ஒழுங்கைச் செய்து கொடுத துள்ளார்.

பிரதேச சபையின் இந்த ஒழுங்கு முறைகளை மீறும் ஓட்டோ மற்றும் சிற்றூர்தி சாரதிகள மீது உரிய சட்ட நட வடிக்கை எடுப்பதற்காக இந்த ஒழுங்குமுறை பற்றி சுன்னாகம் பொலீஸாருக்கு தெரியப்படுத்தவேண்டும் என்றும் -

ஊர்திகள் தரித்து நிற்கும் இடத்தில் அவற்றுக்கான அறி விப்பு பலகைகள் இடப்படவேணடும் என்றும் - வலிகாமம் தெற்த பிரதேச செயலர் எஸ்.திருவாகரன், பிரதேசசபைச் செயல ருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார். (எ-152)

## விவசாய வாய்க்கால் புனரமைப்பு

நவாலி,ஒக்.19

ஆயிரம் குளங்கள் புனரமைப்புத் திட்டத் தின்கீழ் நவாலி தெற்குப் பகுதியிலுள்ள 'ஆம் பல்' குளமும் அதனுடன் இணைந்த விவசாய வாய்க்கால்களும் நவாலி விவசாய சம்மேள னத்தினால் புனரமைக்கப்பட்டு வருகின்றன. (எ-100)

## ஆன்மீகச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம்,ஒக்.19

இந்துசமய விவகார அலுவல்கள் திணைக் கள யாழ்.மாவட்ட அலுவலகம் நடத்தும் ஆன் மீகச் சொற்பொழிவு எதிர்வரும் 22ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணியளவில் நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்றிலில் அமைந் துள்ள நாவலர் மணிமண்டபத்தில் இடம்பெறவுள் ளது.

நிகழ்வில், 'பாரதி கண்ட சக்தி தத்துவம்' என்னும் தலைப்பில் யாழ்.சென்.ஜோன்ஸ் கல் லூரி உயர்தர வகுப்பு மாணவன் சி.சசீவன் சிறப் புச் சொற்பொழிவாற்றுவார். (எ-202-203)

## சிமெந்து அறிமுகவிழா

யாழ்ப்பாணம்,ஒக்.19

'கொல்சிம் லங்கா' நிறுவனத்தினரால் உற் பத்தி செய்யப்படும் 'கொல்சிம்' சிமெந்தினை அறிமுகப்படுத்தும் விழாவும், சந்தைப்படுத்தல் கருத்தரங்கும் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் யாழ் வீரசிங்கம் மண்ட பத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக 'கொல்சிம்' சிமெந்து நிறுவனப் பொறியியலா ளர் ஜெனில்ஸ் தயானந்தன் கலந்துகொள்வார்.

அறிமுகவுரையை 'கொல்சிம்' சிமெந்து விற் பனை அதிகாரி இரத்தினராஜா விஜயகுமார் நிகழ்த்துவார். (8-ரி)

## பல்கலைப் பட்டதாரிகளுக்கு தனியார் துறையில் வேலை பெற்றுக்கொடுக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஒக்.19

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 2004 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதிக்குப் பின்னர் பட்டப்படிப்பினை நிறைவுசெய்து வேலை வாய்ப்பு இன்றி இருப்பவர்களுக்குத் தனியார் துறைகளில் வேலைவாய்ப்பினைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பான விண்ணப்பப்படிவங்களை 'தருண அருண நிறுவனம், தபாற்பெட்டி இல. 2107, ரொஸ்மிட் பிளேஸ், கொழும்பு - 07' என் னும் முகவரியுடன் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளலாம் என்றும் -

மேலதிக விவரங்களினைப் பெறவிரும்பு வோர், 'இயக்குநர், தொழில் வழிகாட்டி அலு வலகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்" என்ற முகவரியுடன் தொடர்புகொள்ளலாம் என்றும் - பல்கலைக்கழகத் துணைவேந்தர் அறிவித் துள்ளார். (எ-203)

## எயிட்ஸ் விழிப்புணர்வு கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஒக்.19

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தால், யுனிசெவ் நிறுவனத்தின் அனுசரணையுடன் நடத்தப்பட்டு வரும் 'எயிட்ஸ்' விழிப்புணர்வு தொடர்பான கருத்தரங்கு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை புங்கன்குளம், அரி யாலை சனசமூக நிலையக் கட்டடத்தில் நடை பெற்றது.

இக்கருத்தரங்கில் அகதிகள் புனர்வாழ்வு நிறு வனத்தின் களநிலை உத்தியோகத்தர்களான பி.வாசுதேவன், எஸ்.சிவசங்கர், ஆர்.ஜெயக்குமார ஆகியோர் கலந்துகொண்டு 'எயிட்ஸ்' தொடர் பான கருத்துகளை வழங்கினர்.

இநநிகழ்வில் பல இளைஞர்கள், யுவதிகள கலந்து பயன்பெற்றனர். (8-ரி)


**SHAKTHI HOME SCIENCE ACADEMY**
**டிப்ளோமா பயிற்சி வகுப்புகள்**

* பெயின்ரிங் (அடிப்படை பெயின்ரிங் கிளாஸ் சாறிபெயின்ரிங்)
* நிற்றிங்
* ஐசிங் (வொண்டன் ஐசிங், சுகர்பிளவர், கேக் ஐசிங்)
* முத்துவேலை

மிகவிரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

திரு.றெஜசொலமன்
143, பிரதான வீதி,
(Catholic Pressமுன்பாக),
யாழ்ப்பாணம்.

செ.ஜீவனா
359/8, கம்பன் கோட்டமுன் ஒழுங்கை,
கோயில் வீதி,
நல்லூர். (37722)(42-19-16)

**பழைய பத்திரிகை விற்பனைக்கு**

எம்மிடம் பழைய பத்திரிகை
விற்பனைக்கு உண்டு.
மொத்தமாகப் பெற்றுக்கொள்பவர்களுக்கு
விசேட கழிவு வழங்கப்படும்.

தொடர்பு:- விளம்பர இல. 2405
C/o. உதயன்
யாழ்ப்பாணம். (சி38261)(33-19-42-16)


**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



யாழ்.மானிப்பாய் சோதிவேம்படி
வித்தியாலய மாணவன்
**செல்வன் முருகலிங்கம் விநோஜன்**
2004 ஆம் ஆண்டு 5ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் 128 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்தமையையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம். அவரை வழிநடத்திய அதிபர், ஆசிரியர்கள் அனைவரையும் மனமுவந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

4ஆம் கட்டை,
ஆனைக்கோட்டை. (37733)(42) - நாகராஜா குடும்பத்தினர்.

**இருபதாவது பிறந்த நாளில்**



அழியா நினைவுகள்
தாயின் மடியில்
19.10.1984
கடலின் அடியில்
08.02.2004

செல்வன்
**மங்களராஜன் யாதவன்**

இருபது வயது இளமை நினைவுகளிலும் கருகுது
எமது நெஞ்சம் யாதவா – உன்னை
நினைக்கையிலே நிதம் நெஞ்சுவேகுதடா

சாவகச்சேரி (37734) நண்பன்

**யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி**
**உள்ளக விளையாட்டுக் கழகம்**
மக்கள் வங்கி வடவலயத்தின் அனுசரணையுடன்
கலாநிதி D.T.நைல்ஸ் ஞாபகார்த்தமாகநடத்தும்
**5 ஆவது உள்ளக விளையாட்டுப் போட்டிகள்**

1) BADMINTON 2) TABLE TENNIS
3) CARROM 4) CHESS

*பிரிவுகள் (ஆண்கள்/பெண்கள்)*

1) 10 வயதின் கீழ் 1995 ஆம் ஆண்டின் பின் பிறந்தவர்கள்
2) 12 வயதின் கீழ் 1993/94 ஆம் ஆண்டுகளில் பிறந்தவர்கள்
3) 14 வயதின் கீழ் 1991/92 ஆம் ஆண்டுகளில் பிறந்தவர்கள்
4) 16 வயதின் கீழ் 1989/90 ஆம் ஆண்டுகளில் பிறந்தவர்கள்
5) 18 வயதின் கீழ் 1987/88 ஆம் ஆண்டுகளில் பிறந்தவர்கள்
6) திறந்த அடிப்படை வயதுக் கட்டுப்பாடு இல்லை.

விண்ணப்ப முடிவு திகதி: 31.10.2004 பி.ப. 4 மணி
வீரர் ஒழுங்கு தெரிவு: 02.11.2004 பி.ப. 3 மணி
போட்டிகள் ஆரம்பம்: 05.11.2004

(34-42-16-19) திரு.க.இராசதுரை, அதிபர். V.S.மகேந்திரன், விளையாட்டு முதல்வர். ஜெ.மோகன், உள்ளக விளையாட்டு முதல்வர். (37729)

யா/தாவடி இந்து தமிழ்க்கலவன் பாடசாலை மாணவியின் திறமையை
**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



எமது பாடசாலையில் தரம் 9 இல் கல்விகற்கும்
**செல்வி வாணி சண்முகவடிவேலு**
என்ற மாணவி தேசிய இடர் முகாமை நிலை சமூக நலன்புரி அமைச்சினால் அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட தமிழ்மொழி மூல கட்டுரைப் போட்டியில் கனிஷ்டபிரிவில் முதலாம் இடம்பெற்று, பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் 13.10.2004 இல் இலங்கைப் பிரதமர் அவர்களிடமிருந்து பரிசு பெற்றார். இவரை மனதார வாழ்த்துகின்றோம்.

(37732)(42-16-19) அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

**வாழ்த்திப் பாராட்டுகின்றோம்**



வவுனியா சித்த மருத்துவ மாவட்ட
வைத்தியசாலை பொறுப்பதிகாரி
**டாக்டர் நா.வர்ணகுலேந்திரன்**
அவர்கள் சுதேச மருத்துவ அரசாங்க
சேவையில் அதிஉயர்தரமாகிய
சித்தமருத்துவ நிபுணராக பதவி
உயர்த்தப்பட்டதை வாழ்த்திப்
பாராட்டுகின்றோம்.

வைத்திய உத்தியோகத்தர்கள்,
சித்த மருத்துவ மாவட்ட வைத்தியசாலை,
வவுனியா. (37724)(42-16-19)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

யா/இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலய
2004 தரம் 5புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற செல்விகள்
சு.சுவேதிகா (139),
வி.சர்மினி (132) ஆகியோரையும்
இவர்களைக் கற்பித்தவரும், ஆசிரியதின தமிழ் மொழி அறிவுப்போட்டியில் வலிகாமம் வலயத்தில் முதன்மை பெற்றவர்களில் ஒருவருமாகிய எமது ஆசிரியர் திரு. த.தயானந்தன் அவர்களையும்
ஆசிரிய தினத்தில் வலிகாமம் கல்வி வலயத்தால் சிறந்த அதிபராகப் பாராட்டப்பெற்ற அதிபர் திரு.அ.பேரம்பலம் அவர்களையும்
இன்னும் பல உயர்வுகள் பெற வாழ்த்துகின்றோம்.

(37726)(42-16-19) பாடசாலைச் சமூகம்.

**சேவைநலன் பாராட்டு**



பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தில் உதவி அரசாங்க அதிபராக 6 ஆண்டுகளுக்கு மேல் கடமையாற்றி கிளிநொச்சி மாவட்ட செயலகத்திற்கு உதவித் திட்டமிடல் பணிப்பாளராக இடமாற்றம் பெற்றுச்சென்ற
உயர்திரு. **சு.புத்திசிகாமணி** அவர்கள்
பச்சிலைப்பள்ளி மக்களுக்கும் பளைக்கோட்டப் பாடசாலைகளுக்கும் ஆற்றிய அளப்பரிய சேவையை மனம் மகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம். அவர் பணிசிறக்க எல்லாம் வல்ல ஆண்டவரைப் பிரார்த்திக்கின்றோம்.

கோட்டக்கல்வி அதிகாரி,
அதிபர்கள், ஆசிரியர்கள்,
வேம்பொடுகேணி பாடசாலை
பெற்றோர்களும்,
இத்தாவில் மக்களும்.

*கோட்டக்கல்வி அலுவலகம்,*
*பளை.* (37735)(42)


யாழ். பல்கலைக்கழக
விஞ்ஞான பீடம்
30 ஆம் ஆண்டு நிறைவு

மாபெரும்



விஞ்ஞானக்
கண்காட்சி

ஒக்ரோபர்
26ஆம் திகதி முதல்
30ஆம் திகதி வரை

ஊடக அனுசரணை
உதயன்
அனுசரணை
SAAMSTECH

# உணவுப் பற்றாக்குறையைப் போக்க குரக்கன் பயிரிடுவோம்

உலகில சுமார் 35 நாடுகளிலுள்ள மக்கள் உணவுப் பற்றாக்குறையினால் கஷ்டப்படுவதாக உலக உணவு விவசாய நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

ஒவ்வொரு நாடுகளிலும் நிலவும் சுற்றாடல் பாதிப்புகள், பருவகாலங்கள் தவறுவதால் உருவாகும் காலநிலை மாற்றங்களின் பாதிப்புகள், உள்நாட்டில் உருவாகும் குழப்பங்கள், மோதல்கள் என்பனவே உணவுப் பற்றாக்குறை ஏற்படுவதற்கான சில முக்கியமான காரணங்கள் என்றும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

அந்த நிறுவனம் எமது நாட்டையும் கடுமையான உணவுப் பற்றாக்குறைக்கு உட்பட்டுள்ள நாடொன்றாகவே கணித்துள்ளது.

இந்த ஆண்டின் ஆரம்பத்தில் இலங்கையில் காணப்பட்ட வரட்சி காரணமாக நாட்டின் நெல் உற்பத்தி 18 வீதமாகக் குறைந்துபோயுள்ளது என்பதையும் அது சுட்டிக்காட்டியுள்ளது.

பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் கடுமையான உணவுத் தட்டுப்பாடு காரணமாகப் பாதிப்படையவுள்ள நிலையை நாட்டில் உருவாகியுள்ள அரிசித் தட்டுப்பாடு, அரசி விலை குதிரை விலைக்குப் போயுள்ள நிலை என்பனவும் அண்மையில் விதைப்பதற்குக்கூட தரமான விதை நெல் அற்றுப்போயுள்ள நிலையும் உள்ளங்கை நெல்லிக்கனி போல் எடுத்துக் காட்டியுள்ளன. இந்த நிலையிலும்கூட உணவுப் பற்றாக்குறையை நிவர்த்திசெய்யக்கூடிய அவசர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாதிருப்பது கவலைக்குரியதாகும்.

அரசுதான் அக்கறையின்றி இருந்தாலும், பாரம்பரிய விவசாயப் பெருமக்கள்கூட அசட்டையாக இருப்பதுதான் கவலைக்குரியதாகும். எமது பாரம்பரிய விவசாய உணவு வகைகள் ஒளிந்துகொண்டு விட்டனவா? வற்றாளை, மரவள்ளி, வள்ளிக்கிழங்கு, இராசவள்ளி போன்ற கிழங்கு வகைகளும் பஞ்சம் போக்கிகள் எனப்படும் உழுந்து, பயறு, சோளம், கௌபி, குரக்கன் போன்ற எமது பரம்பரை உணவுத் தானியங்களும் பயிர்செய்யப்படுவது இக்கால கட்டத்தைப் பொறுத்தவரையில் இன்றியமையாததாகும். முக்கியமாக இந்த மழை காலத்திற்கேற்ற உப உணவுத் தானியமொன்றை விதைப்பது புத்திசாலித்தனமாகும். குரக்கன் எமது உணவுப் பற்றாக்குறையை ஈடுசெய்ய வல்ல சத்துமிக்க, சிக்கனமான உணவுத் தானியமாகும்.




இந்த ஒக்ரோபர் மாதம் குரக்கன் செய்கைக்கு மிக உகந்த காலமாகும். சேனைப் பயிர்ச் செய்கைக்கு இக்காலகட்டம் உகந்தது. சேனைப் பயிர்ச்செய்கையாக இதை விதைக்கும்போது ஒரே சீரான இடைவெளியில் விதைகள் விழும் வகையில் விசுறுவது நல்ல பலனைத் தரும். விசிறிய பின்னர் நிலத்தைச் சாற வேண்டும். ஒரே குழியில் ஒன்றுக்கு மேற்பட்ட பயிர்கள் முளைத்திருந்தால் அவற்றைப் பிடுங்கி இடைவெளி விட்டு நடுதல் வேண்டும்.

இதற்குச் சிபார்சு செய்யப்பட்டுள்ள 'எம்.ஐ. 301, எம்.ஐ. 302' மற்றும் 'ரவி' இனங்களைப் பயன்படுத்தினால் நல்ல பலனைப் பெறலாம். இந்த 'ரவி' இனம் மூலம் நல்ல பலன்பெற வேண்டுமாயின் மூன்று மாதங்கள் பொறுத்திருக்க வேண்டும். ஒரு ஹெக்டேயர் நிலத்துக்கு 8 கிலோ குரக்கன் தேவைப்படும். மேடையில் முளை கட்டி வளர்ந்த பின் நடுவதானால் 3 முதல் 4 கிலோ குரக்கன் போதுமானது.

குரக்கன் செய்கையின்போது 45 நாள்கள் வரையில் புல், பூண்டுகள் இல்லாது பராமரிப்பது மிக முக்கியமானதாகும். நட்டு மூன்று வாரங்களின் பின்னர் மேற்கட்டு உரப்பிரயோகம் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

குரக்கன் செய்கையில் பெருமளவில் நோய்த தாக்கங்களும் கிருமித் தாக்கங்களும் இல்லாதபோதும், இலை அழுகல் நோய் பெரும் பாதிப்பை ஏற்படுத்தவல்லது. குரக்கனுக்கு இரசாயன உரமிடும் முறையையும் நோய்க்கட்டுப்பாட்டு முறைகளையும் விவசாய விரிவாக்க உத்தியோகத்தர்கள் மூலம் தெரிந்துகொள்ள முடியும். அறுவடையின்போது நன்குமுற்றிய கதிர்களை நெல் அரிவாள் கொண்டு அறுத்து எடுக்கலாம். முறையான பயிர்ச்செய்கையின் மூலம் ஒரு ஹெக்டேயர் நிலத்திலிருந்து 2,500 - 3,000 கிலோ வரையான குரக்கனைப் பெற முடியும். மேலும், குரக்கன் பயிரின் அடிக்கற்றைகள் கால்நடைகளுக்கு நல்ல உணவாகவும் பயன்படும்.

**தொகுப்பு: சரா**

குரக்கன் செய்கையை மேற்கொள்வதன் மூலம் எதிர்காலத்தில் உருவாகக்கூடிய உணவுப் பற்றாக்குறையை நிவர்த்திசெய்யக்கூடியதாக இருப்பதோடு மாத்திரமல்ல, நல்ல சுத்தமான உணவாகவும், திடகாத்திரமான உடலையும் பெறலாம். முக்கியமாக நீரிழிவு நோய் உட்பட சில நோய்களையும் தவிர்த்துக்கொள்ளலாம். அதைவிட நல்ல வருவாயையும் குரக்கன செய்கை மூலம் நாம் பெற்றுக்கொள்ளமுடியும். ✦

# வீட்டில் அன்றாடம் சேரும் கழிவுப்பொருள்களை பயன்மிக்க பசளையாக மாற்றலாம்

எமது இல்லங்களில் இருந்து வெளியேற்றப்படும் கழிவுப் பொருள்களைப் பயன்மிக்க பசளையாக உருமாற்றுவதற்கு இந்தக் 'கொம்போஸ்ட் பீப்பாய்' சிறந்த சாதனமாகும்.

சிறுதொகைப் பணத்தைக் கொண்டு இதை வாங்கிக்கொள்ளலாம். உக்கிப்போகும் கழிவுகளை உரமாக மாற்றுவதன்மூலம் அவற்றை எமது வீட்டுத்தோட்டத்தில் வளரும் பழமரங்கள், மரக்கறிப் பயிர்கள் மற்றும் பூந்தோட்டங்களுக்குப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

அதன்மூலம் இரசாயன உரவகைகளுக்குச் செலவுசெய்யும் எமது பணமும் மீதமாகுமல்லவா?

எமது வீட்டின் விவசாய நிலத்தில் வளரும் பயிர்களில் இருந்து கிடைக்கும் மரக்கறி வகைகள், பழவகைகள் எமது உடல் நலத்துக்கும், எமது மகிழ்ச்சிக்கும் உரியனவாக மாறும். அத்தோடு, எமது தேசிய உற்பத்திக்கும் நாம் உறுதுணை புரிந்தவர்களாகக் கருதப்படுவோம். சிலவேளைகளில் அது ஒரு புது வியாபாரத்தைக்கூட உருவாக்கித்தரக்கூடும்.


இந்தச் செயற்பாட்டினால் இல்லங்களில், நிலத்தில் மற்றும் வீதியோரங்களில் குவியும் கழிவுகள் மூலம் உருவாகும் சுற்றாடல் பாதிப்புகள் மறைந்துவிடும். எமது இல்லங்களைச் சூழவுள்ள மண்ணில் இந்த 'கொம்போஸ்' பசளை மூலம் நுண்ணுயிர்களால் ஏற்படுத்தப்படும் மாற்றங்கள் காரணமாகக் கண்கவர் பசுமையைப் பார்த்துமகிழும் வாய்ப்பும் எமக்குக் கிடைக்கும்.

**தொகுப்பு: ராதிகா**

வீட்டினுள்ளேயே கழிவுகள் மீழுருப்பெற்றுப் பசளையாக மாறுவதன் மூலம் டெங்கு போன்ற நோய்களை அழித்துத் தேசிய சுகாதாரத்துக்குப் பங்களிப்புச் செய்யும் நற்பணியும இடம்பெறுகிறது. அப்பணி எமது ஊருக்கும் பிரதேசத்துக்கும் பரவி டெங்கு ஒழிப்புக்குச் செலவாகும் தேசிய நிதியும் அபிவிருத்திப் பணிகளுக்குப் போய்ச்சேரும்.

இநதக் கழிவுகள் உருமாறி எமக்குக் கிடைக்கும் 'கொம்போஸ்ட்' பசளையைக் கையாண்டு வீட்டுக்குத் தேவையான பயிர் வகைகளைப் பயிர்செய்துகொள்வது பற்றியும் மேலதிக விவரங்களை எமது பிரதேசத்தில் உள்ள விவசாய விரிவாக்க நிலையங்கள் மூலம் நாம் பெற்றுக்கொள்ளலாம்.

அண்மையில் மத்திய சுற்றாடல் அதிகார சபை மூலம் விநியோகிக்கப்பட்டுவரும் 'கொம்போஸ்ட்' பசளை உற்பத்திசெய்யும் 'பிளாஸ்றிக் பீப்பா'யின் படமே இங்கு தரப்பட்டுள்ளது. உற்பத்திச் செலவை மாத்திரம் அடக்கியுள்ள இதை ஆயிரத்து 350 ரூபா செலுத்தி மத்திய சுற்றாடல் அதிகாரசபையிடமிருந்து நாம் கொள்முதல் செய்யமுடியும். அல்லது உள்ளூராட்சி நிறுவனங்களோடு தொடர்புகொண்டும் பெற்றுக்கொள்ளலாம். எமது யாழ். குடாநாட்டிலுள்ள தொழில்நுட்ப வல்லுநர்கள் நாளையே இது போன்ற ஒன்றை உற்பத்தி செய்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ✳



**யாழ். மாவட்டத்தில்**

# உப்பு போதியளவு கையிருப்பில் இருப்பதாக சமாசம் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.19

யாழ். மாவட்டத்தில் பயன்பாட்டுக்குத் தேவையான அளவு உப்பு கையிருப்பில் உள்ளதென யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் ப. கனகலிங்கம் அறிவித்துள்ளார்.

குடாநாட்டு மக்களுக்குத் தேவையான அளவு உப்பு, ஆனையிறவு உற்பத்திப் பேட்டையிலிருந்து தருவிக்கப்பட்டு யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கச் சமாசத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டு, பின்னர் அவ்வப் பகுதிப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

பாவனையாளர்களும், வர்த்தகர்களும் கூட்டுறவுச் சங்கங்களின் மொத்த நிலையங்களிலும் கிளை நிலையங்களிலும் உப்பினைப் பெற்றுக்கொள்ளலாம் - என்று அவர் அறிவித்துள்ளார். (எ-202)




கொழும்புத்துறை புனிதசவேரியார் குருத்துவக் கல்லூரியில் நடைபெற்ற மு.சிங்கராயர் எழுதிய 'மடு அன்னை பிள்ளைத்தமிழ்' என்ற நூல் வெளியீட்டு விழாவின்போது அருட்திரு ம.போல் நட்சத்திரம் ஆசியுரை நிகழ்த்துவதைப் படத்தில் காணலாம்.

நிகழ்வுக்குத் தலைமை வகித்த அருட்கலாநிதி எஸ்.வி.பி.மங்களராஜா முதன்மை விருந்தினரான யாழ். பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன், நூலாசிரியர் ஆகியோரும் மேடையில் உள்ளனர். (எ)

# வவுனியா வைத்திசாலைக் களஞ்சியத்தில் இடநெருக்கடி நிலவுவதாக முறைப்பாடு

குருநகர்,ஒக்.19

வவுனியா அரசினர் வைத்தியசாலையில் அமைந்துள்ள மருந்துக் களஞ்சியத்தில் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளதனால் இங்கு மருந்துகளைக் களஞ்சியப்படுத்துவதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாக இங்கு கடமைபுரியும் மருந்தாளர்கள் மூலம் தெரியவந்துள்ளது.

வவுனியா சுகாதாரப் பிரிவில் அமைந்துள்ள சகல பிரிவு வைத்தியசாலைகளுக்கும் தேவையான மருந்து வகைகள், இந்த மருந்துக் களஞ்சியத்திலேயே களஞ்சியப்படுத்தப்பட்டு விநியோகிக்கப்படுகின்றன.

வவுனியா பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகம் தனியாக இயங்கி வருகின்றபோதிலும் அங்கு மருந்துகள் களஞ்சியப்படுத்தப்படுவதில்லை.

வவுனியா மருந்துக் களஞ்சியம் மிகவும் பழமைவாய்ந்த கட்டடத்தில் இயங்கிவருவதனால் கறையான்கள் மருந்துப் பெட்டிகளை அரித்து உட்புகுந்துவிடுகின்றன எனவும் வவுனியா அரசினர் வைத்தியசாலையின் மருந்தாளர் தெரிவித்தார்.

அத்துடன், வவுனியா அரசினர் வைத்தியசாலையில் ஆளணிப் பற்றாக்குறை நிலவிவருவதாகவும், சுமார் 600 பேர் தேவையாகவுள்ள போதிலும் சுமார் 300 பேரே அங்கு கடமை புரிந்து வருவதாகவும் - வவுனியா அரசினர் வைத்தியசாலையின் நிர்வாக உத்தியோகத்தர் தெரிவித்தார். (எ-51)

# நாடு பிளவுபடுவதைத் தடுப்பதே எனது நோக்கம்

## எதிர்க்கட்சித் தலைவர் கூறுகிறார்

கொழும்பு,ஒக்.19

நாடு பிளவுபடுவதைத் தடுத்து நிறுத்துவதே எனது குறிக்கோள்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க.

பண்டாரகமவில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொணடு உரையாற்றுகையிலேயே எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

இந்த நாட்டிலுள்ள பெருபான்மை மக்கள் நாடு பிளவுபடுவதைத் தடுத்து நிறுத்துவதையே நோக்காகக்கொண்டுள்ளனர்.

நாடு மிகவும் நெருக்கடியான சூழ்நிலையில் இருந்தபோது யுத்தநிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. தீர்வொன்றினை எட்டுவதற்கு முன்னர் சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்புப் பெறப்படவேண்டும். நாட்டின் எல்லை ஒருமைப்பாட்டைப் பாதுகாத்துத் தென்பகுதியிலும் வடபகுதியிலும் ஜனநாயகத்தையும் மனித உரிமைகளையும் பேணிக்கொண்டு முன்னோக்கிச் செல்லவேண்டும்.

இலங்கையில் ஒரேயொரு பிரச்சினைதான் இருக்கின்றது. அதற்குத் தீர்வுகாணச் சகலரும் ஐக்கியப்படவேண்டும்.

நாட்டைப் பொருளாதார ரீதியாக முன்னேற்றுவதற்கு நிலையான பொருளாதாரக் கொள்கையொன்று அவசியம்.

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார். (ஐ-13)

# ஜி.சீ.ஈ. (சாதாரண தர) மாதிரிப் பரீட்சை - 2004

# சைவசமயம் I

உதயன் ஜி.சீ.ஈ. (சா)தரம் மாதிரிப் பரீட்சைகள் இல. 11

ஒரு மணித்தியாலம்

ஆக்கம்:சி.மஞ்சுளா

## பகுதி I

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

1. 'மூத்தநாயனார்' என அழைக்கப்படும் கடவுள்
1. பிரமா   2. விநாயகர்   3. விஷ்ணு   4. முருகன்

2. சிவனே முழுமுதற் கடவுள் என்பதை உணர்த்தும் மூர்த்தம்
1. வைரவ மூர்த்தம்   2. தட்சிணா மூர்த்தம்
3. இலிங்கோற்பவ மூர்த்தம்   4. நடராஜ மூர்த்தம்

3. சிந்துவெளிக்காலம்
1. கி.பி.3250 - கி.பி.2750   2. கி.மு.2750 - கி.மு.3250
3. கி.மு.3750 - கி.மு.2250   4. கி.மு.3250 - கி.மு.2750

4. இருக்கு வேதத்தில் காணப்படாத யசுர்வேதத்தில் காணப்பட்ட ஒரு வழிபாட்டுமுறை
1. சூரிய வழிபாடு   2. நாக வழிபாடு
3. தரைத்தெய்வ வழிபாடு   4. சிவ வழிபாடு

5. 'இராஜராஜேஸ்வர மகாதேவன் கோயில்' என அழைக்கப்படுவது
1. திருக்கேதீச்சரம்   2. திருக்கோணேச்சரம்
3. முன்னேச்சரம்   4. நகுலேச்சரம்

6. "பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல் போற்றி" இங்கு புகலியர் கோன் எனப்படுபவர்
1. மணிவாசகர்   2. திருநாவுக்கரசர்   3. திருஞானசம்பந்தர்   4. சுந்தரர்

7. பஞ்சதோத்திர ஒழுங்குமுறையுள் நான்காவதாக அமைவது
1. பெரியபுராணம்   2. திருப்பல்லாண்டு
3. திருவிசைப்பா   4. திருவாசகம்

8. வாழ்க்கையின் நான்கு நிலைகளும்
1. சரியை, கிரியை, யோகம், ஞானம்
2. அறம், பொருள். இன்பம்,வீடு
3. தனு, கரணம், புவனம், போகம்
4. பிரமச்சரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சன்னியாசம்

9. 'சங்கரன்' என்பதன் பொருள்
1. சங்காரம் செய்பவன்   2. விருப்பு வெறுப்பு அற்றவர்
3. சுகம் செய்பவர்   4. செம்மையானவர்.

10. திருக்கார்த்திகை மாபெரும் சமூகவிழாவாகக் கொண்டாடப்படுவது
1. திருவெண்ணாமலை   2. சிதம்பரம்   3. திருக்கோலக்கா   4. திருச்செந்தூர்

11. 'சிவத்தொண்டர்' மாத இதழைத் தொடக்கியவர்
1. கடையிற்சுவாமிகள்   2. யோகர்சுவாமிகள்
3. செல்லப்பாசுவாமிகள்   4. விவேகானந்தர்

12. குரு மாணவனுக்குக் கூறும் அறிவுரைகள் அடங்கிய உபநிடதம்
1. கடஉபநிடதம்   2. தைத்திரீய உபநிடதம்
3. சுவேதாஸ்வதர உபநிடதம்   4. சாந்தோக்கிய உபநிடதம்

13. சமய குரவர்களுள் சகமார்க்கத்தைப் பின்பற்றி வாழ்ந்தவர்
1. அப்பர்   2. சம்பந்தர்   3. சுந்தரர்   4. மணிவாசகர்.

14. அபரக்கிரியையில் அந்தணர்களுக்குச் செய்கின்ற தானம்
1. ஏகோதிட்டம்   2. சபிண்டீகரணம்   3.சிரார்த்தம்   4. மாசியம்

15. சிவஞான போதத்திற்கு வழிநூலாக அமைவது
1. உண்மை விளக்கம்   2. திருவருட்பயன்
3. சிவஞானசித்தியார்   4. திருக்களிற்றுப்படியார்

16. ஆடிச்சுவாதித் திருநாளை குருபூசைத் தினமாகக் கொண்டவர்
1. அப்பர்   2. சம்பந்தர்   3. சுந்தரர்   4. மணிவாசகர்

17. பணிவு, இன்சொல் பேசுதல் என்பன
1. ஒருவரின் பலவீனத்தின் அறிகுறி
2. ஒருவர் வாழ்க்கையில் ஏமாளியாகத் துணைபுரியும்
3. ஒருவர் வாழ்க்கையில் உயர்நிலை எய்த ஏதுவாகும்
4. சைவப்பெரியார்கள் வற்புறுத்துவதால் பின்பற்ற வேண்டியது

18. இயற்கையாக அமைந்த விபூதி மலையைக் கொண்ட தலம்
1. திருக்கோணேச்சரம்   2. வல்லிபுர ஆழ்வார் ஆலயம்
3. கதிர்காமம்   4. முன்னேச்சரம்

19. "தொண்டர் குலமே தொழுதகு குலம்" என்பதை வலியுறுத்தும் நூல்
1. கந்தபுராணம்   2. பெரியபுராணம்
3. திருவிளையாடற்புராணம்   4. சிவபுராணம்

20. ஆலயத்திலுள்ள கொடிமரத்தைப் பற்றியுள்ள சீலை குறிப்பது
1. திருவருள்   2. பதி   3. பாசம்   4. பசு

21. சாந்தமும் அமைதியும் நிறைந்த குணம்
1.தாமதகுணம்   2.சாத்வீக குணம்   3.இராசத குணம்   4 நிர்க்குணம்

22. மாத்தளை முத்துமாரி அம்மன் தேர்த்திருவிழா நடைபெறும் தினம்
1. பங்குனி உத்தரம் 2. ஆடிப்பூரம் 3. தைப்பூசம் 4. மாசிமகம்.

23. 'உள்ளது இல்லதாகாது, இல்லது உள்ளதாகாது' எனும் கொள்கை
1. மாயாவாதம்   2. ஏகான்மவாதம்
3. சற்காரியவாதம்   4. உலகாயுதம்

24. இறைவனுக்கு 108 பெயர் சொல்லிச் செய்யும் அர்ச்சனை
1. சகஸ்ரநாமம்   2. அஸ்டோத்திரநாமம்
3. சதருத்திரியம்   4. ஸ்ரீருத்திரம்

25. தீபாவளி தினத்தன்று நடத்தப்பெறுவது
1. சூரசங்காரம்   2. இயமசங்காரம்
3. நரகாசுரசங்காரம்   4. கயமுகாசுரசங்காரம்

26. 'சங்கடஹர சதுர்த்தி' எனப்படுவது
1. வளர்பிறைச் சதுர்த்தி   2. தேய்பிறைச் சதுர்த்தி
3. ஆவணி சதுர்த்தி   4. விநாயகர் சஷ்டி

27. 'சதசத்து' என அழைக்கப்படுவது
1. பதி   2. ஆன்மா   3. ஆணவம்   4. மலங்கள்

28. திருமுறைப்பாடல்களுள் இடம்பெறும் ஒரு பெண்ணடியார்
1. ஆண்டாள் 2. திலகவதியார்   3. காரைக்காலம்மையார்   4. சாரதாதேவி

29. பிரளயாகலர் என்போர்
1 ஆணவம், கன்மம், மாயை   2. ஆணவம், மாயை
3. கன்மம், மாயை   4. ஆணவம், கன்மம்.

30. திருவைந்தெழுத்தைச் சீடனின் செவியில் ஓதலாகிய தீட்சை
1. நயனதீட்சை   2. வாசகதீட்சை
3. பரிச தீட்சை   4. சாத்திரதீட்சை

31. இறைவன் அன்பே தாமாகி வெளிப்பட்டு நின்று அருள்செய்வது
1. சரியையாளருக்கு   2. கிரியையாளருக்கு
3. யோகிகளுக்கு   4. ஞானிகளுக்கு

32. பராபரக் கண்ணி பாடியவர்
1. குமரகுருபரர்   2. தாயுமானவர்
3. அபிராமிப்பட்டர்   4. அருணகிரிநாதர்

33. நாவலர் பெருமானது முதற்பிரசங்கம்
1. வண்ணை சிவன் கோயிலில்   2. பொன்னம்பலவானேச்சரம்
3. மாவிட்டபுரம்   4. முன்னேச்சரம்

35. சைவசமய மக்களின் பிரதான பண்பு
1. துறவு மேற்கொள்ளல்   2. சிவவழிபாடு புரிதல்
3. பசித்து வருவோர்க்கு உணவளித்தல்   4. கோயில் கட்டுதல்

36. சைவசமயப் பண்பாட்டில் அழகியல் உணர்வை வெளிப்படுத்துவதாக அமைவது
1. ஓவியக் கலை   2. நாட்டியக் கலை
3. சிற்பக் கலை   4. கோலக்கலை

37. இறைவனைப் பல்லாண்டு வாழப் பாடியவர்
1. சேக்கிழார்   2. சேந்தனார்
3. திருமூலர்   4. கபிலதேவர்

38. சைவ சித்தாந்தத்தில் சாத்திர நூலாகவும் தோத்திர நூலாகவும் விளங்குவது
1. திருக்குறள்   2. திருவருட்பயன்
3. திருமந்திரம்   4. பெரியபுராணம்

39. ஆலயங்களில் சூரியன் உதிக்கும் முன் நடைபெறும் பூசை
1. உஷாக்காலப் பூசை   2. காலைச்சந்திப் பூசை
3. உச்சிக்காலப் பூசை   4. சாயரட்டைப் பூசை

40. 1897ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15 ஆம் நாள் இலங்கைக்கு வருகை தந்தவர்
1. சுவாமி சிவானந்தர்   2. சுவாமி தயானந்தா
3. சுவாமி விவேகானந்தர்   4. ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர்.

## பகுதி II

### இரண்டு மணித்தியாலம்

**எட்டாம் வினா உட்பட எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.**

01. "சைவத்தின் தொன்மையை விளக்குவது சிந்துவெளிக் காலம்"
1. சிந்துவெளியில் நிகழ்த்தப்பட்ட ஆராய்ச்சிகளைத் துணைகொண்டு அங்கு சிவ வழிபாடு நிலவியதற்கான ஆதாரங்களை விளக்குக.
2. நால்வேதங்களும் கொண்டுள்ள நால்வகைப் பகுதிகளும் எவை?
3. வேதம் பொது நூலாகவும், ஆகமம் சிறப்பு நூலாகவும் அழைக்க்ப்படக் காரணம் என்ன? வேத ஆகமங்களுக்கு இடையிலான ஒற்றுமைகள் எவை?
4. "இறைவன் ஒருவனே" என்பதை எவ்வாறு ஆதாரங்காட்டி விளக கலாம்.

02. "சமய குரவர்கள் சிவ்நெறியை வாழ்நாள் பூராவும் கடைப்பிடித்து வாழும் நல்வின்ன வாய்க்கப்பெற்றவர்கள்"
1. திருஞானசம்பந்தர் சிவசக்தியினால் ஆட்கொள்ளப்பட்ட சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக?
2. திருஞானசம்பந்தரும், நாவுக்கரசரும் இணைந்து ஆற்றிய பணிகள் எவை?
3. நாயன்மார்களது வாழ்க்கை வரலாற்றிலிருந்து நாம் பெற்றுக்கொள்ளும் படிப்பினைகள் எவை?
4. அடங்கன் முறை தவிர்ந்த திருமுறைப்பாடல்களை வகைப்படுத்துக.

03. "தொண்டர் நாடொறுந் துதிசெய வருள் செய் கேதீச்சர மதுதானே"
1. திருக்கேதீச்சரம், கோணேச்சரம் மீது தேவாரப் பதிகம் பாடிய நாயன்மார்கள் யாவர்? எங்கிருந்து பாடினர்?
2. பத்தோற்சவம் சிறப்பாக நடைபெறும் ஆலயம் எது? அவ்விழா பற்றி சுருக்கமாகத் தருக?
3. இலங்கையின் வடபகுதியில் அமைந்துள்ள ஈச்சரம் முன்னர் எப்பெயரால் அழைக் கப்பட்டது.
4. பொன்னம்பலவாணேச்சர ஆலயத்தின் சிறப்புகள் எவை?

04. அந்தக எழுகென அமலநாயகன்
முந்தருள் புரிதலும் முடிந்த கூற்றுவன்
வந்தனன் தொழுதனன் வணங்கித் தாள்பட
உயர்ந்தனன் அடியனென் றுணர்ந்து போற்றினான் - கந்தபுராணம் -
1. பின்வரும் சொற்கள் யார் யாரைக் குறிக்கின்றது.
அந்தகன், அமலநாயகன், மால், அயன்
2. மார்க்கண்டேயர், இயமன் பாசத்தில் வீழாதிருக்க என்ன செய்தார்?
3. மார்க்கண்டேயர் படலத்ினூடாக உணர்த்தப்படும் மனிதவிழுமியங்கள் எவை?
4. கந்தபுராணம் பாடியவர் யார்? யாரால் எவ்வாறு அடியெடுத்துக் கொடுக்கப்பட்டது?

05. "மனஅடக்கம், புலனடக்கம் என்பவற்றை மேம்படுத்தலை பிரதான நோக்காகக் கொண்டது விரதம்"
1. விரதம் என்பதற்கு நாவலர் கூறும் வரைவிலக்கணம் யாது?
2. விரதங்களை எவ்வாறு பாகுபடுத்தலாம்?
3. சித்திரை மாதத்தில் புத்தாண்டைச் கொண்டாடுவதற்கான காரணங்களாக எவற்றைக் கூறலாம்?
4. பண்டிகைகள், விரதங்கள் என்பவற்றுக்கு இடையிலான முக்கிய வேறுபாடுகளை எடுத்துக்காட்டுக?

06. "எங்கும் எவையும் எரியுறுநீர் போலேகந்
தங்குமவன் தானே தனி" - திருவருட்பயன் -
1. திருவருட்பயன் எனும் நூலின் ஆசிரியர் யார்? அந்நூல் பற்றி நீர் யாது அறிவீர்?
2. பதிமுதுநிலை எனும் அதிகாரத்தில் கூறப்படும் பதியின் சிறப்பியல்புகள் எவை?
3. மூலமலம் எனக் குறிப்பிடப்படுவது எது?
4. சைவசித்தாந்தம் கூறும் அதன் பண்புகளைக் குறிப்பிடுக.

07. "தேரடியில் தேசிகனைக் கண்டு தெரிசித்தேன்
தீரடா பற்றென்றான் சிரித்து" - நற்சிந்தனை -
1. ஈழத்து, தமிழ்நாட்டு ஞானிகளை வகைப்படுத்துக?
2. யோகர்சுவாமிகளுக்கு மகாவாக்கியங்களாக அமைந்த வாசகங்களைக் குறிப்பிடுக?
3. சங்கமம் என்றால் என்ன? சிவனடியார்களின் இயல்புகள் எவை?
4. சந்தானகுரவர்கள் யாவர்?

08.
1. பின்வரும் பாடல்களுள் இரண்டினை எழுத்துப்பிழைகளின்றி வரிக்கிரமமாக எழுதுக.
2. அவற்றைப் பாடியோர் யார் என்பதையும் அவை எச்சந்தர்ப்பத்தில் பாடப்பட்டது என்றும் கூறுக.
3. அவற்றின் பொழிப்புரையையும் எழுதுக.

அ. "பண்டு நால்வருக்........."
ஆ. "கரியகறைக் கண்டன் ந(ல்)ல........"
இ. "மெய்தான் அரும்பி.........."
ஈ. "செங்கணா போற்றி............".
உ. "திருக்கோயில் இல்லாத..........."

★

# ஜி.சீ.ஈ (சாதாரண தர) மாதிரிப் பரீட்சை - 2004

# வணிகக்கல்வியும் கணக்கீடும் I

ஒரு மணித்தியாலம்

உதயன் ஜி.சீ.ஈ.(சா)தரம் மாதிரிப் பரீட்சைகள் இல. 12

ஆசிரியர்: செ.ஜெகன்

## பகுதி I

01. வர்த்தகம் (Commerce) என்பது:

I வியாபார்ம், வங்கி, காப்புறுதி என்பவற்றை உள்ளடக்கியதாகும்.

II வியாபாரமும் துணைநிலைச் செயற்பாடுகளையும் உள்ளடக்கியதாகும்.

III வியாபாரமும் சந்தைப்படுத்தலுமாகும்.

IV கைத்தொழிலும், சந்தைப்படுத்தலுமாகும்.

02. முதலீட்டினால் ஏற்படும் நன்மையானது:

I நிதிமிகையுடையோர் வருமானத்தை ஈட்டல்

II நிதிப் பற்றாக்குறையுடையோர் நிதியைப் பெறல்

III மேற்கூறிய இரண்டும்

IV மேற்கூறிய எவையுமில்லை

03. மிலங்கா விலைச் சுட்டெண்ணைக் கொண்டு மதிப்பிடப்படும் கம்பனிகள்

I வதிவுள்ள கம்பனி  II வதிவற்ற கம்பனி

III மக்கள் கம்பனி  IV புளூசிப் கம்பனி

04. வணிக வளங்கள் (Business Resources)

I பொருட்கள் சேவைகள் உற்பத்தியில் பயன்படுத்தப்படும் உள்ளீடுகள்

II ,, ,, ,, ,, ,, வெளியீடுகள்

III ,, ,, ,, ,, ,, தொழிற்பாடுகள்

IV நிறுவனத்தில் காணப்படும் அசையும் சொத்துக்கள்

05. இடம் ஒன்று குறிக்கப்படாத போதும் சந்தையாகக் கொள்ளப்படுவது

I மின்னஞ்சல் (E.mail) மூலமான கொள்வனவு, விற்பனை

II கேள்வி முறைமூலமான கொள்வனவு விற்பனை

III தரகர் மூலமான கொள்வனவு விற்பனை

IV நேரடிக் கொள்வனவு விற்பனை

06. பணத்தையும் நாணயத்தையும் வேறுபடுத்தும் அம்சம்:

I திரவத்தன்மை  II வெளியீட்டு அளவு  III பாதுகாப்பு  IV மேற்கூறிய யாவும்

07. ஆசிய பசுபிக் வலயச் சந்தையில் (The Pacific Rim) இணைந்துள்ள கைத்தொழில் நாடுகள் பின்வருவனவற்றுள் எவை?

I இலங்கை, இந்தியா, பாகிஸ்தான்  II ஜப்பான், சீனா, அவுஸ்திரேலியா

III ஜப்பான், பங்களாதேஷ், அமெரிக்கா  IV பூட்டான், மாலைதீவு, சிம்பாவே

08. சுதந்திர வியாபார ஒப்பந்தத்திற்கு (Free Trade Agreement) உதாரணம்:

I மாகோ, ஒப்பந்தம்  II பூட்டான் ஒப்பந்தம்

III திம்பு ஒப்பந்தம்  IV இந்துலங்கா வியாபார ஒப்பந்தம்

09. பணத்தினால் அளவிடமுடியாத நடவடிக்கைகள் பின்வருவனவற்றில் எது?

I ஊழியர் வினைத்திறமை  II நிறுவனத்தில் ஏற்படும் நட்டம்

III அசையாச் சொத்துக்கள்  IV வெளியகக் கடன்களின் அளவு

10. முகாமைச் செயற்பாட்டில் உள்ளீடு என்பது?

I நிர்வாகம்  II முயற்சி  III பண்டங்கள்  IV சேவைகள்

11. ஊழியர்களின் உளம் சார்ந்த உழைப்பாளர்கள் தொடர்பாக பின்வருவனவற்றில் சரியான தெரிவு.

I நகைத்தொழிலாளர்  II ஆசிரியர்  III காவலாளி  IV தையற்காரர்

12. வலையமைப்பொன்றில் கணனியையும், தொலைபேசியையும் இணைக்கும் சாதனம்

I மவுஸ்  II கீபோட்  III மொடம்  IV கணனித்திரை

13. கணனித் தொழில்நுட்பத்தின் பிரதிகூலமான அம்சம்.

I உலகமயமாதல்  II வேலைப்பளு கூடுதல்

III ஆட்களின் வேலை இழப்பு  IV ஊழியர் புரள்வு அதிகரித்தல்

14. சிறிய நடுத்தர முயற்சியாண்மையில் பல நிறுவனங்கள் ஒன்றிணைந்து வழங்கும் கடன்.

I S.M.I கடன்  II வீட்டுக் கடன்  III விவசாயக் கடன்  IV வணிகக் கடன்

15. கொள்வனவு நாளேட்டின் மொத்தத் தொகைய்யை பேரேட்டுக்கு மாற்றுகின்றபோது இரட்டைப் பதிவானது கீழ்வருமாறு அமையும்.

I கொள்வனவுக் க/கு வரவு, கடன் கொடுத்தோர் க/கு செலவு

II கொள்வனவுக் க/கு வரவு, காசுக் க/கு செலவு

III கடன் கொடுத்தோர் க/கு வரவு, கொள்வனவுக் க/கு செலவு

IV கொள்வனவுக் க/கு வரவு, வினைக் க/கு செலவு

16. வங்கிக் கணக்கு இணக்கக் கூற்றினை விளக்குவதற்கு மிகப் பொருத்தமான கூற்று.

I குறித்த வங்கியினால் அனுப்பப்படும் மாதாந்த வங்கிக் கூற்றின் பகுப்பாய்வு

II வியாபார நடவடிக்கைகள் ஒழுங்கான முறையில் வைக்கப்பட்டுள்ளதா என்பதனைக் கண்டறிவதற்கு:

III ஏன் காசேட்டிலுள்ள வங்கி மீதி. வங்கிக் கூற்று மீதியுடன் ஒத்துப் போகவில்லை என்பதை அறியத். தயாரிக்கப்படும் கூற்று

IV காசேட்டில் பதியப்பட்டிராத நடவடிக்கைகளை பதிந்து கொள்வதற்காக வங்கியாளரால் அனுப்பிவைக்கப்படும் கூற்று

17. வியாபாரம் ஒன்றின் மூலதனத்திலான குறைவினைப் பாதிக்கும் நடவடிக்கையானது.

I அலுவலக தளபாடங்களின் கொள்வனவுக்கு செலுத்தப்பட்ட ரூ. 500

II கடன் கொடுத்தோர் ஒருவரிடமிருந்து பெற்றுக்கொண்ட கழிவு ரூ. 75

III தீர்க்கப்பட்ட வங்கி ஒன்றின் மேலதிகப் பற்று ரூ. 1050

IV வியாபாரத்திலிருந்து ரூ. 1500 பெறுமதியான பொருள்கள் சொந்தப் பாவனைக்காக எடுக்கப்பட்டமை

18. ஆரம்பப் பதிவேடுகளில் அல்லது பேரேட்டுக் கணக்குகளில் உண்மைப் பெறுமதியை விட அதிகமாகவோ அல்லது குறைவாகவே, பதியப்பட்ட பெறுமதியை

I விடுபடு வழுக்கள்  II செய்யப்படு வழுக்கள்

III இடுகட்டும் வழு  IV கொள்கை வழுக்கள் எனலாம்.

19. உரிமை மூலதனம் கணிக்கப்படும் முறை.

I எஞ்சிய இலாபங்கள் + சொத்துக்கள்

II இலாபம் + சொத்துக்கள்

III சொத்துக்கள் _ பொறுப்புக்கள்

IV இலாபம் + பொறுப்புக்கள்

20. பெரியளவு வியாபார நிறுவனங்களுக்கு சில்லறைக் காசேடு ஒன்றைப் பராமரிப்பதனால் பல நன்மைகள் உண்டு. சில்லறைக் காசேட்டிலிருந்து பேரேட்டுக்கு மாற்றும்போது அவற்றுள் என்ன நன்மை கிடைக்கிறது.

I அடிக்கடி ஏற்படும் வழுக்களிலிருந்து பாதுகாத்துக்கொள்ளலாம்.

II வியாபாரத்திலுள்ள அனைத்துக் காசுக் கொடுப்பனவுகளையும் சில்லறைக் காசேட்டின் மூலமே மேற்கொள்ளலாம்.

III பேரேட்டிற்கான பெருமளவு பதிவுகளை சொற்பமாகக் குறைத்துக் கொள்ளலாம்.

IV பகுப்பாய்வு நிரலில் காட்டப்படும் மொத்தத் தொகையிலிருந்து பேரேட்டுக்கு மொத்தங்களை மாற்றுவது இலகுவாக இருக்கும்.

21. வியாபாரம் ஒன்று ரூபா 75000 இற்கு பொருள்களை கொ/வு செய்தது கீழ்வருவனவற்றுள் இருப்புக்கள் மற்றும் தேறிய இலாபம் மீது இந்த நடவடிக்கையின் தாக்கத்தினை சரியாக விளக்குகின்ற கூற்று.

I இருப்பு ரூ 75000 இனால் அதிகரிப்பதுடன் தேறிய இலாபத்தில் எவ்வித மாற்றமும் இல்லை.

II கொ/வு ரூ 75000 இனால் அதிகரிப்பதுடன் தேறிய இலாபத்தில் ஒரு மாற்றமும் காணப்படுகிறது.

III இருப்பு ரூ. 75000 இனால் அதிகரிப்பதுடன் தேறிய இலாபமும் ரூபா 75000 ஆல் அதிகரிக்கிறது.

IV இருப்பு ரூ 75000 இனால் அதிகரிப்பதுடன் தேறிய இலாபமும் ரூபா 75000 ஆல் குறைகிறது.

22. வங்கியாளர் ஒருவர். நிறுவனம் ஒன்று தன்னிடம் பெற்றுக்கொண்ட வங்கிக் கடன் மீதான வட்டியை காலாண்டுக்கு ஒருதடவை காசோலை மூலம் செலுத்துவதற்கு அனுமதியளித்தார். வட்டிக் கொடுப்பனவைப் பதிவதற்கான ஆரம்பப் பதிவேடு.

I பொது நாளேடு  II காசேடு  III கொ/வு நாளேடு  IV சில்லறைக் காசேடு.

23. கீழ்வருவனவற்றிலிருந்து பொது நாளேட்டில் பதியப்படுவதற்கான நடவடிக்கையைத் தெரிவு செய்க.

I கரிகணனிடமிருந்து உட் திரும்பியவை ரூ 1200

II அலுவலகப் பாவனைக்காகக் கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்ட நுகர்வுப் பொருள்கள் ரூ 4000

III விற்பனை செய்யும் எண்ணத்துடன் கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்ட பொருள்கள் ரூ 6000

IV செலுத்தப்பட வேண்டிய மின்சாரக் கட்டணம் ரூபா 400 இன் கொடுப்பனவு.

24. ஐந்தொகைக்கு உரியதான கொடுக்கப்பட்ட கூற்றுக்களிலிருந்து பிழையான கூற்றினைத் தெரிவு செய்க.

I கொடுக்கப்பட்ட நாள் ஒன்றில் வியாபாரம் ஒன்றினது சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களினது பெறுமதியை ஐந்தொகையிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

II குறித்த ஒரு தினத்தில் வியாபாரம் ஒன்றின் நிதி நிலைமையை இது பிரதிபலிக்கின்றது.

III வியாபாரம் ஒன்றை முகாமைத்துவம் செய்யும் போது முகாமையாளர்கள் அவசியமான கணக்கீட்டுத் தகவல்களை ஒரு ஐந்தொகையிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

IV ஐந்தொகையானது ஒரு நிதி வருட முடிவின்போது மட்டுமே தயாரிக்கப்படமுடியும்.

25. ஒரு வியாபாரத்தின் ஏனைய நாட்குறிப்புக்களுடன் காசேட்டை ஒப்புநோக்கும்போது காசேடு வேறுபடும் அம்சமாவது

I வியாபாரம் ஒன்றைக் கொண்டு நடத்தும் போது காசேட்டில் பதியப்படும் காசும் காசு நடவடிக்கைகளும் முக்கியம் என்பதாகும்.

II வியாபாரம் ஒன்றில் பெரும்பான்மையாக நடைபெறும் நடவடிக்கைகள் காசை அடிப்படையாகக் கொண்டது என்பதாகும்.

III காசுப் புத்தகமானது ஒரு தனித்துவமான நிதி முகாமையாளரின் கீழேயே பராமரிக்கப்படுகிறது என்பதாகும்.

IV இது ஒரு ஆரம்பக் குறிப்பேடாகவும் அதேவேளை பேரேட்டுக் கணக்காகவும் தொழிற்படுகிறது என்பதாகும்.

26. 01.01.1999 இல் அன்று ரூ. 100 000இற்கு இயந்திரம் ஒன்று வாங்கப்பட்டது பெறுமானத் தீர்வு வருடாந்தம் 20% இல் கழிக்கப்படுகின்றது. முதல் 3 வருடத்திற்கு பெறுமானத் தேய்வு கணிப்பதற்கு ஒழுங்கு பாகமுறை பயன்படுத்தப்படுமாயின் கணிக்கப்பட்ட சரியான தொகையானது.

| | ஆண்டு 1 | ஆண்டு 2 | ஆண்டு 3 |
|---|---|---|---|
| I | ரூ. 20 000 | ரூ 16 000 | ரூ. 12 800 |
| II | ரூ. 2 000 | ரூ 1 600 | ரூ. 1 280 |
| III | ரூ. 20 000 | ரூ 40 000 | ரூ. 60 000 |
| IV | ரூ. 20 000 | ரூ 16 000 | ரூ. 12 000 |

27. சரக்கு பற்றுக்கான இரட்டைப் பதிவு

I பற்று க/கு வரவு, பற்றிய சரக்கு க/கு செலவு

II பற்று க/கு வரவு, விற்பனை க/கு செலவு

III பற்றிய சரக்கு க/கு வரவு, பற்று க/கு செலவு

IV பற்று க/கு வரவு, பொறுப்பு க/கு செலவு

28. தனியார் கம்பனி ஒன்றின் ஆகக் குறைந்த இயக்குநர்களின் எண்ணிக்கை.

I 1-3 வரை  II 3-5 வரை

III ஆகக்குறைந்தது 3  IV ஆகக் குறைந்தது 1

29. மோசடி தவிர்ப்புக் கட்டளைச் சட்டம் வலியுறுத்துவது

I பொருள்களின் தரத்தைப் பேணுமாறு

II பொருள்களின் விலையை உறுதியாகப் பேணுமாறு

III ரூ 1000 இற்கு மேல் மூலதனம் இட்டிருப்பின் பங்குடமைகள் கட்டாயம் எழுத்துமூலம் ஒப்பந்தம் செய்யப்படவேண்டுமென்பதை.

IV வியாபார இரகசியங்களைப் பேணுமாறு

30. வியாபார ஆரம்பச் சான்றுதலைப் பெற்றவுடன் தொழிலை ஆரம்பிக்கக் கூடிய கம்பனி

I தனியார் கம்பனி  II பொதுக் கம்பனி

III மக்கள் கம்பனி  IV மேற்கூறிய யாவும்.

31. இழப்பீட்டுத் தத்துவத்தின் துணைத் தத்துவங்களாவன.

I கடல் அபாயத்தத்துவம், தீ அபாயத்தத்துவம், விபத்து அபாயத் தத்துவம்

II பதிலாள் வைப்புத் தத்துவம், பகிர்ந்தளித்தல் தத்துவம், அன்மைக்காரணத் தத்துவம்

III உச்ச நன்நம்பிக்கைத் தத்துவம், கா/தி செய்யக்கூடிய அக்கறை,

IV கொள்கைத்தத்துவம், ஆயுள் தத்துவம், அபாயத்தத்துவம்.

32. ஒரு நாடு பண்டங்களை இறக்குமதி செய்து அப்பண்டத்தில் ஏதாவது மாற்றம் செய்து மீண்டும் ஏற்றுமதி செய்தலை எவ்வாறு அழைப்பர்.

I. மறு ஏற்றுமதி வியாபாரம்  II சர்வதேச வியாபாரம்

III உள்நாட்டு வியாபாரம்  IV இறக்கி ஏற்றுமிட வியாபாரம்

33. உற்பத்தி க/கு தயாரிக்கப்படுவது

I விற்கப்பட்ட பொருள்களின் கிரயத்தை கணிக்க

II குறித்த காலப்பகுதியில் முடிவடைந்த பொருள்களினதும் நடைபெற்றுக்கொண்டிருக்கும் கிரயத்தை கணிப்பிடுவதற்கு

III குறித்த வருட காலப்பகுதியில் செலுத்தப்பட்ட உற்பத்தி கிரயத்தினை கணிப்பதற்கு

IV உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களின் மேந்தலைக் கிரயத்தை கணிக்க.

34. வியாபாரி ஒருவர் கிரயத்துடன் 25% ஐ கூட்டுவதன் மூலம் தனது இலாப எல்லையை அமைத்து கொள்கிறார் விற்பனை மீதான அவரது இலாப வீதம்

I 5%  II 25%  III 20 %  IV 40%

35. கடன்பட்டோர் தொகை ரூ 29780 ஆகும். அறவிடமுடியாக் கடன் ரூ 6250 ஆகும். ஐயக்கடனுக்கான ஏற்பாடு 5% ஆயின், சரியான கணிப்பீட்டை காட்டும் பிரிவினை தெரிவுசெய்க?

I $^{5}/_{100} \times (29780 + 6250)$

II $\{^{5}/_{100} \times 6250\} + 29780$

III $^{5}/_{100} \times (29780 - 6250)$

IV $27980 - \{^{5}/_{100} \times 6250\}$

36. பெறவேண்டிய வருமானத்திற்கான இரட்டைப்பதிவு

I பெறவேண்டிய வருமான க/கு வரவு, உரிய வருமான க/கு செலவு

II உரிய வருமான க/கு வரவு, பெறவேண்டிய வருமான க/கு செலவு

III உரிய வருமான க/கு வரவு, முற்பண வருமான க/கு செலவு

IV உரிய வருமான க/கு வரவு, சொத்து க/கு செலவு

37. தொழிற்சாலை மேந்தலை கிரயம் உள்ளடக்கியது

I நேரில் திரவியங்களை

II நேர் திரவியங்களையும் நேரில் திரவியங்களையும்

III நேரில் திரவியங்களையும் நேர் ஊழியத்தையும்

IV நேர்க்கிரயம் தவிர்ந்த எல்லா உற்பத்தி திரவியங்களையும்

கீழ்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 38.39.40 வினாக்களுக்கு விடையளிக்குக.

2000 ஆம் ஆண்டிற்கான கொள்ளல் கொடுத்தல் கணக்கின்படி சந்தா ரூ. 10000

01.01.2000 இல் வருமதி சந்தா ரூ 1000

01.01.2000 இல் முற்பண சந்தா ரூ. 2000

31.12.2000 இல் வருமதி சந்தா ரூ. 3000

31.12.2000 இல் முற்பண சந்தா ரூ. 2500

38. வருமானச் செலவுக் க/கு செலவு வைக்கவேண்டிய தொகை

I ரூ 11500  II ரூ. 10000  III ரூ. 15000  IV ரூ. 5000

39. இறுதி முற்பண சந்தா கணக்கில் உள்ள மீதி

I ரூ. 3000  II ரூ. 2500  III ரூ. 2000  IV ரூ. 1000

40. இறுதி வருமதி சந்தாக் கணக்கில் உள்ள மீதி

I ரூ. 2000  II ரூ. 2500  III ரூ. 1000  IV ரூ.3000

★

# சத்தியம் சரிந்த

# 4 ஆம் ஆண்டு (19-10-2004)

## மயில்வாகனம் நிமலராஜன் நினைவு நாள்



எழுத்து, பேச்சு, ஊடகம்
ஆகியவற்றின் சுதந்திர
உரிமைக்காக உயிர் பறிக்கப்பட்ட
உண்மையாளன்
அமரர் **மயில்வாகனம் நிமலராஜன்**
அவர்களுக்கு இறைவா!
உமது இரக்கத்தையும்
இரட்சணியத்தையும் ஈந்தருளும்!

## இதய மலர் தூவி இறைஞ்சுகின்றோம்



இதயத்தின் நரம்புகளால்
செய்தி சொன்ன - உன்
"மரணம் கூட ஜனனம்"
இன்று நீ
"உலகம் போற்றும்
ஊடகவியலாளன்"
உனைப் புதைத்த இடத்து மணல் கூட
உயிர்ப்புள்ள செய்தி தரும்
உன் சாவில்
நாங்கள் இடுகின்ற ஓலங்கள் கூட
இனிய வரலாறாக மாறிப் பவனி வரும்
இவன் இனி பேசத் தேவையில்லை
இவனுடைய பேச்சே
உலகெங்கும் பேசியதே!
இதை நீ
வானத்தில் இருந்து
பார்த்து மகிழ்ந்திடு.
உனது ஆத்மா சாந்திபெற
இதய மலர் தூவி
இறைஞ்சுகின்றோம்.

- குடும்பத்தினர் (கனடா).

ஊடகவியலாளர்
**மயில்வாகனம்**
**நிமலராஜன்**

| மலர்வு | உதிர்வு |
| --- | --- |
| 1961-06-05 | 2000-10-19 |

(38271)(34-11-46)

யாழ்ப்பாணம்
கண்டுக்குளி இல்லை

### கிளிநொச்சியில்

# தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மேற்கொண்ட வீடமைப்புப் பணிகள் நிறைவடைந்தன

கிளிநொச்சி,ஒக்.19

உலகவங்கியின் நிதியீட்டத்துடன் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் அனுசரணையுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழக கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தால் கரைச்சி, பூநகரி ஆகிய பிரதேசங்களில் முன்னெடுக்கப்பெற்ற வீடமைப்பு வேலைகள் யாவும் நிறைவடைந்துள்ளன.

போரினால் பாதிப்புற்று மிகவும் நலிவுற்ற நிலையில், சுயமாக வேலைகளை முன்னெடுக்க இயலாத நிலையிலிருந்த கரைச்சிப் பிரதேச 22 பயனாளிகளின் வீடுகளையும் பூநகரி பிரதேச 3 பயனாளிகளின் வீடுகளையும் இரண்டு மாத காலத்தினுள் நிறைவேற்றும் ஒப்பந்த மூலமான பொறுப்பினை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் கையேற்று குறிப்பிட்ட காலப்பகுதியினுள் நிறைவேற்றியுள்ளது.

வீட்டுத்திட்டங்கள் பார்வையிடுவதற்காக கடந்த 5 ஆம் திகதி வருகைதந்திருந்த உலக வங்கிப் பிரதிநிதிகள் மற்றும் கிளிநொச்சி அரச அதிபர் ஆகியோர் பயனாளிகளின் வீடுகளைப் பார்வையிட்டதோடு, வீடமைப்புச் செயற்பாடுகள் தொடர்பான விடயங்களையும் பயனாளிகளிடம் கேட்டறிந்து கொண்டனர். பின்னா குறித்த வீடுகள் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டுள்ளன. (8)

## வன்னிப் பாடசாலைகளில் ஆசிரியர் விடுதிகள் இல்லை

வன்னிப் பகுதிகளில் உள்ள பாடசால்லகளில் ஆசிரியர் விடுதிகள் இல்லாத காரணத்தாலும் சில பாடசாலைகளில் விடுதிகள் திருத்தப்படாமல் உள்ளதாலும் ஆசிரியர்கள் தங்கி நின்று கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபடமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

வீடுகளைக்கூட வாடகைக்கு எடுக்க முடியாதமையினாலும் அன்றாடம் வீடு சென்றுவருவதற்கான வாகனப் போக்குவரத்து வசதிகள் இல்லாமையினாலும் ஆசிரியர்கள்பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். (8-341)

# கிளிநொச்சி தொழில்நுட்பக் கல்லூரியில் அலுமினியப்பொருள் உற்பத்திப் பயிற்சிநெறி

கிளிநொச்சி,ஒக்.19

கிளிநொச்சி தொழில்நுட்பக் கல்லூரியில் முதன்முதலாக அலுமினியப் பொருள் உற்பத்திப் பயிற்சி நெறி கடந்த 14 ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பித்துவைக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட 'நிக்கொட்' திட்டத்தின் நிதியுதவியுடன் கனேடிய பல்கலைக்கழகத்தின் அனுசரணையுடன் கிளிநொச்சி தொழில நுட்பக் கல்லூரியில் இந்தப் பயிற்சி நெறி ஆரம்பித்துவைக்கப்பட்டது.

தொழில்நுட்பக் கல்லூரியின் முதல்வர் பிரபாகரன் நிகழ்வுகளுக்குத் தலைமை வகித்தா.

பொதுச் சுடரினை 'நிக்கொட்' நிறுவனப் பிரதி திட்டப் பணிப்பாளர் பார்த்தீபன், அரசசார்பற்ற நிறுவனங்களின் நிர்வாக உத்தியோகத்தர் சுப்பிரமணியம், உலக கனேடிய பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி, முல்லை மாவட்ட இணைப்பாளர் ஆகியோர் ஏற்றினர்.

தேசியக் கொடியினை கிளிநொச்சி மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் மாணிக்கமும் நிறுவனக் கொடியினை கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினமும் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து கருத்துரைகள் இடம்பெற்றன.

*(படம் கீழே)* (8-7)




# பூநகரிப் பிரதேசத்தில் அடுத்தமாதம் நடமாடும் ஆயுள்வேத வைத்தியசேவை

பூநகரி,ஒக்.19

பூநகரிப் பிரதேச சபையினரால் எதிர்வரும் நவம்பர் மாதம் முதல் நடமாடும் ஆயுள்வேத வைத்திய சிகிச்சை நடத்தப்படவுள்ளது.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் காலை 9மணி முதல் நண்பகல் 12.30மணிவரை இந்த வைத்திய சேவை நடைபெறவுள்ளது என பூநகரிப் பிரதேச சபைச் செயலாளர் தெரிவித்துள்ளாா.

நடமாடும் ஆயுள்வேத வைத்திய சேவை நடைபெறும் தினங்கள் மற்றும் இடங்கள் பற்றிய விவரங்கள் வருமாறு:-

எதிர்வரும் 2 ஆம், 16 ஆம் திகதிகளில் கௌதாரி முனையிலும் எதிர்வரும் 4 ஆம், 18 ஆம் திகதிகளில் நல்லூரிலும் எதிர்வரும் 9 ஆம், 23 ஆம் திகதிகளில் ஞானி மடத்திலும் எதிர்வரும் 12 ஆம், 25 ஆம் திகதிகளில் பள்ளிக்குடாப் பகுதிகளிலும் இச்சேவை இடம் பெறவுள்ளன. (4-5-403)



பூநகரி வாடியடியில் தியாகி லெப்ரினன்ட் கேணல் திலீபனின் 17 ஆம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி நடைபெற்ற அடையாள உண்ணாவிரத நிகழ்வில் பூநகரி பிரதேச கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் அமுதன் தேசியக் கொடி ஏற்றுவதைப் படத்தில் காணலாம்.

*(படம்: பூநகரிச் செய்தியாளர்)*

# காலபோகப் பயிர்ச் செய்கைக்கு மானிய அடிப்படையில் உள்ளீடுகள்

ஒட்டுசுட்டான்,ஒக்.19

ஒட்டுசுட்டான் தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் அனுசரணையுடன் ஐ.நா. உணவு ஸ்தாபனத்தால் கடந்த செப்ரெம்பர் 30 ஆம் திகதிமுதல் காலபோகப் பயிர்ச்செய்கைக்கான உள்ளீட்டுப் பொருள்கள் மானிய அடிப்படையில் வழங்கப்பட்டு வருகின்றன.

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் தெரிவுசெய்யப்பட்ட 8 கிராமங்களில் ஆயிரத்து 369 பயனாளிகளுக்கே இந்தப் பொருள்கள் வழங்கப்படுகின்றன. இதில் 733 விவசாயிகளுக்கு நெல்விதையும் அதற்கான உரவகைகளும், 529 பயனாளிகளுக்கு சிறுதானியச் செய்கைளுக்கான தானிய வகைகளும் 107 பயனாளிகளுக்கு வீட்டுத்தோட்டத்திற்கான தானிய வகைகளும் வழங்கப்படுகின்றன. (8-341)

# நிரந்தரக் காணிப் பத்திரம் வழங்குவதற்கு நடவடிக்கை

திருவையாறு,ஒக்.19

காணிப்பத்திரம் இன்றித் தொடர்ச்சியாக பல ஆண்டுகளாகக் காணிகளில் வசித்துவரும் குடும்பங்களுக்கு நிரந்தர அனுமதிப்பத்திரம் வழங்குவது தொடர்பான நடமாடும் சேவை அண்மையில் திருவையாறு கிராம அபிவிருத்திச்சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

பெருமளவானோர் காணி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான பதிவுகளை மேற்கொள்ள சமுகமளித்த போதும் 50 பேருக்குரிய ஆவணங்கள் மட்டுமே பரிசீலித்துப் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

இவர்களுடைய விவரங்கள், மாகாண சபைக்கு அனுப்பப்பட்டு சிபார்சின் பின்பு அனுமதிப்பத்திரம் வழங்கப்படவுள்ளதாகவும் - பதிவுகளை மேற்கொள்ளவிரும்புவோரது பதிவுகள் படிப்படியாக நடைபெறவுள்ளதாகவும் அப்பகுதிக் கிராம அலுவலர் சத்தியநாதன் தெரிவித்தார். (8-393-204)

## சிறுவர் பூங்கா

கிளிநொச்சி,ஒக்.19

யு.என்.டி.பி. நிறுவன ஆதரவில் பூநகரி, 4 ஆம் கட்டைப் பகுதியில் சிறுவர் பூங்கா அமைக்க ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது.

அடுத்த மாத நடுப்பகுதியில் பூங்கா அமைபதற்கான பணிகள் ஆரம்பிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (8-ரி)

# செய்கை பண்ணப்படாத நிலங்கள் வேறு விவசாயிகளுக்கு வழங்கப்படும்

## கிளிநொச்சி அரச அதிபர் தகவல்

திருவையாறு,ஒக்.19

கிளிநொச்சி மாவட்டத்தில் விவசாயச் செய்கை பண்ணப்படாத நிலங்கள் அரசினால் சுவீகரிக்கப்பட்டு விவசாய நடவடிக்கைகளுக்காக வேறு விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ளன.

- இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் இராசநாயகம் தெரிவித்தார்.

திருவையாற்றில் நடைபெற்ற விழாவொன்றில் சிறப்புரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

விவசாய நிலங்களுக்கு சொந்தமானவர்கள் வேறு பிரதேசங்களில் வசிப்பதால் பல நிலங்கள் புதர்மண்டி பிரயோசனமற்றுக் காணபடுகின்றன.

இதனால், செய்கை பண்ணப்படும் அயல் நிலப் பயிர்கள் பீடைத் தாக்கத்திற்குட்படுவதுடன் விளைச்சலும் குறைகின்றன.

இதனால், மேற்படி நில உரிமையாளர்கள் உடனடியாகப் பயிர்ச்செய்கையை ஆரம்பிக்காதுவிட்டால் பிரதேசசபைக் கட்டளைச் சட்டத்தின்படி நிலம் அரசினால் சுவீகரிக்கப்பட்டு வேறு விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

இந்நடவடிக்கைகளுக்கு பொதுமக்களும் உதவவேண்டும் என்றார். (8-393)

### துணுக்காய்ப் பிரதேசத்தில்

# கால்நடைகளை இறைச்சிக்காக வெட்டுவதற்கு விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டது

கிளிநொச்சி,ஒக்.19

பாண்டியன்குளம், துணுக்காய் பிரதேசங்களில் கால்நடைகளை இறைச்சிக்காக வெட்டுதல், அவற்றின் பால் பயன்படுத்துதல் என்பனவற்றிற்கு விதிக்கப்பட்ட தடை நீக்கப்பட்டுள்ளது.

அண்மைக் காலத்தில் வன்னிப் பிரதேசத்தில் கால்நடைகளுக்கு கால்வாய்நோய் பரவிவந்தமையினால் பாண்டியன் குளம், துணுக்காய் பிரதேசங்களில் இந்தக் கட்டுப்பாடு விதிகப்பட்டது.

இந்த நோயானது தற்போது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதாக கால்நடை வைத்திய அதிகாரிகளுக்கும் பொருண்மியமேம்பாட்டு நிறுவனங்களுக்கும் பரிசோதனைசெய்து உறுதி செய்த பின்னர் இந்தத் தடை நீக்கப்பட்டுள்ளது.

இந்தக் காலப் பகுதிகளில் தடைசெய்யப்பட்டிருந்த பால் சேமிப்பு, விற்பனை என்பனவும மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (8-6)

# வன்னியில் நெருப்புக் காய்ச்சல் தீவிரமாகப் பரவி வருகிறது

வன்னிப் பகுதியில் தற்போது நெருப்புக் காய்சசல் தொற்றுக்கு இலக்காவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக தமிழீழ சுகாதார சேவையினர் பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர். மக்கள சுகாதார நடைமுறைகளில் பெரிதாக அக்கறை கொள்ளாமையே நெருப்புக்காய்ச்சல் பரவுவதற்கு முக்கிய காரணம் எனவும் சுகாதார சேவையினர் சுட்டிக் காட்டியுள்ளனர்.

கொதித்தாறிய நீரைக் குடிப்பதற்குப் பயன்படுத்துதல், பாதுகாப்பான நீரை உணவுத் தேவைகளுக்கு பயன்படுத்துதல், உணவு தயாரிக்க முன், உணவு உண்பதற்கு முன், உணவு ஊட்ட முன், உணவு பரிமாற முன், மலம் கழித்த பின் கைகளை நன்கு சவர்க்காரமிட்டுக் கழுவுதல், மலங்கழிப்பதற்கு மலசல கூடங்களை பயன்படுத்துதல் அல்லது மலங்களைப் புதைதல், உணவுப் பண்டங்களை ஈ.மொய்க்காது மூடி வைத்தல், பாதுகாப்பான உணவுகளை உட்கொள்ளுதல் போன்ற சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடிப்பதன் மூலம் நெருப்புக் காய்ச்சல் பரவுவதைக் கட்டுப்படுத்தலாம் எனவும் தமிழீழ சுகாதார சேவையினர் தெரிவித்துள்ளனர். (8-ரி)



கிளிநொச்சி தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தில் கடந்த மாதம் 30 ஆம் திகதி உலகக் கனேடிய பல்கலைக்கழக சேவையின் அனுசரணையுடன் மின்னொட்டுக் கற்கைநெறி ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் கரைச்சிப்பிரதேச சபையின் விசேட ஆணையாளர் பொன். நித்தியானந்தம் கற்கை நெறியின் பெயர்ப்பலகையை திரைநீக்கம் செய்வதையும் தொழில் நுட்பக் கல்வி நிறுவன அதிபர் தி.பிரபாகரன், பணியாளர் சு.இராமநாதன் ஆகியோர் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம்.

*(படம்: வட்டக்கச்சிச் செய்தியாளர்)*

## அடிப்படை வசதிகள் சீர்செய்யப்படவில்லை

# புங்குடுதீவில் மீளக்குடியமர்ந்தோரும் பிரதேசத்தை விட்டு வெளியேறும் நிலை

## செய்தியாளர் சந்திப்பில் பொதுமக்கள் பிரஸ்தாபம்

ஊர்காவற்றுறை,ஒக்.19

புங்குடுதீவில் மக்கள் மீளக்குடியமர்ந்து 9 வருடங்களாகியும் அதிகாரிகளின் அசமந்தப் போக்குக் காரணமாக மருத்துவ வசதி உட்பட அடிப்படை வசதிகள் பல இன்னமும் சீர்செய்யப படவில்லை.

இதனால், மீளக்குடியமர்ந்தவர்களும் இப் பிரதேசத்தை விட்டு வெளியேற வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை புங்குடுதீவு தென னிந்தியத் திருச்சபையில் நடைபெற்ற செய்தி யாளர் சந்திப்பின் போது அங்கு கலந்துகொண்ட உள்ளூர் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் இவ்வாறு தெரிவித்தனர்.

இந்தச் சந்திப்பு புங்குடுதீவு தென்னிந்திய திருச்சபையின் பொறுப்பாளர் ஏ.ஆர்.அம்பல வாணர் தலைமையில் நடைபெற்றது. இதில் சென். சேவியர் கடற்றொழிலாளர் சங்கப் பிரதி நிதி யா.பிரான்சிஸ், புங்குடுதீவு விவசாய சம் மேளனக் குழுத் தலைவரும் புங்குடுதீவு வர்த் தக சங்கத்தின் பொருளாளருமான வை.சிறிஸ் காநதன், புங்குடுதீவு சூழலகம் அமைப்பின் தலை வரும் சமூக வளர்ச்சிக் கழகத்தின் ஆலோசகரு மாகிய சு.கருணாகரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

அவர்கள் அங்கு மேலும் தெரிவிக்கையில் :-

வேலணைப் பிரதேச செயலகத்தின் நிர் வாக எல்லைக்குட்பட்ட இப்பிரதேசம் 12 கிராம சேவை அலுவலர்களை உள்ளடக்கியுள்ளது. இங்கு சுமார் 2 ஆயிரம் குடும்பங்கள் வரை இதுவரை மீளக்குடியமர்ந்துள்ளன.

எனினும், அடிப்படை வசதிகள் இங்கு சீர் செய்யப்படாததால் இப்பிரதேசத்தைச் சேர்ந்த 75 வீதமானவர்கள் வெளியிடங்களிலேயே வசித்து வருகின்றனர்.

இவை நிறைவேற்றப்படும் பட்சத்தில் அவா கள் சொந்த இடங்களில் மீளக்குடியமரத் தயாராகவுள்ளனர்.

இங்கு கல்வி, சுகாதாரம், குடிதண்ணீர், மின்சாரம், போக்குவரத்து, வீதிப்புனரமைப்பு, கடற்றொழில், விவசாயம் போன்ற கட்டமைப்பு கள் இன்னமும் சீர்குலைந்து காணபபடுகின்றன.

இதனால், பொதுமக்கள் தமது தேவைகளை நிறைவேற்றுவித்துக் கொள்ளமுடியாத நிலை யில் விரக்திநிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

எனவே, பின்வரும் விடயங்களில் அரச அதி காரிகள் அல்லது நாடாளுமன்ற உறுப்பினர் கள் கூடிய கவனம் எடுத்துத் தமது வாழ்வை மேம்படுத்த உதவுமாறு அவர்கள் வேண்டு கோள் விடுத்துள்ளனர்.

1. புங்குடுதீவு மாவட்ட வைத்தியசாலை விரைவில் புனரமைப்புச் செய்யப்பட்டுப் பிரசவ விடுதி, பற்சிகிச்சைப் பிரிவு, உள்ளக நோயா ளர் விடுதிகள் மீள இயங்குவதற்கு வசதியாக அதற்கான ஆளணிகள் நிரப்பப்படுதல் வேண்டும்.

2. குறைந்தது மாதத்திற்கு ஒருதடவையே னும் வேலணைப் பிரதேச செயலக நடமாடும் சேவை புங்குடுதீவில் நடத்தப்படவேண்டும்.

3. மின்சார வசதி இன்மையால் இப்பிரதே சத்தைச் சேர்ந்த மாணவர்கள் குப்பிவிளக்கி லேயே படித்து வருகின்றனர். அத்துடன், பாட சாலைகள், அரச அலுவலகங்கள் மின்சார வசதி இன்றிக் கணனி மயப்படுத்தமுடியாத நிலையிலுள்ளன. எனவே, இதுபோன்ற பல காரணங்களை முன்னிட்டு இப்பிரதேசத்திற்கு விரைவில் மின்சார வசதி செய்து தரப்படல் வேண்டும்.

4. பாடசாலைகளில் நிலவும் ஆசிரிய வெற் றிடங்கள் உடன் நிரப்பப்படுதல் வேண்டும். இவற்றுடன் மீள ஆரம்பிக்கப்படாத நிலையில் உள்ள பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்படு தல் வேண்டும்.

5. மிக நீண்டகாலமாகச் சீர்செய்யப்படாத நிலையிலுள்ள இறுப்பிட்டி வீதி விரைவில் புனரமைக்கப்பட்டு இதனூடாக நடைபெற்று வரும் பஸ்சேவைகள் அதிகரிக்கப்படுதல் வேண்டும்.

6. இயங்காமலுள்ள புங்குடுதீவு கமநல கேந்திர நிலையம் வாரத்தில் இரண்டு நாள்க ளாவது செயற்பட வழிசெய்து தரப்படல் வேண்டும்.

7. கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கும் பாஸ் நடைமுறைகள், கடற்படையினரின் கெடு பிடிகள் என்பவற்றைத் தளர்த்துவதற்கான வழிவகைகள் செய்து தரப்படல்வேண்டும்.

8. வடபிராந்தியப் போக்குவரத்துச் சபையி னால் யாழ். பஸ்நிலையத்திலிருந்து புங்குடு தீவிற்கு இரவு 7 மணிக்கு இறுதி பஸ்சேவை நடைபெற ஒழுங்கு செய்து தரப்படவேண்டும் எனக் கூட்டத்தில் கலந்துகொண்டோர் வலியு றுத்தினர்.

மேற்படி கோரிக்கைகள் நிறைவேற்றப்படாத பட்சத்தில் தாங்கள் வெகுஜனப் போராட்டம் நடத்தப்போவதாகவும் அவர்கள் தெரிவித்த னர். (எ-16)

## ஹெல உறுமய கட்சிச்செயலர் புதனன்று இராஜினாமா செய்வார்

கொழும்பு,ஒக்.19

ஜாதிகஹெல உறுமயவில் தொடரும் உட பூசல் காரணமாக அதன் பொதுச் செயலாளர் வண. உடுவே தம்மாலோக்க தேரோவும் அக் கட்சியிலிருந்து நாளை புதன்கிழமை இராஜி னாமாச் செய்யத் தீர்மானித்துள்ளார்.

இந்தத் தகவலை உடுவே தம்மாலோக்க தேரோ ஊடகங்களுக்கு வெளியிட்டார்.

கட்சியின் பொதுச் செயலாளர் பதவியி லிருந்து மட்டுமன்றி நாடாளுமன்ற உறுப்பினர் பதவியையும் தான் இராஜினாமாச் செய்யத் தீர் மானித்துள்ளார் எனவும் அவர் தெரிவித்தார்.

ஏற்கனவே, தேசிய அமைப்பாளரான வண. கொலன்னாவ ஸ்ரீசுமங்கல தேரோ கட்சியிலி ருந்தும் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலி ருந்தும் இராஜினாமாச் செய்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (எ-க)

# பொது நிகழ்வுகளில்...




யாழ். பல்கலைக்கழக சமுதாய மருத்துவத்துறை மாணவர்களின் கல்விநெறி தொடர் பான வெளிக்கள ஆய்வின் ஓர் அங்கமாக உரும்பிராய் லயன்ஸ் கழகத்தின் அனுசர ணையுடன் கோண்டாவில் கிழக்கு ஸ்ரீநாராயண 'சனசமூக நிலையத்தில் இடம்பெற்ற காலங்கடந்த திருமணப்பதிவு நிகழ்வில் பங்குகொண்ட தம்பதியர் ஒருவருக்கு உரும் பிராய் லயன்ஸ் கழகத் தலைவர் லயன் அ.த.க.கிருஷ்ணராசா திருமணப் பதிவுச் சான்றிதழைக் கையளிப்பதையும் லயன்ஸ் கழக உறுப்பினர்களையும் படத்தில் காண லாம். (எ)



ஊர்காவற்றுறைப் பிரதேச சபையின் பொது நூலகக் கண்காட்சி அண்மையில் ஊர் காவற்றுறை பொது நூலக மண்டபத்தில் நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படம் இது.

ஊர்காவற்றுறைப் பிரதேச சபையின் செயலாளர் கு.கணேசலிங்கம், தீவக கல்வி வலய ஆரம்பக் கல்வி உதவிப் பணிப்பாளர் க.தவராசா, சனசமூக அபிவிருத்தி உத்தி யோகத்தர் நா.மகேந்திரன், நூலகர் க.சௌந்தரராஜன் ஆகியோர் படத்தில் காணப்படுகின்றனர்.

*(படம்: ஊர்காவற்றுறைச் செய்தியாளர்)*



நல்லூர் பிரதேச செயலக சமுர்த்தி வங்கிப் பயனாளிகளுக்கான கடன் வழங்கும் நிகழ்வு அண்மையில் கல்வியங்காடு சமுர்த்தி வங்கியில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சமுர்த்தி பயனாளி ஒருவருக்கு நல்லூர் பிரதேச செயலர் திருமதி எஸ். தெய்வேந்திரம் சுயதொழில் முயற்சிக் கடன் வழங்குவதைப் படத்தில் காணலாம். சமுர்த்திக் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் எஸ்.இராசநாயகம், வங்கி முகாமையாளர் ந.சிவகுமார் ஆகி யோரும் படத்தில் உள்ளனர்.

*(படம்: வலி. கிழக்குச் செய்தியாளர்)*

# யாழ். கல்வி வலயமட்டத்திலான சைவநெறிப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஒக்.19

யாழ். கல்வி வலயப் பாடசாலை மாண வர்களிடையே நடத்தப்பட்ட சைவநெறிப் போட்டியில் வெற்றி பெற்றோரின் பெயர் விவரங் கள் வெளியிடப்பட்டுள்ளன.

பேச்சு, தோரணம் பின்னுதல், கோலம் போடுதல், மாலை கட்டுதல், சமய அறிவு,எழுத்து பண்ணிசை மற்றும் சகலகலாவல்லி மாலை ஓதுதல் ஆகிய போட்டிகளில் முதல் மூன்று இடங் களையும் பெற்ற மாணவர்களின் பெயர் விவ ரங்கள் முறையே வருமாறு:-

### பேச்சு

தரம் - 03

ச.மயூரேசன் (புனித ஜோன்.பொஸ்கோ வித் தியாலயம்), சி.சர்வக்ஞன் (யாழ். இந்து ஆரம் பப் பாடசாலை), வி.தனுசியா (கொக்குவில் இந்துக் கல்லூரி), க.விஸ்ணுகா (அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி).

தரம் - 04

பா.கஜானன் (புனித ஜோன். பொஸ்கோ வித்தியாலயம்), கே.பிரியங்கி (திருக்குடும்பக் கன்னியர்மடம்), ச.திலக்ஷன் (யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை).

தரம் - 05

கு.கஜரூபன் (கொட்டடி நமசிவாய வித் தியாலயம்), அருள்பிரியா (ஆவரங்கால் நட ராஜ இராமலிங்க வித்தியாலயம்), க.சாரங்கி (புனித ஜோன்.பொஸ்கோ வித்தியாலயம்).

தரம் - 06

அ.உமாகரன் (யாழ். இந்துக் கல்லூரி), சா.மதுறமி (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), அ.சியாமளா (வேம்படி மகளிர் கல்லூரி).

தரம் - 07

வ.தயாளன் (கொட்டடி நமசிவாய வித்தி யாலயம்), வி.கஜரூபன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), தெ.யாதவன் (ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்).

தரம் - 08

யோ.ஜனகன் (யாழ். இந்துக் கல்லூரி), யோ.சரண்யா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), செ.மாதங்கி (வேம்படி மகளிர் கல்லூரி).

தரம் - 09

ந.நிரோஷிகா (அத்தியார் இந்துக் கல்லூரி), மு.கஜனி (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), ஸ்ரீகாயத்திரி (வேம்படி மகளிர் கல்லூரி).

தரம் - 10

ச.கோபிநாத் (யாழ். மத்திய கல்லூரி), க.சுகிர்தா (கோண்டாவில் இந்துக் கல்லூரி), அ.அனுசியா (கொக்குவில் இந்துக் கல்லூரி).

தரம் - 11

ஜோ.ஷம்சினி (வேம்படி மகளிர் கல்லூரி), சோ.சகிரேகா (கொக்குவில் இந்துக் கல்லூரி), செ.சொபீகன் (யாழ். இந்துக் கல்லூரி).

தரம் - 12

பு.ஷாலினி (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), பி.பிரியா (அச்சுவேலி மத்திய கல்லூரி), சி. ஜதுஷா (கொக்குவில் இந்துக் கல்லூரி).

தரம் - 13

எஸ்.சசீவன் (சென். ஜோன்ஸ் கல்லூரி), இ.காயத்திரி (யாழ். இந்து மகளிர் கல்லூரி), ம.தமீரா (திருக்குடும்பக் கன்னியர் மடம்).

### தோரணம் பின்னுதல்

தரம் - 06

*சி.ஹம்சா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), ச.சாம்பவி (யாழ். இந்து மகளிர் கல்லூரி), ந.பிரசாந்தன் (கோப்பாய் சரவணபவானந்தா வித்தியாலயம்).

தரம் - 07

எம்.நிரோதீபன் (சென். ஜோன்ஸ் கல்லூரி), நதீஸ்குமார் (கலட்டி மெ.மி.த.க. பாடசாலை), ச.அஜந்தன் (கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி).

தரம் - 08

செ.கபில்ராஜ் (யாழ். மத்திய கல்லூரி), யோ.சிந்துஜா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), சி.ஜயந்தன் (கோப்பாய் சரவணபவானந்தா வித்தியாலயம்).

தரம் - 09

ச.ஹரிகரன் (கொக்குவில் நாமகள் வித்தி யாலயம்), தே.சயந்திகா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), க.நிஷாந்தன் (கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்).

தரம் - 10

சி.ரபிசாந் (கொக்குவில் நாமகள் வித்தி யாலயம்), கு.மதிவண்ணன் (ஆவரங்கால் நட ராஜ இராமலிங்க வித்தியாலயம்), தி.நிரோ ஜன் (ஆவரங்கால் மகாஜன வித்தியாலயம்).

தரம் - 11

க.யாழினி (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), கீ.பகீரதன் (கொக்குவில் ஸ்ரீஞானபண்டிதா வித்தியாலயம்), க.மயூரன் (வண்ணை நாவ லர் வித்தியாலயம்).

தரம் - 12

தெ.றெஜீஸ்வரன் (அச்சுவேலி மத்திய கல் லூரி), இ.இராஜதுஸ்ஜன் (அத்தியார் இந்துக் கல்லூரி), ப.சிறிகஜலக்சுமி (கொக்குவில் இந துக் கல்லூரி).

தரம் - 13

பே.கயல்விழி (அச்சுவேலி மத்திய கல் லூரி), ம.ஜீவகாந் (கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்), து.ரேணுகா (கோப்பாய் கிறிஸ் தவ கல்லூரி).

(வளரும்)

கோட்டமட்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி

# நாவாந்துறை றோ.க., யாழ்.மத்திய கல்லூரி சென்.ஜேம்ஸ் மகாவித்தியாலயம் சம்பியன்

வலி.வடக்கு,ஒக்.19

யாழ். கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டிகளில் முறையே 14, 16, 18 வயதுப் பிரிவினர்களில் கோட்ட மட்ட சம்பியன்களாக நாவாந்துறை றோமன் கத்தோலிக்கப் பாடசாலை, யாழ்.மத்திய கல்லூரி மற்றும் சென்.ஜேம்ஸ் மகாவித்தியாலயம் என்பன தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

அரியாலை கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் இப்போட்டிகள் யாவும் இடம்பெற்றன.

14 வயதுப் பிரிவினர்களுக்கு இடையேயான இறுதி ஆட்டத்தில் நாவாந்துறை றோமன் கத்தோலிக்கப் பாடசாலையும் யாழ்.மத்திய கல்லூரியும் மோதின. ஆட்டம் ஆரம்பமான நேரம் முதல் இரு அணிகளும் விடாமுயற்சியுடன் விளையாடியபோதிலும் நாவாந்துறை றோமன் கத்தோலிக்கப் பாடசாலையின் முன்னணி வீரர்கள் மூவர் சிறந்த முறையில் விளையாடி அனைவரினதும் பாராட்டுக்களைப் பெற்றனர்.

முதல்பாதி ஆட்டத்தின்போது நாவாந்துறை றோமன் கத்தோலிக்கப் பாடசாலை ஒரு கோலைப் பெற்று முன்னணியில் இருந்தது.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பிக்கப்பட்ட போது யாழ். மத்திய கல்லூரி கோல்களைப் பெறமுடியும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், கிடைத்த சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தத் தவறியநிலையில் மேலும் இரண்டு கோல்களை நாவாந்துறை றோமன் கத்தோலிக்கப் பாடசாலை பெற்றுத் தனது வெற்றியை உறுதி செய்துகொண்டது.

ஆட்ட முடிவில் 3-0 என்ற கோல் கணக்கில் நாவாந்துறை றோமன் கத்தோலிக்கப் பாடசாலை யாழ். மத்திய கல்லூரியை வெற்றி கொண்டது.

3ஆம் இடத்திற்கான ஆட்டத்தில் யாழ். சென். சாள்ஸ் மகாவித்தியாலயமும் யாழ். சென்.ஜேம்ஸ் மகாவித்தியாலய மும் மோதிக் கொண்டபோதிலும் ஆட்டம் முடிவடையும் வரை இரு அணிகளும் கோல்கள் எதனையும் பெறவில்லை.

வெற்றி தோல்வியை தீர்மானிப்பதற்காக வழங்கப்பட்ட சமநிலை உடைப்பு உதைகள் மூலம் 4-3 என்ற கோல்கணக்கில் சென். ஜேம்ஸ் மகாவித்தியாலயம் பெற்று சென். சாள்ஸ் மகாவித்தியாலயத்தை வெற்றிகொண்டது.

16 வயதுப் பிரிவினருக்கான இறுதி ஆட்டத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியும் சென்.ஜேம்ஸ் மகாவித்தியாலயமும் மோதின. யாழ். மத்திய கல்லூரி வீரர்கள் சிறந்த முறையில் விளையாடினார்கள்.

முதல்பாதி ஆட்டத்தின் போது யாழ். மத்திய கல்லூரி இரு கோலைப் பெற்று முன்னணியில் இருந்தது. சென்.ஜேம்ஸ் மகாவித்தியாலயம் தமக்குக் கிடைத்த சந்தர்ப்பங்களைத் தவறவிட்டமையால் கோல்கள் பெறும் வாய்ப்பைத் தவறவிட்டன.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி வீரர்கள் மிகவும் விறுவிறுப்பாக விளையாடிய போதிலும் ஒரு கோலை மட்டும் பெறமுடிந்தது. சென்.ஜேம்ஸ் வீரர்கள் மத்திய கல்லூரியினர் கோல் பெற முயன்ற சந்தர்ப்பங்களைத் தடுத்துவந்தனர்.

ஆட்ட முடிவில் யாழ்.மத்திய கல்லூரி 3-0 என்ற கோல் கணக்கில் சென்.ஜேம்ஸ் மகாவித்தியாலயத்தை வெற்றி கொண்டு கோட்ட மட்ட சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

3ஆம் இடத்திற்கான ஆட்டத்தில் யாழ். சென்.யோசேப் வித்தியாலயமும், நாவாந்துறை றோமன் கத்தோலிக்கப் பாடசாலையும் விளையாடி நாவாந்துறை றோமன் கத்தோலிக்கப் பாடசாலை 1-0 என்ற கோல் கணக்கில் சென்.யோசேப் வித்தியாலயத்தை வெற்றி பெற்றது.

18 வயதுப் பிரிவில் இறுதிப் போட்டிக்கு யாழ்.சென்.ஜேம்ஸ் மகா வித்தியாலயமும் யாழ்.சென்.யோசேப் வித்தியாலயமும் மோதின.

இரு அணிகளும் மிகவும் விறுவிறுப்பாக விளையாடியதுடன் இருஅணிகளின் ரசிகர்களும் கூட மைதானத்திற்கு வெளியில் மிகவும் ஆரவாரத்துடன் காணப்பட்டார்கள்.

முதல்பாதி ஆட்டத்தில் சென்.ஜேம்ஸ் மகா வித்தியாலயம் ஒரு கோலைப் பெற்று தன்னை முன்னிலைப்படுத்திக்கொண்டது.

இரண்டாம் பாதி ஆட்டம் தொடங்கியதைத் தொடர்ந்து மேலும் ஒருகோலைப் பெற்றுக் கொண்டது. ஆட்டம் முடிவடையும் நேரம்வரை சென்.யோசேப் மகாவித்தியாலயத்தினரால் கோல்கள் எதனையும் பெறமுடியவில்லை.

ஆட்டமுடிவில் சென்.ஜேம்ஸ் மகாவித்தியாலயம் 2-0 என்ற கோல்கணக்கில் சென்.யோசேப் வித்தியாலயத்தை வெற்றி கொண்டு கோட்ட மட்ட சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது.

3ஆம் இடத்திற்கான ஆட்டத்தில் சென். பற்றிக்ஸ் கல்லூரியும் நாவாந்துறை றோமன் கத்தோலிக்கப் பாடசாலையும் மோதின.

இரு அணிகளும் போட்டியில் வெற்றிபெற வேண்டும் என்ற உணர்வுடன் விளையாடியதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. இவ்விரு அணிகளுமே இறுதிப்போட்டியில் விளையாடும் வாய்ப்பை பெறுவார்கள் என ரசிகர்கள் ஏற்கனவே எதிர்பார்த்து இருந்தமையும் சுட்டிக் காட்ட வேண்டியதாகும்.

ஆனாலும், இந்த இரு அணிகளும் வெற்றி பெறும்முயற்சியில் ஈடுபட்ட போதிலும் சென். பற்றிக்ஸ் கல்லூரி வீரர்கள் முதல் சுற்றில் கற்ற பாடங்களைச் சரியாக பயன்படுத்தி 3-0 என்ற கோல் கணக்கில் நாவாந்துறை றோமன் கத்தோலிக்கப் பாடசாலையை வெற்றி கொண்டனர். (8-5-86)

## உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம்,ஒக்.19

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையே நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிமுதல் இடம்பெறும் 16 வயதுக்குட்பட்டோருக்கான ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ பிற்பகல் 2.30 மணி - கொற்றாவத்தை அ.த.க. பாடசாலை எதிர் தேவரையாளி இந்துக் கல்லூரி.

★ கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி எதிர் பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயம்.

★ பிற்பகல் 3.30 மணி - வல்வை சிதம்பராக் கல்லூரி எதிர் பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயம்.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி எதிர் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம். (8-5-70)

## கராத்தே போட்டியில் வெற்றிபெற்றோர் தொடர்பு கொள்க

யாழ்ப்பாணம்,ஒக்.19

யாழ். மாவட்ட கராத்தே சங்கத்தினால் நடத்தப்பட்ட மேஜர் ஈழப்பிரியர் ஞாபகார்த்த தெரிவுச் சுற்றுப்போட்டியில் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்றவர்களைத் தம்முடன் தொர்புகொள்ளுமாறு யாழ். மாவட்ட கராத்தே சங்கத்தின் செயலாளர் கேட்டுள்ளார்.

இம்மாதம் 23ஆம் 24ஆம் திகதிகளில் கிளிநொச்சியில் நடைபெறவுள்ள மேஜர் ஈழப்பிரியா ஞாபகார்த்த சுற்றுப்போட்டியில் கலந்து கொள்வதற்கு உரிய விண்ணப்பப்படிவங்களை பூர்திசெய்வதற்காகவே மேற்படி மாணவர்கள் அழைக்கப்பட்டுள்ளனர். (8-ரி)

# விளையாட்டு

## உள்ளக விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றுவோர் விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,ஒக்.19

மக்கள் வங்கியின் அனுசரணையுடன் யாழ். மத்திய கல்லூரி உள்ளக விளையாட்டு கழகம் நடத்தும் டாக்டர் டீ.நெல்ஸ் ஞாபகார்த்த உளளக விளையாட்டுப்போட்டியில் பங்குகொள்ள விரும்பும் பாடசாலைகள், விளையாட்டு கழகங்கள் ஆகியவற்றிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

போட்டியில் பங்குகொள்ளவிரும்பும் பாடசாலைகள், விளையாட்டுக் கழகங்கள் யாழ்.மத்திய கல்லூரி அலுவலகத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று, பூர்த்தி செய்து எதிர் வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (8-190)

## கூடைப்பந்தாட்டம்

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவை நடத்தும் யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட ஆண் அணிகளுக்கு இடையேயான போட்டி நேற்று திங்கட்கிழமை ஆரம்பமாகியது. விலகல் முறையில் நடைபெறும் இந்தப் போட்டியில் முதல் நாளான நேற்று வட்டுக்கோட்டை 'ஒல்'கோல்ஸ்' அணியை எதிர்த்து கோப்பாய் 'A' அணி மோதியது.

இன்றைய போட்டியில் மாலை 5.00 மணிக்கு யாழ். பற்றீஸியன் அணியை எதிர்த்து வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி 'A' அணி மோதவுள்ளது. (8)

பாடசாலை மாணவர்களுக்கிடையே

# யாழ்.இந்துக் கல்லூரி சதுரங்கக் கழகம் நடத்திய சதுரங்கச் சுற்றுப்போட்டி

வலி.வடக்கு,ஒக்.19

யாழ். இந்துக் கல்லூரி சதுரங்க விளையாட்டுக் கழகம் யாழ்ப்பாணம், கொழும்பு, லண்டன் பழைய மாணவர் சங்கக் கிளைகளின் அனுசரணையுடன் யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையே நடத்திய சதுரங்க சுற்றுப்போட்டி கடந்த 16ஆம், 17ஆம் திகதிகளில் யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெற்றது.

யாழ். இந்துக் கல்லூரி சதுரங்க விளையாட்டுக் கழகப் பொறுப்பாசிரியர் கந்தசாமி அருளானந்தசிவம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வை யாழ். இந்துக் கல்லூரி பிரதி அதிபர் க.ஓங்காரமூர்த்தி முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு ஆரம்பித்துவைத்தார்.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 23 பாடசாலைகள் இப்போட்டிகளில் கலந்துகொண்டன.

10,12,15,19 வயதுப் பிரிவினர்களுக்கு இடையே இப்போட்டிகள் நடைபெற்றன. 10, 12 வயதுப் பிரிவினருக்கான போட்டிகள் தனிப் போட்டியாக இடம்பெற்றன.

10 வயதுப் பிரிவில் 12 ஆண்களும் 13 பெண்களும், 12 வயதுப் பிரிவில் 26 ஆண்களும் 24 பெண்களும், 15 வயது ஆண்கள் பிரிவில் 77 பேரும் பெண்கள் பிரிவில் 56 பேரும், 19 வயது ஆண்கள் பிரிவில் 56 பேரும் பெண்கள் பிரிவில் 35 பேரும் கலந்துகொண்டனர்.

இப்போட்டிகளை கடந்த பத்து வருடங்களாக யாழ். இந்துக் கல்லூரியின் சதுரங்கக் கழகம் நடத்திவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (8-86)



சதுரங்கப் போட்டியில் கலந்துகொண்ட மாணவிகளில் ஒரு பகுதியினர்

# தமிழர் போராட்ட நியாயத்தை உலகுக்குணர்த்தியவன் நிமலராஜன்



ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜனின் 4ஆவது ஆண்டு நினைவு தினம் இன்று. அதனை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது.

தமிழ்த் தேசியத்தின் நியாயப்பாட்டை, தமிழ் மக்களின் அபிலாசைகளை சர்வதேசத்துக்கு எழுத்து, குரல் மூலம் பறைசாற்றிய ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் படுகொலை செய்யப்பட்டு இன்று 4ஆவது ஆண்டு பூர்த்தியாகின்றது.

குடாநாட்டு மக்கள் சந்தித்த அவலங்களை, அவர்களின் உரிமைப் போராட்டத்தின் உண்மைத்தன்மையை, மாற்றுத் தமிழ்க்குழுக்களின் அடாவடித்தனங்களை சர்வதேசத்துக்கு துணிச்சலுடன் எடுத்துக்கூறும் பணியை மேற்கொண்டிருந்தவர் நிமலராஜன்.

பி.பி.ஸி. சிங்கள மற்றும் தமிழ் சேவைக்கும், தெற்கில் ஒலிபரப்பாகும் தமிழ் - சிங்கள வானொலி சேவைகளுக்கும் யாழ். பிராந்திய செய்தியாளராகப் பணியாற்றி தனது குரல் மூலம் சர்வதேசத்துக்கு மட்டுமல்லாது, தெற்குச் சிங்கள மக்களுக்கும் தமிழர் தரப்பு நியாயப்பாட்டைத் தெரிவிக்கும் சீரிய பணியை மேற்கொண்டு வந்தார்.

தெற்கில் இருந்து வெளியாகும் 'ராவய', 'ஹிரு' போன்ற வாரப் பத்திரிகைகளுக்கு கட்டுரைகள் எழுதி, தமிழ் மக்களுக்கு எதிராகத் தெற்கில் சிங்களப் பேரினவாதிகள் எழுப்பிய கூச்சல்களுக்கு முற்றுப்புள்ளி வைத்தார்.

ஊடகத்துறையில் 90 இற்குப் பின்பே இணைந்துகொண்டு துணிச்சல் மிகுந்த தனது பணி மூலம் ஊடகத்துறையில் தனக்கென முத்திரையைப் பதித்தார் நிமலராஜன்.

தெற்குச் சிங்கள ஊடகவியலாளர்களுடன் நல்ல நட்புக்கொண்ட நிமலராஜன், வடக்கு - தெற்கு ஊடகவியலாளர்களுக்கு நட்புறவுப் பாலமாகவும் விளங்கினார். தெற்கில் ஊடகவியலாளர்கள் ஏற்பாடு செய்யும் நிகழ்வுகளில் பங்குபற்றி, சிங்கள மொழியில் குடாநாட்டு நிலைமைகளைத் துல்லியமாக அவர்களுக்கு விளக்கிவந்துள்ளார்.

தெற்கு ஊடகவியலாளர்களை குடாநாட்டுக்கு அழைத்துவந்து இங்குள்ள நிலைமைகளை விளக்கி, அழிவுகளைக் காட்டி அவர்களுக்குத் தேவையான உதவிகளையும் இவர் வழங்கிவந்தார்.

அத்துடன், இவர் குடாநாட்டில் மாற்றுக் கட்சிகள், ஆயுதக் குழுக்கள் முன்னெடுத்த அடாவடித்தனங்களைப் பகிரங்கமாக விமர்சித்தும் வந்தார். குறிப்பாக சிங்கள சேவையில் அவர் செய்துவந்த விமர்சனங்கள் அந்தக் கட்சிகள் - குழுக்கள் அவர் மீது ஆத்திரப்பட வைத்தன.

2000ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 19ஆம் திகதி இரவு பி.பி.ஸி. சிங்கள சேவையில் தான் செய்த விமர்சனத்தைக் கேட்டுவிட்டு, தமிழோசையைக் கேட்டுக்கொண்டிருந்த சமயம் அவர் வீட்டுக்குள் நுழைந்த இனந்தெரியாத ஆயுதக் குழு ஒன்று அவரைச் சுட்டுக்கொன்றது.

அவரது தந்தையாரையும் அவரது பெறாமகனையும் காயப்படுத்திவிட்டு வெளியேறியது அந்தக் குழு.

**- சுந்தரவேள் -**

சம்பவம் நடந்து நான்கு ஆண்டுகள் பூர்த்தியான நிலையிலும், அந்தக் கொலையாளிகளைக் கண்டுபிடிக்க முடியாத நிலையில் அல்லாடுகின்றது சிங்கள அரசு. கொலையாளிகளை இனங்கண்டு அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கத் தயக்கம் காட்டுகின்றதா சிங்கள அரசு என்ற கேள்வி மக்கள் மத்தியில் எழுந்திருப்பது நியாயமானதுதானே.

ஊரடங்கு நேரம், இராணுவத்தின் காவலரணுக்கு நூறு மீற்றர் தூரத்தில் இக்கொலை நடைபெற்றது. இந்தக் கொலையை சுலபமாகத் துப்புத் துலக்கிவிடலாம். ஆனால், ஸ்ரீலங்கா அரசும், சட்டம் - ஒழுங்கைப் பேணும் பொலீஸ் திணைக்களமும் கையாலாகாத நிலையில் தொடர்ந்தும் விசாரணையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றன என்றே கூறவேண்டும்.

இந்தக் கொலை தொடர்பாக யாழ். நீதிமன்றத்தில் நடந்துவந்த விசாரணைகள் கூட திகதி குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்பட்டுவிட்டன. இதுவரை நடந்த விசாரணைகளின் விவரங்கள் எல்லாம் சட்டமா அதிபருக்கு அனுப்பப்பட்டுள்ளன. அவை சட்டமா அதிபருகக்கு அனுப்பப்பட்டு மாதங்கள் பல கடந்த நிலையிலும் இன்னமும் எந்தவித முடிவும் வெளியிடப்படவில்லை. விசாரணைக் கோவைகள் எல்லாம் அங்கு கிடப்பில்போடப்பட்டதாகச் சந்தேகிக்கப்படுகிறது.

இந்தப் படுகொலைக்கான சூத்திரதாரிகளைக் கண்டுபிடிக்க விசாரணைகளை முடக்கலாம். கொலையாளிகள் கண்டுபிடிக்கப்படாமல் போகலாம்.

ஆனால், நிமலராஜன் ஆற்றிய பணிகள் தமிழ் மக்களின் மனங்களில் - ஊடகவியலாளர் மனங்களில் இருந்தும் அகலா. விடுதலைப் போராட்டத்தில் நிலைத்து நிற்கும். அதை யாரும் அழிக்கமுடியாது; அழியவும்மாட்டாது.★

# தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களுக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கு பரீட்சை

## நாளை கொழும்பில் நடக்கும்

யாழ்ப்பாணம்,ஒக்.19

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியிலிருந்து வெளிநாட்டு வேலை வாய்ப்பிற்காகத் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களை நாளை 20ஆம் திகதி புதன்கிழமை கொழும்பிற்கு வருகைதரும்படி தொழிற்பயிற்சி அதிகாரசபை அறிவித்துள்ளது.

கடந்தமாதம் யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியில் நடந்த நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்ட 25 மாணவர்களையும் செய்முறைப் பரீட்சைக்காகக் கொழும்புக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

தொழிற்பயிற்சி அதிகாரசபையின் அலுவலகத்தில் செய்முறைப்பரீட்சை நடைபெறவுள்ளதால் அன்று காலை 8.30 மணிக்கு நாரஹேன்பிட்டியில் உள்ள மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்திற்கு முன்னால் மாணவர்களை வருகைதருமாறு அதிகாரசபை கேட்டுள்ளது.

இதேவேளை, கடந்த மாதம் செய்முறைப் பரீட்சை மூலம் தெரிவுசெய்யப்பட்டு கடவுச்சீட்டு இல்லாமையால் திரும்பிச் சென்ற மாணவர்களையும் கடவுச்சீட்டுடன் வரும்படி அறிவிக்கப்பட்டுள்ளது. (8-6)




தென்னிந்தியாவில் இருந்து பரம்பரை ஜோதிடர்

திரு. P.T.R. அவர்கள்

5 ஆவது முறையாக யாழ்ப்பாணம் வருகை. கைரேகை, ஜாதகம், எண்கணிதம் பார்த்து உங்களது எதிர்காலப் பலன்களை அறிந்துகொள்ள இன்றே திரு. P.T.R ஐச் சந்திக்கவும்.

திரு.P.T.R ஐச் சந்திக்கும் இடம்:
ஜோதிடர் திரு.P.T.R அவர்கள்
பாலாஜி இன் விடுதி
293, கஸ்தூரியார் வீதி, கன்னாதிட்டிச் சந்தி, யாழ்ப்பாணம்.

(37762) (32-13-14)



பாராட்டி வாழ்த்துகின்றோம்



புன்னாலைக்கட்டுவன் அ.த.க. பாடசாலை மாணவனும் உமாச்சந்திரன் - யசோதா தம்பதிகளின் செல்வப் புதல்வனுமாகிய உமாச்சந்திரன் நிசாந்தன் அவர்கள் 2004 ஆம் ஆண்டு 5 ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் 131 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமையையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம். அத்துடன், அவர் மேலும் வளம்பெற துண்டி பிள்ளையாரின் அருள்வேண்டி பாராட்டிவாழ்த்துகின்றோம்.

பிள்ளையார் இல்லம்,
ஐயனார் கோயிலடி,
அளவெட்டி வடக்கு.

தாத்தா (அம்மப்பா), பெரியப்பா, பெரியம்மா, லதாச்சித்தி, சுகிசித்தி, தம்பிமார்: சிவோதயன், சிவேதன்.

(37756) (32-13-14)



அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் (TRRO Ltd)

பணிநிலை வேண்டுகை நேர்முகப் பரீட்சை

எமது தலைமைப் பணிமனைக் காசாளர் பதவிக்குப் பொருத்தமான கணக்கியல் அறிவும், கணனி முகாமை அறிவும் உள்ள ஒருவருக்கான வெற்றிடம் ஏற்பட்டுள்ளது. தகுதி உடையவர்கள் நேர்முகப்பரீட்சைக்கு நாளை (20.10.2004) புதன்கிழமை 10.00 - 12.00 மணிக்கும் இடையில் உரிய ஆவணங்களுடன் வருகைதரவும்.

நேர்முகப்பரீட்சை நடைபெறும் இடம் மற்றும் தொடர்புகளுக்கு :

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்.
106,4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

(சி-38288) (43-32-13-14)



அளவெட்டி மல்லாகம் ப.நோ.கூ.சங்கம்

31.03.2004இல் உள்ள மீதிகளை உறுதிப்படுத்தல்

எமது கிராமிய வங்கிகளில் சேமிப்புக்கணக்குகளை வைத்திருக்கும் வாடிக்கையாளர்கள் 21.10.2004 முதல் 30.10.2004 வரையான காலப்பகுதியில் தங்களது கையேடுகளைச் சமர்ப்பித்து 31.3.2004இல் உள்ள மீதியை உறுதி செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பொதுமுகாமையாளர்,
அளவெட்டி மல்லாகம் ப.நோ.கூ.சங்கம்,
அளவெட்டி. (சி-38291)(43-32-13-14)

19.10.2004



இறுதித் திகதி நீடிப்பும் பகுதி நேர ஆசிரியர் விண்ணப்பமும்

யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி அதிபர் பதவிக்கான விண்ணப்பம் அனுப்பும் இறுதித் திகதி 23.10.2004 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

க.பொ.த. (உயர்தர) சித்தியும் க.பொ.த. (சாதாரண தரத்தில்) ஆங்கில மொழியில் விசேட சித்தியும் உள்ளவர்களிடமிருந்து பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களுக்கான விண்ணப்பம் கோரப்படுகின்றது.

எழுத்துப் பரீட்சை, நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவு நடைபெறும். சுயவிவரங்களைக்கொண்ட விண்ணப்பங்களை 27.10.2004 ஆம் திகதிக்கு முன்பு வடமராட்சி வலயக் கல்வி அலுவலக நிர்வாகப் பிரதி கல்விப் பணிப்பாளருக்கு அனுப்புக.

(சி-38256)(32-13-14) - வடமராட்சி கல்வி வலயம்



கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர் திருமதி A.V.பற்பநாதர் அவர்களின் அன்புத் தாயார்

திருமதி பேரின்பரெட்ணம் மேரியோசேப்பின்
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

அவர்கள் இயற்கையெய்தியதையிட்டு துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்,
கொழும்புத்துறை இந்து [illegible]

(சி-38283)(32-13-14)


## கருணாவின் கட்சிக்கு உதவமாட்டாராம் டக்ளஸ் தேவானந்தா!

கொழும்பு,ஒக்.19

இந்தியாவில் தங்கியிருக்கும் ஈ.என்.டி.எல்.எவ். உறுப்பினர்களுடன் இணைந்து கொண்டு புதிய அரசியல் கட்சியொன்றை ஆரம்பிக்கத் தீர்மானித்திருக்கும் கருணா குழுவினருக்குத் தாம் எந்தவிதத்திலும் உதவி வழங்கப்போவதில்லை என ஈ.பி.டி.பியின் தலைவர் டக்ளஸ் தேவானந்தா தமது கட்சியின் மூத்த உறுப்பினர்களிடம் தெரிவித்துள்ளார். அவரது கட்சி வட்டாரங்கள் இதனைத் தெரிவித்தன.

கருணா தனியாக அரசியல் கட்சியொனறை உருவாக்குவதற்கு ஆலோசனை வழங்கியதுடன் அதற்கு ஆதரவும் வழங்கப்போவதாக முன்னர் பகிரங்கமாகத் தெரிவித்திருந்தார் ஈ.பி.டி.பி. தலைவரும், அமைச்சருமான டக்ளஸ தேவானந்தா. தற்போது புதிய கட்சி ஆரம்பித்திருப்பது பற்றித் தனக்கு கருணா எதுவும் தெரிவிக்கவில்லை என்று டக்ளஸ் அதிருப்தி அடைந்துள்ளார் எனத் தெரியவருகிறது.

இந்தியாவில் தங்கியிருக்கும் ஈ.என்.டி. எல். எவ்.உறுப்பினர்களுடனும் ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கத்தின் (வரதர் அணி) தலைவரான வரதராஜப்பெருமாள் போன்றோருடனும் கட்சி ஆரம்பிப்பது குறித்துக் கருணா குழுவினர் பேச்சுக்களில் ஈடுபட்டிருந்தனர் எனத் தெரியவருகிறது. ஈ.என்.டி.எல்.எவ்வின் சர்வதேச இணைப்பாளராக இருக்கும் ராமராஜ், கருணா அணியின் அரசியல் கட்சியைச் செயற்படுத்தும் நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளார் எனவும் கூறப்படுகிறது.

கருணா அணியினர் கட்சி ஆரம்பிப்பதில் தன்னைப் புறக்கணித்ததுடன், தனது எதிர்தரப்பினருடன் நெருங்கிய உறவுகளை ஏற்படுத்தி இருப்பதால் அமைச்சர் டக்ளஸ் கடுப்பாகி இருக்கிறாராம். ஈ.என்டி.எல்.எவ்.கட்சியிலிருந்து பிரிந்தே டக்ளஸ் ஈ.பி.டி.பி. கட்சியை உருவாக்கியிருந்தார்.

முன்னர் பி.பி.ஸி. தமிழ் ஒலிபரப்புக்குக் கருணாவை நேரடியாகப் பேட்டியளிக்க வைத்து தனிக்கட்சி ஆரம்பிக்கப் போவதாகச் சொல்ல வைத்தவர் டக்ளஸ் தேவானந்தா என்பது குறிப்பிடத்தக்கது.

(எ-க)

## சந்நிதியான் ஆச்சிரம வாராந்த நிகழ்வு

வடமராட்சி,ஒக்.19

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்திவரும் வாராந்த நிகழ்வுவரிசையில் எதிர்வரும் 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் அ.குமாரவேல் பெரியபுராணம் பற்றி சொற்பொழிவாற்றுவார்.

இந்நிகழ்வுக்கான அறிமுகவுரையை ஆ.அருணாசலம் நிகழ்த்துவார். (எ-173)


தவறிவிட்டது

இல.24, மணிக்கூட்டு ஒழுங்கையைச் சேர்ந்த கனகரத்தினம் விஜயகுமார் (விஜயன்) என்பவருடைய சாரதி அனுமதிப்பத்திரம் (LICENSE) மற்றும் முக்கிய ஆவணங்களுடன் பேர்ஸ் ஒன்று நேற்று (18.10.2004) திங்கட்கிழமை யாழ்.ஸ்ரான்லி வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேலுள்ள முகவரியிலோ 59, பிறவுண் வீதியிலுள்ள கீர்த்திகா தொலைத்தொடர்பு நிலையத்திலோ ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (37752)

T.P.021 222 2500, 021 222 6184



திரைப்படக் காட்சி

சுன்னாகம், நாகம்ஸ் திரையரங்கில் நாளை (20.10.2004) புதன்கிழமை

அழகி, நந்தா
திரைப்படக் காட்சி

காலை: 10.30 - அழகி
பிற்பகல்: 2.30 - நந்தா

அன்புடன் அழைக்கின்றோம்.

சமூகவியல் சமூகம், யாழ்.பல்கலைக்கழகம்

(37749)


# மரண அறிவித்தல்கள்

## பொன்னையா மார்க்கண்டு



கரணவாய் மேற்கைப் பிறப்பிடமாகவும் விசுவமடுவை வதிவிடமாகவும் கொண்ட பொன்னையா மார்க்கண்டு அவர்கள் 17.10.2004 இல் சுவிஸில் காலமானார்.

அன்னார் பாமினியின் அன்புக் கணவரும் குகநாதன் (ஜெகன்-வவுனியா), சர்மினி (இயலி), ரகுநாதன், யாதவன் ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சுவிஸில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மன்றான்டி தோட்டம்,
கரணவாய் மேற்கு,
கரவெட்டி.

(சி-38285)
(43-32-13-14)

தகவல்:
சகோதரர்கள்.

## தம்பர் குழந்தைவேலு

(ஓய்வுபெற்ற பொலீஸ் உத்தியோகத்தர்)



கரவெட்டி கிழக்கு, தல்லையப்புலத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பர் குழந்தைவேலு கடந்த ஞாயிற்றுக்கிழமை (17.10.2004) சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் சிவக்கொழுந்துவின் அன்புக் கணவரும் பரமானந்தம் (அமரர்), கிருபராசா (கனடா), விஜயலட்சுமி ஆகியோரின் அன்புத் தந்தையும் பிரதீபன் (லண்டன்), கவிதா, மோகனா (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும் ஜெயபாலா, கோமதி ஆகியோரின் மாமனாரும் சண்முகம், அன்னம், சின்னத்தம்பி, சரவணமுத்து ஆகியோரின் சகோதரரும் வீரவாகு, மாலினி (லண்டன்), பூமணி ஆகியோரின் மைத்துனரும் தாசன், நேசன், மாலா (லண்டன்) ஆகியோரின் பெரியப்பாவும் காயத்திரியின் (லண்டன்) மாமாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.10.2004) செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சோனப்பு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தல்லையப்புலம்,
நெல்லியடி, கரவெட்டி.

(37755)
(32-13-14)

தகவல்:
கு.சிவக்கொழுந்து (மனைவி)

## வைரமுத்து சிவபாலன் கேசவன்



தொட்டிலடி, சங்கானையைச் சேர்ந்த வைரமுத்து சிவபாலன் கேசவன் நேற்று (18.10.2004) திங்கட்கிழமை காலமானார்

அன்னார் யாழ்.மாவட்ட நீதிமன்ற ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் வைரமுத்து சிவபாலன் - இராஜேஸ்வரியின் அன்பு மகனும் யாழ்.ஸ்கந்தவரோதயக் கல்லூரி A/L மாணவன் சிரமணியின் அன்புச் சகோதரனும் திரு. திருமதி செல்வராணி தங்கராசா, திரு.திருமதி கலைவாணி கிருஷ்ணபாலன் (யாழ்.நீதிமன்ற உத்தியோகத்தர்) ஆகியோரின் பெறாமகனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.10.2004) செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனத்துக்காக விளாவெளி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொட்டிலடி,
சங்கானை.

(சி-38284)(32-13-14)

தகவல்:
திரு.திருமதி வை.சிவபாலன்
(தந்தை, தாய்)

## திருமதி இரத்தினம் சரஸ்வதி

பெரியபளை, பளையைப் பிறப்பிடமாகவும் கச்சாய் வீதி, கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினம் சரஸ்வதி நேற்று (18.10.2004) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினத்தின் அன்பு மனைவியும் வெற்றிவேலு, சந்திரமதி (அமரர்), இராசம்மா, கயிலாயபிள்ளை, சிவசுப்பிரமணியம் ஆகியோரின் தாயாரும் கணபதிப்பிள்ளை (அமரர்), நகுலேஸ்வரி, சாந்தநாயகி ஆகியோரின் மாமியாரும் சேகர் (கனடா), சாந்தம், தேவி (கனடா), கீதா (சுவிஸ்), வசந்தன் (கனடா), தாசன் (கனடா), மயூரன் (லண்டன்), யசோ, செந்தூரன், கிருஷாந்தினி (சா.இ.க.), விமலதாசன் (சா.இ.க.) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.10.2004) செவ்வாய்க்கிழமை அவரது தற்காலிக இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற பகல் 2 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக மயானத்துக்கு எடுதது் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தற்காலிக முகவரி:
கச்சாய் வீதி, கொடிகாமம்.
T.P. No.:077-6117070
நிரந்தர முகவரி:
பெரியபளை. பளை.

(37752)(32-13-14)

தகவல்:
இ.சிவசுப்பிரமணியம்.

## சிவஸ்ரீ சொக்கலிங்கக் குருக்கள் பசுபதிநாத ஐயர்

(ஓய்வுபெற்ற அதிபர்; பிரதமகுரு - அளவெட்டி வடக்கு தவளக்கிரி முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்)

பொற்கலம்தம்பை, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் அம்பாள் கோயிலடி, அளவெட்டி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சிவஸ்ரீ சொக்கலிங்கக் குருக்கள் பசுபதிநாத ஐயர் நேற்று (18.10.2004) திங்கட்கிழமை சிவஐக்கியப்பேறடைந்தார்.

இவர் காலஞ்சென்ற சொக்கலிங்கக் குருக்கள்-மாசிலாமணி அம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்ற கதிரமலை-இராசம்மா தம்பதிகளின் மருமகனும் தனலட்சுமியின் அன்புக் கணவரும் மகேசன் (ஆய்வுகூட உதவியாளர், இராமநாதன் கல்லூரி, சுன்னாகம்) அவர்களின் அன்புத் தந்தையும் மாளவிகாவின் அன்பு மாமனாரும் சாம்பவி, வைஷ்ணவி ஆகியோரின் அன்புப் பேரனாரும் காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, நவரத்தினஐயர் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.10.2004) செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அம்பாள் கோயிலடி,
அளவெட்டி வடக்கு, அளவெட்டி.

(37760)(32-13-14)

தகவல்:
ப.மகேசன் (மகன்)

*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.*

வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகு

## முக்கிய அறிவித்தல்

### வெளிவாரிப் பரீட்சைகள்

**கல்வியாண்டு 2001/2002 மற்றும் 2002/2003**

கலை முதற் தேர்வு 2002 & 2003

வணிக முதற் தேர்வு 2002 & 2003

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் மேற்குறிப்பிட்டபடி 2001/2002 மற்றும் 2002/2003 கல்வியாண்டுகளில் பதிவுசெய்த மாணவர்களுக்கான கலை முதற் தேர்வு மற்றும் வணிக முதற் தேர்வுக்கான பரீட்சைகள் இரு கல்வி யாண்டுகளுக்கும் இணைத்து நடத்தப்பட ஒழுங்குகள் மேற்கொள்ளப் பட்டுள்ளபடியால் இரு கல்வியாண்டு மாணவர்களையும் பரீட்சைக்குத் தம்மைத் தயார்ப்படுத்தும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

பரீட்சை நடைபெறும் திகதி, விவரங்கள் பின்னர் பத்திரிகைகளில் அறியத்தரப்படும். மேலதிக விவரங்களுக்கு 021-2223612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்புகொள்ளலாம்.

துணைவேந்தர்.
18.10.2004

(சி-38295)(43-13-14)

## தேவை

1. கட்டட மேற்பார்வையாளர்
   தகைமை: NDT அல்லது அதற்குச் சமமான சான்று உடையவர்.
2. படவரைஞர்
   தகைமை: Auto CAD தெரிந்தவர்கள்.
3. பொது எழுதுவினைஞர்
   தகைமை: க.பொ.த (உ/த) சித்தியடைந்த, கணனி பிரயோக அறிவுடைய பெண்கள்

தகுதியானவர்கள் சுயவிவரங்களை 28.10.2004 இற்கு முன் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

யூரோவில்,
866,பருத்தித்துறை வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(சி-38293)(43-14-13)

## கண்ணீர் அஞ்சலி

### சொக்கலிங்கக் குருக்கள் பசுபதிநாதக்குருக்கள்

**(அளவெட்டி தவளக்கிரி முத்துமாரி அம்மன் ஆலய பிரதமகுரு)**

எமது ஆலயத்தின் பிரதம குருவும், ஆலயத்தை முன்னின்று வழிநடத்தியவருமாகிய ஆலய பிரதம குருக்கள் ஐயா அவர்களின் மறைவினால் பேரதிர்ச்சி அடைந்துள்ளோம். அவரது மறைவு எமது ஆலயத்துக்கும், ஆலய சுற்றாடலுக்கும் மிகப் பெரிய இழப்பாகும்.

அன்னாரது மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொள்வதோடு அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல அன்னையைப் பிரார்த்தித்து நிற்கின்றோம்.

தவளக்கிரி,
அளவெட்டி.

பரிபாலன சபையினரும்,
தேர்த்திருப்பணிச்சபையினரும்.

(37766)(43-13-14)

# நாள் ஒன்றுக்கு 15 ஆயிரம் அ.அட்டைகள் வழங்க நடவடிக்கை

கொழும்பு,ஒக்.19

அடையாள அட்டைகளைத் துரிதமாக வழங்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன்படி ஒருநாளைக்கு 15ஆயிரம் அடையாள அட்டைகளை அச்சிட்டு வழங்குவதற்கான திட்டம் வகுக்கப்பட்டுள்ளது என ஆள்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளர் சி.பி.அபேகோன் தெரிவித்தார்.

துரிதமாக அடையாள அட்டைகளை வழங்குவதன் மூலம் மாதமொன்றுக்கு மூன்று லட்சத்துக்கும் அதிகமான அடையாள அட்டைகளை வழங்குவது என்ற நோக்குடன் ஆள் பதிவுத் திணைக்களம் செயற்படவுள்ளது.

அடுத்தவருடம் ஒக்ரோபர் மாதத்துக்குள் ஆள் அடையாள அட்டைகள் இல்லாதோருககு அவை விநியோகித்து முடிக்கப்படும் என்று தான் நம்புகிறார் என ஆள்பதிவுத் திணைக்கள ஆணையாளர் நம்பிக்கை தெரிவித்தார்.

சுமார் 38 லட்சம் பேருக்கு ஆள் அடையாள அட்டைகள் வழங்கவேண்டியுள்ளது என அரசியல் கட்சிகளால் கூறப்பட்டாலும் சுமார் 25 லட்சம் பேர் மட்டுமே அடையாள அட்டையின்றி இருக்கின்றனர் எனவும் திணைக்களத்தால் தெரிவிக்கப்பட்டது. வடக்கு - கிழக்கு மாகாணத்தில் மட்டும் 11 லட்சம் பேர் அடையாள அட்டையின்றி இருக்கின்றனர் என்று புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

(எ-க)

THE ROYAL COLLEGE OF JAFFNA
SPOKEN ENGLISH
BY : VIGNESWARAN ARCHERY
(DIP. IN ENGLISH AND SCIENCE)
426(304), K.K.S.RD, JAFFNA.
BLACK ROAD, CHANKANAI.
(37763)

**ராஜா** யாழ்ப்பாணம்

இப்பொழுது இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடாக ரவிகிருஸ்ணா, சோனியா அகர்வால் நடிப்பில்

**G/7 ரெயின்போ காலனி** (பிலிம்)

காட்சிகள்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
ரிக்கெட் முற்பதிவு செய்துகொள்ளலாம். (சி-38041)

**நாகம்ஸ் சினிமா** சுன்னாகம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடாக ஸ்ரீகாந், ஸ்னேகா மற்றும் பலர் நடிப்பில்



**போஸ்** காட்சி நேரம் : 11.00, 3.00, 7.00, 10.00 (பு.நே) (C-37740)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை

அர்ஜுன் நடித்த

**அரசாட்சி** (ரீல்ஸ்)

காட்சி நேரம்:
11.00, 2.45, 6.00
(புதியநேரம்)

**வெற்றி சினிமா** பண்டத்தரிப்பு

விஜய். ஜோதிகா. கிரண் நடிப்பில்

**திருமலை** (ரீல்ஸ்)



காட்சிகள் தினசரி 3.00, 7.00
சனி. ஞாயிறு 11.00, 3.00, 7.00 (பு.நே)
(சி-37902)

# ஒரு வருட நினைவுகளுடன்...



தோற்றம்:— 23 — 02 — 1949
மறைவு:— 30 — 10 — 2003

அமரர்

**நல்லையா தளையசிங்கம்**

(உரிமையாளர், இராசமணி களஞ்சியம்,
கோண்டாவில்)

அன்புடனும் பண்புடனும் எம்மை வளர்த்த
அன்புத் தந்தையே !
நீர் மறைந்து இன்று ஆண்டு ஒன்றுதான்
ஆனாலும்
ஆறவில்லையே எம் துயரம் இன்றும்
என்றும் உம் நினைவுகளுடனே வாழ்கின்றோம்.

*ஆலடி வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.*

மனைவி, பிள்ளைகள்.

(37765)(43-14-13)

**சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306B**

We Serve பிராந்தியம் -10 வலயம் -2 லயன்ஸ் கழகங்கள்

**இணைந்து நடத்தும்**

*தொழில்சார் வழிகாட்டல் பயிற்சிப் பட்டறை*

## CAREER GUIDENICE - WORK SHOP

G.C.E A/L பரீட்சைப் பெறுபேறுகள் வெளிவந்துவிட்டன. பல்கலைக்கழக அனுமதி பெற்றவர்கள் மகிழ்ச்சியில் உள்ளார்கள். துரதிர்ஷ்டவசமாக அனுமதி கிடைக்காதவர்கள் சோர்வடைந்துள்ளனர்.

**வேண்டாம்! இந்தச் சோர்வும் கவலையும்!!**

இங்குள்ள தொழில்சார் கற்கை நெறிகள், கல்விசார் கற்கை நெறிகள் பற்றிய பூரண விளக்கம் பெறத் திரண்டுவருக!

*அனுமதி இலவசம்.*

பங்குபற்றுவோருக்கு சான்றிதழ்கள்

**இடம்:** யாழ்.மத்திய கல்லூரி, மானிப்பாய் இந்துக்கல்லூரி.

**காலம்:** நாளை (20.10.2004) புதன்கிழமை காலை 8 மணிமுதல்

வள ஆளணியினர்

★ யாழ்.பல்கலைக்கழகம்
PROF.N.ஞானகுமாரன்
(பணிப்பாளர் - தொழில்சார் வழிகாட்டல்)

★ யாழ்.தொழில் நுட்பக்கல்லூரி
திரு.M.அலோசியஸ் (உப அதிபர்).
திரு.V.சத்தியானந்தன் (விரிவுரையாளர்).

★ யாழ்.உயர் தொழில்நுட்ப நிறுவனம்
திரு.K.கதிரவேலு (விரிவுரையாளர்)
திரு.R.திலகரட்ணம் (விரிவுரையாளர்)

★ யாழ்.திறந்த பல்கலைக்கழகம்
திரு.ஞானேந்திரன்
(M.Se.Eng-பிராந்திய முகாமையாளர்).

ZONE CHAIRMAN திரு. V.S. சொக்கலிங்கம் (ஜே.பி) அவர்களது வழிகாட்டலில், மாவட்டத்தலைவர் திரு. R.இராசதுரையின் ஆதரவுடன் இப்பட்டறை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அனுசரணையாளர்கள்:-

R.செல்வநாதன் (தலைவர் - கொக்குவில்)
S.சிவராஜேஸ்வரன் (தலைவர் - மானிப்பாய் கோவில்பற்று)
K.விஜயரட்ணம் (தலைவர் - நல்லூர்)
V.K.விஜயரட்ணம் (தலைவர் - வட்டுக்கோட்டை)

(சி-38296) (43-13-14)

- ஏற்பாட்டாளர்.

## கண்ணீர் அஞ்சலி

### கந்தையா கனகரத்தினம்



எமது குடும்ப நண்பரும் உடன் பிறவாச் சகோதரரும், காவேரி சில்க்ஸ், லிட்டில் இந்தியன் பெஷன் ஆரம்பகால ஊழியருமாகிய கந்தையா கனகரத்தினம் அகால மரணமடைந்த செய்தி கேட்டு அதிர்ச்சியும், ஆறாத் துயரும் அடைகின்றோம். அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

உரிமையாளர்களும், ஊழியர்களும்,
குடும்பத்தினரும்.
காவேரி சில்க்ஸ்,
லிட்டில் இந்தியன் பெஷன்,

(37767) (43-13-14)

## மரண அறிவித்தல்கள்

### N.செந்தூரன்

**(Tecconsole உரிமையாளர்)**



கரணவாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, பம்பலப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட N.செந்தூரன் அவர்கள் நேற்று (18.10.2004) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் ராதாலட்சுமியின் அன்புக் கணவரும் விதுரபிமன், காலஞ்சென்ற பரீட்சித் ஆகியோரின் அன்புத் தந்தையும் கரணவாய் தெற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற அமரர் நடேசலிங்கம் (வசாவிளான்), திருமதி பொன்னம்மா நடேசலிங்கம் ஆகியோரின் அன்பு மகனாரும் மகாலட்சுமி முருகேசு ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் ஜயரத்ன மலர்ச்சாலையில் 19,20 ஆம் திகதிகளில் பார்வைக்கு வைக்கப்பட்டு 20 ஆம் திகதி மாலை 4.00 மணியளவில் பொரல்லை இந்துமயானத்தில் இறுதிக்கிரியைகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

*49B 1/1, Moor Road,
Colombo - 06.
T.P.:2360805*

(சி-38294)(43-14-13)

தகவல்:
சி.வா.ராமச்சந்திரன்.

### கந்தையா கனகரத்தினம்

**(காவேரி சில்க்ஸ் ஆரம்பகால ஊழியர்)**



அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கனகரத்தினம் அவர்கள் நேற்று (18.10.2004) திங்கட்கிழமை அகாலமரணமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அரியாலை.*
(37769)(43-14-13)

தகவல்:
ப.திருநாதன்.
(லிட்டில் இந்தியன் பெஷன்).

# புகலிடம் கொடுத்த நாடுகள் போ என்பதற்கு முன்னர் வா என அழைப்பதற்கு ஒரு நாடு உருவாகவேண்டும்!

## புலிகளின் பிரமுகர் பாலகுமாரன் பரிஸில் தெரிவிப்பு

பரிஸ்,ஒக்.19

போ என்று சொல்லி புலம்பெயர்ந்த மக்களை அவர்களுக்குப் புகலிடம் கொடுத்த நாடுகள் நாள் குறிப்பதற்கு முன் வா என்று சொல்ல எங்களுக்கென்று ஒரு நாட்டை உருவாக்கவேண்டும் என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் கா.வே.பாலகுமாரன் தெரிவித்துள்ளார்.

பரிஸ் நகரத்தில் நேற்றுமுன்தினம் மாலை நடைபெறற நினைவெழுச்சி நாள் நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றிய அவர், சமாதான காலம் என்பது உலகிலுள்ள எல்லா விடுதலை இயங்கங்களுக்கும் சோதனைக் காலமாக இருந்ததென்றும், அந்த சோதனைக் காலத்தைக்கூட சாதனைக்காலமாக மாற்றியவர்கள் நாங்களே என்றும் தெரிவித்தார்.

எமது தேசியத் தலைவரின் மதிநுட்பத்தைப் பார்த்து இன்று உலகமே வியந்து நிற்கின்றதென்றும், பேசி வெல்வதற்கும், பேசாமல் வெல்வதற்கும் அவர் தயாராக நிற்பதைப் பார்த்து என்ன செய்வதென்று தெரியாமல் எதிரிகள் கலங்கிப்போயுள்ளார்கள் என்றும் குறிப்பிட்ட அவர், இப்போதுள்ள அரசியல் சூழ்நிலை பற்றியும், நாட்டின் தேவைகள் பற்றியும் விரிவாக எடுத்துக் கூறினார்.

இந்த நிகழ்வில் உணர்வுபூர்வமான உரையொன்றை ஆற்றிய புலிகளின் குரல் பொறுப்பாளர் தமிழன்பன், ஊடகங்கள் வாயிலாகப் புலம்பெயர்ந்த மக்களின் உணர்வுகளைச் சிதைப்பதற்கு மேற்கொள்ளப்படும் சதி முயற்சி பற்றியும் விரிவாக எடுத்துக் கூறினார்.

மூவாயிரத்துக்கும் அதிகமான மக்கள் கலந்துகொண்ட இந்த நிகழ்வில், தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களின் பன்முக ஆற்றலையும், நுண்மதித் திறனையும் வெளிப்படுத்தும் 'காலத்தை வென்றவன்' என்னும் நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது. (க-3)

## அரியாலை விபத்தில் குடும்பஸ்தர் மரணம்

யாழ்ப்பாணம்,ஒக்.19

அரியாலை, புங்கன்குளம் சந்திக்கு அண்மையில் ஏ-9 வீதியில் நேற்று பிற்பகல் 2மணியளவில் இடம்பெற்ற மினிபஸ் - மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

மோட்டார் சைக்கிளைச் செலுத்திவந்தவரான அரியாலை வில்வந்தெரு வீதியைச் சேர்ந்த கே.கனகரத்தினம் (வயது 54) என்ற குடும்பஸ்தரே இச்சம்பவத்தில் உயிரிழந்தவராவார்.

முகமாலையில் இருந்து யாழ். நகர் நோக்கி வந்தகொண்டிருந்த மினிபஸ்ஸும், எதிர்த்திசையில் சென்றுகொண்டிருந்த மோட்டார் சைக்கிளுமே விபத்துக்குள்ளாகின.

படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்ட பிரஸ்தாப நபர், சிகிச்சை பலனளிக்காது அங்கு மரணமானார். விபத்து நடந்தவுடன் மினிபஸ் சாரதியும் நடத்துநரும் அங்கிருந்து தலைமறைவாகிவிட்டனர் என்று கூறப்பட்டது.

விபத்தையடுத்து சம்பவ இடத்தில் கூடிய பொதுமக்கள் மினிபஸ்ஸை அடித்துச் சேதப்படுத்தினர். (4-ரி-31)

## பேச்சை ஆரம்பிக்கும்படி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டும் என வேண்டினார்.

★ அமைதி முயற்சிகளுக்குத் தென்னிலங்கையில் எதிர்க்கட்சிகள் தரும் நிபந்தனையற்ற ஆதரவைச் சரியாகப் பயன்படுத்தும்படி அரசை வற்புறுத்துங்கள்.

★ அமைதி முயற்சிகள் இழுத்தடிக்கப்படுவதாலும், தமிழ் மக்களின் அவசர, அத்தியாவசியத் தேவைகள் நிறைவுசெய்யப்படாததாலும் அமைதி முயற்சிகள் தொடர்பாகத் தமிழ் மக்களின் மனதில் பெரும் அவநம்பிக்கையும், அச்சமும், பீதியும் ஏற்பட்டுள்ளன. அவற்றைக் களையும் விதத்தில் ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்க அரசை வற்புறுத்துங்கள்.

★ அரசு-புலிகள் புரிந்துணர்வு உடன்படிக்கையில் இணக்கம் காணப்பட்ட பல விடயங்கள் அதற்கான காலம் கடந்தும் இன்றும் நிறைவேற்றப்படாமல் இழுபடுகின்றன. இது புரிந்துணர்வு உடன்படிக்கையின் எதிர்காலத்தைக் கேள்விக்குறியாக்கியுள்ளது. ஆகவே, புரிந்துணர்வு உடன்பாட்டில் இணக்கம் காணப்பட்ட விடயங்களின் அடிப்படையில் தனக்குள்ள கட்டுப்பாட்டை நிறைவேற்றும்படி அரசுக்கு அழுத்தம் கொடுங்கள்.

★ ஆயுதக்குழுக்களும், சமாதான விரோதக் குழுக்களும் கட்டுமீறிச் செயற்படுவதால் யுத்த நிறுத்தத்திற்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இத்தகைய குழுக்களை அடக்கிவைக்க நடவடிக்கை எடுக்கும்படி அரசுத்தரப்பை வலியுறுத்துங்கள்.

- இப்படி ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதி வெளிவிவகார அமைச்சரை நேரில் கோரினார் சு.ப.தமிழ்ச்செல்வன்.

முன்னதாக நேற்று பெல்ஜியம் நாட்டின் வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகளோடு தமிழ்ச்செல்வன் பேச்சு நடத்தினார். நேற்று மாலையில் அவர் ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்திக்கவிருந்தார்.

இன்று மாலை தமிழ்ச்செல்வன் தலைமையிலான புலிகள் குழுவினர் நோர்வே செல்கிறார்கள்.

நாளைமறுதினம் நோர்வே பயணத்தை முடித்துக்கொண்டு அவர்கள் சுவிடன் புறப்படுவார்கள். (க-3-4)

## சந்தனமரக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிரடிப்படையினர் வழிமறித்தனர் என்றும் அதன்பின் இருதரப்பின ருக்கும் இடையில் 20 நிமிடங்கள் மோதல் இடம பெற்றது எனவும் இந்த மோதலில் வீரப்பனும் அவரது மூன்று சகாக்களும் கொல்லப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

வீரப்பனின் சடலம் எடுத்துச்செல்லப்பட்டு தர்மபுரி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (3)

## மட்டக்களப்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

24) என அடையாளம் காணப்பட்டுள்ளார். தடுத்துவைக்கப்பட்டிருந்த பின்னர் இவர் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கலாம் எனப் பொலீஸார் சந்தேகம் தெரிவித்தனர். மட்டக்களப்பு நீதிவான ஏ.எச்.எம். அஜ்மீர் சம்பவ இடத்திற்கு நேரில் சென்று சடலத்தைப் பார்வையிட்டு மேலதிக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பொலீஸாருக்கு உத்தரவிட்டார்.

இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு அதிகாரிகளும் சம்பவ இடத்திற்குச் சென்று சடலத்தைப் பார்வையிட்டனர். உயிரிழந்த இளைஞர் முன்னர் புலிகளின் அலுவலகம் ஒன்றில் பணிபுரிந்தவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.(க-3)

## நிமலராஜன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குருஷேத்திர மையத்திலிருந்து தன்னின மக்களின் உரிமைக்காகத் தனது பேனாவை ஆயுதமாக்கி உறுதியாகக் குரல்தந்த ஊடகவியலாளன் மயில்வாகனம் நிமலராஜன் படுகொலை செய்யப்பட்டு இன்றுடன் 4வருடங்கள் பூர்த்தியாகின்றன. ஆயினும், இன்றுவரை குற்றவாளிகள் சட்டத்தின்முன் தண்டிக்கப்படாமலும், சட்டமா அதிபரது பணிப்பிற்காகக் காத்திருப்பதாகவும், கூறி ஏதேதோ காரணங்களால் விசாரணைகள் இதுவரை முடிவெதனையும் கண்டிருக்கவில்லை.

இத்தகைய சூழலில் வடக்கு - கிழக்கில் ஊடகவியலாளர்கள் மீதான அச்சுறுத்தல்களும் படுகொலைகளும் மீண்டும் பெருமளவில் அதிகரித்து வருகின்றன. கிழக்கில் ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசனின் படுகொலைச்சம்பவமும் அத்துடன் அங்குள்ள ஊடகவியலாளர்கள் மீதான அச்சுறுத்தல்களும் இதற்கு நல்லதோர் உதாரணம்.

இன்று இடம்பெறவுள்ள இவ் எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்துகொள்ளுமாறு அனைத்துப் பத்திரிகையாளர்களிற்கும் அழைப்பு விடுக்கின்றோம் - என்றுள்ளது. (3)

## ஈ.பி.ஆர்.எல்.எவ்.கட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த உத்தரவு காரணமாக கட்சியின் இரு பிரிவினருமே கட்சி சார்பில் உத்தியோக பூர்வமாகச் செயற்படமுடியாத நிலை நிலவி வந்தது. இந்த நிலைமை காரணமாக இரு தரப்பினரும் ஈ.பி.ஆர்.எல்.எவ் சுரேஸ் அணியினரும் ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் வரதர் அணி என்றும் செயற்பட்டு வந்தனர். இப்போது கடந்த புதனன்று கொழும்பு மாவட்ட நீதிமன்றம் மேற்படி இடைக்காலத் தடையுத்தரவை நீக்கிவிட்டது. இதனால் சுரேஷ் பிரேமச்சந்திரனும் அவரின் அணியினரும் ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் பெயரில் இயங்குவதற்கு சட்டரீதியாக எந்தத் தடையும் இல்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களுக்கு எதிராக வரதர் அணியினர் ஐவரும் தாக்கல் செய்துள்ள மூல வழக்கை விரும்பமானால் அவர்கள் தொடர்ந்து நடத்தலாம். அவ்வழக்கு விசாரணைகளின் முடிவில் தீர்ப்பு சுரேஷ் பிரமேச்சந்திரன் தரப்பினருக்கு மாறாக வந்தாலன்றி அவர் தொடர்ந்து ஈ.பி.ஆர்.எல்.எவ் செயலாளர் நாயகமாகச் செயற்படுவதை வேறு வழியில் தடுக்க முடியாது என்றும் சுட்டிக்காட்டப்படுகிறது.

இதேசமயம் -

ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியிலிருந்து வரதராஜப் பெருமாளை நீக்கி சுரேஷ் பிரேமச்சந்திரனும் ஏனையோரும் எடுத்த நடவடிக்கைக்கு எதிராக வரதராஜப் பெருமாள் சார்பில் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் ஒரு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அந்த வழக்குத் தொடர்பாக வரதராஜப் பெருமாளைக் கட்சியிலிருந்து நீக்கியதற்கு இடைக்காலத் தடைவிதித்து கொழும்பு மாவட்ட நீதிமன்றம் ஓர் உத்தரவு வழங்கியிருந்தது.

ஆனால், இந்த வழக்கின் கடந்த நான்கு, ஐந்து தவணைகளுக்கு வரதராஜப்பெருமாளோ, அவரது சார்பில் சட்டத்தரணிகளோ ஆஜராகவில்லை. அதனால் அந்த வழக்கையே கொழும்பு மாவட்ட நீதிமன்றம் இரண்டு மாதங்களுக்கு முன்னர் தள்ளுபடி செய்துவிட்டது. எனவே, வரதராஜப்பெருமாள் கட்சியிலிருந்து நீக்கப்பட்டதற்கு எதிராகவும் இப்போது சட்ட நடவடிக்கை ஏதும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மேற்படி சட்டச் சிக்கல்கள் தீர்ந்துவிட்டதால் ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சியின் செயலாளர் நாயகமாக சுரேஷ் பிரேமச்சந்திரனை தேர்தல் ஆணையாளரும் இனிமேல் ஏற்றாகவேண்டும் என சட்டத்துறை வட்டாரங்கள் தெரிவித்தனர். (க-3)

## பேச்சு மேசைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனுசரணைக்குழுவின் மற்றோர் அங்கத்தவரும், நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சருமான விடர் ஹெல்கிஸன் கடந்த வார இறுதியில் இந்தியாவுக்குச் சென்று இலங்கை சமாதான முயற்சிகள் குறித்து அந்நாட்டு அதிகாரிகளோடு விரிவாகக் கலந்துரையாடியிருந்தார். இத்தொடரில் நேற்றுக் காலை பிரிட்டிஷ் அதிகாரியோடு நோர்வேக் குழுவினர் பேசியிருந்தனர்.

அமெரிக்கா, கனடா, இந்தியா, பிரிட்டன் ஆகிய மேற்குலக வல்லரசுகளும் பிராந்திய வல்லரசும் இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாகவும், சமாதான முயற்சிகள் தொடர்பாகவும் கொண்டுள்ள கருத்துக்களை எரிக் சொல்ஹெய்மும், ஹான்ஸ் பிரட்ஸ்கரும் நேற்றைய சந்திப்பில் பாலசிங்கத்துக்கு விளக்கினர்.

விடுதலைப் புலிகளின் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனைக்கு மாற்றாக அரசுத் தரப்பில் இருந்து யோசனைகள் முன்வைக்கப்படவிருப்பதாக வெளியான செய்திகள் குறித்து பாலசிங்கம் இச்சந்திப்பில் நோர்வேத தரப்புடன் வினவினார்.

ஆனால், அப்படி யோசனை ஏதும் திட்டம் அரசுக்கு இருப்பதாகத் தங்களுக்குத் தெரியவில்லை என்று நோர்வே அனுசரணையாளர்கள் தெரிவித்தனர்.

நேரடிப்பேச்சு ஆரம்பமானதன் பின்னர் பேச்சு மேசையில் அரசுத்தரப்பின் யோசனைகள் ஏதும் வைக்கப்படக்கூடும் என்ற நிலைமை இருப்பதாக அனுசரணைத் தரப்பினர் பாலசிங்கத்துக்குத் தெரிவித்தனர் என அறியவருகிறது.

விடுதலைப் புலிகள் முன்வைத்த இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனையின் அடிப்படையில் மட்டுமே பேச்சுக்களை ஆரம்பிக்க முடியுமென்பதை பாலசிங்கம் நோர்வேத் தரப்பினருக்குத் திட்டவட்டமாகத் தெரிவித்தார் என அறியவருகிறது. (க-3-4)

## இருநாட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களை இக்குழு நேற்றுமாலை சந்தித்துக் கலந்துரையாடியது.

பாதுகாப்பு அமைச் சுச் செயலர், முட் படைத் தளபதிகளு டன் இக்குழு இன்று முதல் பேச்சுக்களை நடத்தும்.

பாதுகாப்பு ஒப்பந்தம், பலாலி விமான நிலையத்தை நவீனமயப்படுத்தல், ஆயுத உதவி ஆகிய மூன்று விடயங்கள் குறித்து இப்பேச்சுக்களில் விரிவாக ஆராயப்படவிருக்கின்றன.

இக்குழு நடத்தும் பேச்சுக்களில் எட்டப்படும் முடிவுகள் இந்திய உயர்மட்டத்துக்குச் சமர்ப்பிக்கப்படும் என்றும் -

அதனடிப்படையில் பாதுகாப்பு ஒப்பந்தம் அடுத்த சில வாரங்கள் கைச்சாத்திடப்படலாம என்றும் - தெரிவிக்கப்பட்டது. (3)


## இந்திய பரம்பரை ஜோதிடர்



அருள்வாக்கு
அம்பிகா அம்மா
மீண்டும் யாழ்.புண்ணிய பூமிக்கு வருகை.
கைரேகை, ஜாதகம் ஒவ்வொரு நாளும் பார்க்கப்படும்.
உங்களுக்கு எந்தவகையான பிரச்சினைகள் ஆனாலும் ஜாதக ரீதியாக கிரகதோசம் நீக்கி நீங்கள் வாழ்க்கையில் வெற்றி பெற இன்றே
அருள்வாக்கு அம்பிகா அம்மாவை நேரில் சந்திக்கவும்.
28.10.2004 வரை மட்டுமே.
சந்திக்கும் இடம்: அருள்வாக்கு அம்பிகா அம்மா
121, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(ஸ்ரீ முருகன் ஜுவல்லர்ஸ் அருகில்) (37768)(38-17-13)

BOND INSTITUTE
Jaffna
A/L
PHYSICS
□ PAPER CLASS
□ REVISION CLASS
□ THEORY CLASS
○ 2005 Batch PROP
○ 2006 Batch HEAT
By: P.T.Mohanrajh B.Sc.
நடைபெறுகின்றன.
(37741)(38-17-13)

## விநியோகஸ்தர்களும், முகவர்களும் தேவை

இலங்கையில் Hotel, Restaurant, Laundry மற்றும் ஏனைய வர்த்தக நிலையங்களுக்கான உபகரணங்களின் இறக்குமதியிலும் சந்தைப்படுத்தலிலும் முன்னணியில் திகழும் CONFIFI HOTEL SUPPLIES Ltd இற்கு வடகிழக்கு பிராந்தியத்தில் விநியோகஸ்தர்கள் தேவை. எங்களிடம் Hotel, Restaurant, Laundry, Bakery, Ice Cream Parlour ஆகியவற்றுக்குத் தேவையான சகல உபகரணங்களும், குளிர்சாதனப் பெட்டிகளும், Detergent வகைகளும் மற்றும் பல்வேறு உபகரணங்களும் உள்ளன.
மேலதிக விபரங்களுக்கு: Confifi Hotel Supplies Ltd
33, St. Machaels Road, Colombo - 03.
வாரநாள்களில் காலை 8.30 மணிமுதல் மாலை 5.00 மணி வரை
தொடர்பு:- T.H.ANSAR (Director Administration)
0112 - 333320 - 0112 - 333323 DirectLine - 0115 - 335978
(C-38278)(38-17-13)

வடமராட்சி மாணவர்களிற்கு ஓர் அரிய சந்தர்ப்பம்......
அமெரிக்காவின் Sun Microsystems, இந்தியாவின் TATA Infotech ஆகிய உலகத்தரம்வாய்ந்த கணனி நிறுவனங்களின் சான்றிதழ் பெற்ற,
பேராதனை, மொறட்டுவ பல்கலைக்கழகங்களில் பட்டம்பெற்ற பொறியியலாளர்களினால்
கணனி விளையாட்டுக்களை விளையாடி மகிழும் Computer Game Zone ஐ வடமராட்சியில் அறிமுகப்படுத்திய ஜெயந்தா கணனிப்பூங்காவில்
இம்மாதம் 23ம் திகதி சனிக்கிழமை முதல் புதிய கணனி வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.
சிறுவர்களிற்கு Certificate for Kids in Computing
வளர்ந்தோரிற்கு Diploma in Office Automation மற்றும் Diploma in Hardware Engineering
ஜெயந்தா கணனிப்பூங்கா
75/22 தும்பளை வீதி, சிவன் கோவிலடி,பருத்தித்துறை.
தொலைபேசி : 077 7482339
Jeyantha Computer Park
75/22 Thumpalai Road, Sivankovilady,Point Pedro.
Phone : 077 7482339

Computer Classes
Computer Assisted Learning(CAL)
Self Practicals
Computer Games
Type Setting
Printing
Scanning
Photo Editing
CD Writing
Computer Repairing and Maintenance
Computer & Peripheral Sales


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.10.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.